# தேனகம்

முத்தமிழ் விழாச் சிறப்புமலர் - 2016-2017

பிரதேச கலாசாரப்பேரவை,
பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு

# தேனகம்

இருபத்து மூன்றாவது ஆண்டு முத்தமிழ் விழாச் சிறப்புமலர்

வெளியீடு

**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**

**மண்முனை வடக்கு - மட்டக்களப்பு**

**2016-2017**

தலைவர்
**திரு.கு.குணநாதன்**
பிரதேச செயலாளர்

செயலாளர்
**திருமதி.த.ஜெயமாறன்**
கலாசார உத்தியோகத்தர்

**பேரவை உறுப்பினர்கள்**

திருமதி.சு.சக்கரவர்த்தி
திரு.க.கணேசானந்தம்
திரு.இ.பாக்கியராசா
திரு.கதிர்பாரதிதாசன்
திருமதி.தி.ஹரிதாஸ்
திரு.எஸ்.சந்திரகுமார்
திருமதி.ம.மகேந்திரன்
திருமதி.சு.வேதநாயகம்
திருமதி.ம.சிவஞானசோதிகுரு
திரு.எ.பிரியகாந்தன்
திரு.வி.மைக்கல்கொலின்
திரு.ஆர்.ரவீந்திரமூர்த்தி
திருமதி.சா.மதனகுமார்
திருமதி.த.ஜெயந்
திருமதி.ரி.பி.தனுஷாந்
திரு.எஸ்.பாக்கியநேசன்


**மண்ணில் எம் கலைகளைக்
கண்ணென மதிப்போம்**


**இருபத்து முன்றாவது ஆண்டு
முத்தமிழ் விழாச் சிறப்புமலர்**

அட்டைப் படம்
**சி.ரவீந்திரன்**

கணனி வடிவமைப்பு
**த.சங்கர்**

அச்சுப்பதிப்பு
**வணசிங்கா பிறிண்டர்ஸ்,**
126/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**வெளியீடு**
**பிரதேச செயலக கலாசாரப்பேரவை**
**மண்முனை வடக்கு - மட்டக்களப்பு**
**2016-2017**

அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்கு பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும் முத்தமிழ் விழா சிறப்பு மலர் "தேனகம்" எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மண்முனை வடக்கு பிரதேச செயலகமானது தொடர்ந்தேர்ச்சியாக பிரதேச கலாசார நிகழ்ச்சிகளை நடத்துவதுடன், தொடர்ந்தேர்ச்சியாக "தேனகம்" சஞ்சிகையினை வெளியிட்டு எமது கலை, கலாசார, பாரம்பரிய விடயங்களை ஆவணப்படுத்திய செயலகம் என்பதை அறிவேன். அந்த வகையில் இவ்வாண்டு வெளிவருகின்ற "தேனகம்" மட்டுமாநகரின் மேலும் பல பரிணாமங்களை மக்கள் முன் பதிவுகளாக்கும் என்பது திண்ணம்.

மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரின் பெருமைகளை எடுத்தியம்பும் "தேனகம்" எனும் மலர் மட்டக்களப்பு நகரத்தின் மாண்மியங்களையும் பாரம்பரிய, கலாசார விழுமியங்களையும் எடுத்தியம்புவது பாராட்டுக்குரியது. ஒரு பிரதேசத்தின் கலைஞர்கள், அறிஞர்கள், பண்டிதர், பாமரர், இளைஞர், முதியோர் ஆகிய பல தரத்தினரதும் உள்ளக்கிடக்கைகளையும், மன எழுச்சிகளையும் வெளிக்கொணரும் ஆவணமாகவே இம்முத்தமிழ் விழா நூல் வெளியீடு அமையும் என்பது தெளிவு.

எனவே இந்நூல் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர், அலுவலக ஊழியர்கள், நூல் வெளியீட்டுக் குழுவினர் மற்றும் கலாசார பேரவை உறுப்பினர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மா.உதயகுமார்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

முன்னாள் அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் இவ்வருடம் நடாத்தப்படவுள்ள முத்தமிழ் விழாவின் பொருட்டு வெளிவரும் "தேனகம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மனநிறைவடைகின்றேன்.

இப்பிரதேச மக்களின் வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம் சார்ந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்படும் இப்பணியுடன் நிலைபேறான கலாசார விழுமியங்கள் பேணும் நடவடிக்கைகளினூடாக மாறிவரும் உலக நடப்புகளிற்கேற்ப பொருளாதார முன்னேற்றத்தையும் இணைத்ததான எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய தேவைப்பாடுகளையும் கருத்திலெடுத்தல் சாலச்சிறந்தது.

எனவே பல்வேறு தனித்திறமைகளைக் கொண்ட கலைஞர்களின் கலை இலக்கிய பணிகளையும் அவர்களின் சுய ஆற்றல்களையும் உள்ளக் கிடக்கைகளையும் ஆவணப்படுத்தும் முகமாக அவர்களது படைப்புகளைத் தாங்கிவரும் "தேனகம்" எனும் மலர் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளருக்கும் பேரவையின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இம்மலர் வெளியீடு சிறந்த ஒரு மலராக மிளிர வேண்டும் என்று எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்,**
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

ஆறும் கடலும் சூழ களனிகளையும் உள்ளடக்கிய இம்மட்டக்களப்பு மாவட்டம் கலைஞர்கள் பலரை தன்னுள் வைத்திருப்பதன் இரகசியத்தை இங்கு பிரதேச செயலாளராக கடமையேற்ற பின்பே என்னால் ஊகிக்கக் கூடியதாயிருந்தது. இயற்கையுடன் ஒன்றிய சூழல் என்பது ஒரு கலைஞனுக்கு கிடைக்கும் ஊக்க மருந்தைப் போன்றது. அந்தவகையில் இக்கலைஞர்களுடன் இணைந்து வேலை செய்யும் சந்தர்ப்பத்தையும் மற்றும் இருபத்து மூன்றாவது மலர் என்ற பெருமையைத் தாங்கி வரும் இத்தேனகம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையுமிட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

தற்காலத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் நாளுக்கு நாள் வளர்ந்து மக்கள் சமூகத்தை தன்பால் கவர்ந்திழுத்தாலும் கலையும், இலக்கியமும் பழமையும் மாறாது, புதுமையையும் புறக்கணிக்காது தன்போக்கில் சற்றும் தளராது வெற்றி நடைபோட்டு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதை நாம் எல்லோரும் காணக்கூடியதாயுள்ளது. எனினும் இக்கலை அம்சங்களை தற்போதைய சூழலில் ஆவணப்படுத்தல் என்பது காலத்தின் தேவை என்பது மட்டுமன்றி இன்றியமையாததாகவும் உள்ளது. எனவே தான் இதனை கருத்திற் கொண்டு இம்முறை கலைஞர்களின் நினைவுப் பதிவு மற்றும் கட்டுரைகள், கவிதைகள் எனப் பல விடயங்களை சீதூக்கி சுமந்து வந்து இம்மலர் மலரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்மலர் எதிர்கால இளம் சந்ததியினருக்கு சிறந்த ஆவணமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே இதன் உள்ளடக்கம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மலர் வெளிவர உழைத்த எமது கலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கு மனங்கனிந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன், இது தொடர்ந்தும் வெளிவருவது காலத்தின் தேவை என்பதை உணர்ந்தவனாய், இம்மலர் தொடர்ந்தும் வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.கு.குணநாதன்,**
பிரதேச செயலாளரும்,
கலாசார பேரவைத் தலைவரும்
பிரதேச செயலகம், மண்முனை வடக்கு.

# வெளியீட்டுரை

எமது மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் இருபத்து மூன்றாவது முத்தமிழ் விழாவுக்கான தேனகம் மலர் இம்முறையும் சிறப்பான முறையில் அனைவரினதும் கரம் தழுவ காத்து நிற்கின்றது. எமது எதிர்கால சமூகத்தின் தேவை கருதியே இதன் உள்ளடக்கம் தீர்மானிக்கப்பட்டது. அந்தவகையில் "கலைஞர்களின் நினைவுப்பதிவு" என்னும் புதிய விடயத்தை தன்னகத்தே ஏந்தி மலர காத்து நிற்கும் இம்மலரில், எம்மால் பேசப்பட்ட கலைஞர்களை விட பேசப்படாத கலைஞர்களும் இருக்கவே செய்கின்றனர். இம்முறை எமது கலாசார பேரவையினர் மேற்கொண்டுள்ள இக்கன்னி முயற்சி எதிர்காலத்திலும் தொடரும் என்பதுடன், சமூகத்தின்பால் பேசப்படாத பல கலைஞர்களையும் எதிர்காலங்களில் உள்வாங்க வேண்டும் என்ற ஆதங்கத்துடனேயே இம்முயற்சியில் நாம் இறங்கியுள்ளோம். இது எதிர்கால இளம் சந்ததியினருக்கு ஒரு சிறந்த ஆவணப்படுத்தலாக அமைய வேண்டும் என்பதே எமது பேரவையின் அவா.

இதனை விட இளந்தலைமுறையினரை எழுத்துத் துறையில் ஊக்குவிக்கும் நோக்குடன் எமது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், எமது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட கவிதை பயிற்சிப் பட்டறையில் இருந்து கிடைத்த அறுவடைகள் சில இம்மலரில் இடம்பெறுகின்றது. இது மாணவர்களுக்கு ஒரு களமாக அமையும் என்பதுடன், தொடர்ந்தும் அவர்களை எழுதத் தூண்டும் சிறந்த ஊக்கியாகவும் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதனைவிட கட்டுரைகளும், போட்டியில் வெற்றி பெற்ற ஆக்கங்களும் இம்மலரை மேலும் அலங்கரிப்பனவாக உள்ளன. இம்முறை சிறப்பான முறையில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள இருபத்து இரண்டு தேனகம் மலர்கள் பற்றிய மதிப்பீடு இம்மலரில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அனைத்து பகுதிகளையும் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை தேனகம் வாசகர்களுக்கும், இதனை ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் சிறந்த தீனியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே இரு வருடங்கள் இணைந்ததாக ( 2016 - 2017) மலரவிருக்கும் இம்மலர், வெளிவர எமக்கு சகல வழிகளிலும் ஆசானாகவிருந்து வழிகாட்டிய பிரதேச செயலாளர் திரு.கு.குணநாதன் அவர்களுக்கும், கவிதை பயிற்சிப் பட்டறையினை சிறப்பான முறையில் நடாத்த அனுசரணை வழங்கிய கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அவர்களுக்கும், பயிற்சிப் பட்டறைக்கு வளவாளர்களாகக் கடமையாற்றி எமக்கு அறுவடையைப் பெற்றுத் தந்த கவிஞர். வாசுதேவன் மற்றும் திரு.த.மலர்ச்செல்வன் அவர்களுக்கும், இம்மலர் சிறப்பாக வெளிவர கட்டுரைகளை தந்துதவியவர்களுக்கும், இம்மலருக்கு விமர்சன உரை எழுதிய திருமதி.றூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்களுக்கும், மற்றும் இவ்விழாவுக்கான நிதி திரட்டலுக்கான அதிஷ்ட இலா சீட்டிழுப்பின் விற்பனைக்கு உதவிய கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அதனை வாங்கிய நலன் விரும்பிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. தர்ப்பணா ஜெயமாறன்,**
கலாசார உத்தியோகத்தரும், கலாசார பேரவை செயலாளரும்,
பிரதேச செயலகம், மண்முனை வடக்கு.

# மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை

**பின்வரிசை (இடமிருந்து வலமாக) :** திரு.எஸ்.சந்திரகுமார், திருமதி.சா.மதனகுமார், திருமதி.ரி.பி.தனுஷாந், திருமதி.த.ஜெயந், திரு.எ.பிரியகாந்தன், திரு.கதிர்பாரதிதாஸன், திரு.வி.மைக்கல் கொலின், திரு.ஆர்.ரவீந்திரமூர்த்தி

**முன்வரிசை (இடமிருந்து வலமாக) :** திருமதி.சு.வேதநாயகம், திருமதி.ம.மகேந்திரன், திருமதி.த.ஜெயமாறன், திரு.கு.குணநாதன், திருமதி.சு.சக்கரவர்த்தி, திருமதி.தி.ஹரிதாஸ், திருமதி.ம.சிவஞானசோதிகுரு

# பொருளடக்கம்


- மட்டக்களப்பின் முதற் சஞ்சிகையான பாரதி சஞ்சிகை.... 09
- அழகியல் உணர்வுடன் கூடிய ஒரு தொழிற்துறையாக... 13
- கலைஞர்களின் நினைவுப்பதிவு - மாஸ்டர் சிவலிங்கம் 20
- பண்டார வன்னியன் 23
- கலைஞர்களின் நினைவுப்பதிவு - திருமதி. கமலா ஞானதாஸ் 20
- எங்கள் நிலம் இது 33
- மட்டக்களப்பு மாநில கலை பண்பாட்டின்.... 34
- கலைஞர்களின் நினைவுப்பதிவு - திரு. க. குருநாதன் 39
- நான் பட்ட பாடு 42
- பண்பு காத்திட்டா 44
- யதார்த்த விருத்தம் 45
- மட்டக்களப்பு தமிழ் மக்களிடத்தில் இருந்து மருவிப்போகும்.... 50
- கலைஞர்களின் நினைவுப்பதிவு - திருமதி. மகாலெட்சுமி தர்மலிங்கம் 55
- கேரளாவுக்கும் மட்டக்களப்புக்கும் உரித்தான போடி முறைமை 58
- தூறலில் கிடைத்த சில துளிகள் 64
- தேனகம் தொகுப்பும் மதிப்பீடும் 70
- கலைஞர் கௌரவம் 83


தேனகம்
முத்தமிழ் விழாச் சிறப்புமலர் - 2016-2017
பிரதேச கலாசாரப்பேரவை,
பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு

## மட்டக்களப்பின் முதற் சஞ்சிகையான

# பாரதி சஞ்சிகை

## மூன்று பார்வைகள்

பேராசிரியர். செ. யோகராசா

நவீன இலக்கியத்தின் தோற்றத்திலும் மாற்றத்திலும் வளர்ச்சியிலும் தளர்ச்சியிலும் சஞ்சிகைகளுக்கு முக்கிய இடமுள்ளது. ஈழத்திலும் நவீன இலக்கியம் தோற்றம் பெற்ற சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளில் மறுமலர்ச்சி (1946 – 48, யாழ்ப்பாணம்), பாரதி (1946, கொழும்பு), எரிமலை (திருகோணமலை 1948) என்பன அத்தகு பணிபுரிந்துள்ளன. முதலிரு சஞ்சிகைகள் பற்றி நன்கறியப்பட்டிருந்தன. 'எரிமலை' பெயரளவிலே மட்டும் அறியப்பட்டுள்ளது. இதே காலப்பகுதியிலே மண்டூரிலிருந்து வெளிவந்த 'பாரதி' பெயரளவிலே கூட அறியப்படா திருந்தது. எனினும் சில வருடங்களுக்கு முன்னர் கிடைக்க நேர்ந்த பாரதி தொகுப்புருவில் அண்மையில் (16.10.2016) வெளிவந்துள்ள நிலையில் அதனை ஆழமாக வாசிக்கின்ற போது அதன் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரித்துள்ளமை புலப்படுகின்றது.




குறுகிய கால ஆயுளில் முடிந்து விடுகின்ற அவ்வாறான சஞ்சிகைகளை தொகுத்து வகுத்து நோக்கும் போதுதான் நவீன இலக்கியத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் குறிப்பிட்ட காலகட்டத்து வளர்ச்சி நிலைமைகளையும் அறியவியலும். இதனாலேயே தமிழ்நாட்டு இலக்கியக்காரர் மணிக்கொடி தொடக்கம் அண்மைக்காலங்களிலே மரணித்துவிட்ட சஞ்சிகைகள் வரை முழுமையாகவோ தேர்ந்தெடுத்த படைப்புக்களை உள்ளடக்கியோ தொகுப்புகளாக வெளியிட்டு வருகின்றனர். இன்றுவரை ஏறத்தாழ இருபது சஞ்சிகைகள் இவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளன. ஈழத்தில் யானறிந்த வகையில் முழுமையான தொகுப்பாக முதன்முதலாக குமரன் சஞ்சிகையும் மிக அண்மையிலே மறுமலர்ச்சிச் சஞ்சிகையும் வெளிவந்துள்ளன. குமரன் உள்ளடக்கப் பகுப்பு அடிப்படையிலும் மறுமலர்ச்சி இதழ்களின் அடிப்படையிலும் வெளிவந்துள்ளன. மூன்றாவதாக வரும் இந்தப் 'பாரதி' குமரன் வழியைப் பின்பற்றியுள்ளது. 1948 – 1950 காலப்பகுதியில் வெளிவந்த இச்சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராக திரு ந. செபரெத்தினம் அவர்களும் பிரசுரகர்த்தாவாக அமரர் கு. தட்சணாமூர்த்தி அவர்களுக்கு பதிப்பாசிரியராக அமரர்

பண்டிதர் ம. நாகலிங்கம் அவர்களும் விளங்கினர்.

ஈழத்து ஆரம்பகாலத்துச் சஞ்சிகைகளைப் பொறுத்தவரையில் அவை தமது பிரதேசப் படைப்பாளர்களுக்கு களமமைத்துக் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்துள்ளன. இவ்விதத்தில் 'பாரதி' மட்டக்களப்புப் பிரதேசம் சார்ந்த எம்.எம்.சாலிஹ், மூர்த்தி, என்.எஸ். சந்திரசேகர், நா.குணரெத்தினம் முதலானோரது சிறுகதைகளைப் பிரசுரித்துள்ளது. இவர்களுள் எம்.எம்.சாலிஹ் எழுதிய 'சதிகாரி' என்ற சிறுகதை முதன்மையானது. பொருத்தமில்லாத திருமணத்திற்குட்பட்ட மனைவி தனது கணவனைக் கத்தியால் குத்திக் கொலை செய்கின்ற புரட்சிகரமான இச்சிறுகதை மட்டக்களப்புப் பிரதேச முதல் முஸ்லீம் சிறுகதை முன்னோடி எழுத்தாளரொருவரை இனங்கண்டு கொள்ள உதவியிருக்கின்றது. இச்சிறுகதைக் குரியவரான எம்.எம்.சாலிஹ் எனப்படும் புரட்சிக்கமால் பின்னர் அதிக சிறுகதைகள் எழுதாவிடினும் கவிதையில் தனது புரட்சிகரமான சிந்தனைகளை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. எம்.எம். சாலிஹ் அவர்கள் புரட்சிக்கமால் என்ற பெயரை வைப்பதற்கு புரட்சிகரமான சிறுகதை எழுதி அனுப்பும்படி பாரதி தனது வாசகரைக் கேட்டுக் கொண்டது காரணமாதல் கூடும்.

மட்டக்களப்பு நவீன கவிதை முன்னோடி நீலாவணனேயாயினும் அவருக்கு முன்னர் நவீன கவிதை ஊற்றுக்கள் சிலருள்ளனர். 'புலவர்மணி' இவர்களுளொருவர். இவரைவிட நவீன கவிதைத் துறையில் முக்கியமான இளங் கவிஞராக கவி.ஜி.எம்.செல்வராஜ் என்பவரைப் பாரதி இனங்காட்டியுள்ளது. இவரது இரு கவிதைகளே வெளிவந்திருப்பினும் இவரது கவித்திறனை மட்டிட அவை போதுமானவை. இவர் பற்றி அதிகம் அறியமுடியாவிடினும் கவிதைகளின் அணுகுமுறை மட்டக்களப்பிற்குரியவராகவே இவரை இனங்காட்டியுள்ளது. இவ்வாறான அணுகுமுறை கொண்ட பொங்கற் கவிதைகள் ஈழத்து நவீன தமிழ்க் கவிதைப் பரப்பில் இன்றுவரை இடம்பெறவில்லை. தவிர, மூத்த தலைமுறை சார்ந்த புலவர்மணி, மூனாகானா, மு.சோமசுந்தரம்பிள்ளை முதலானோரின் கவிதைகள் சிலவும் பாரதியில் இடம்பெற்றுள்ளன. முற்குறிப்பிட்ட புரட்சிக்கமாலின் கவிதைகள் எவையும் இதில் பிரசுரமாகவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

மட்டக்களப்புப் பிரதேச கட்டுரை இலக்கியக்காரர் பலரைப்பாரதி அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவியல்கட்டுரை (கோ.கோணேசபிள்ளை), நவீன கவிதை (சந்திரநாதன்), இலக்கிய ரசனை (கோணேஸ்), கல்வி (ம.சிவநேசராசா), நுண்கலை (கணபதிப்பிள்ளை), சமூகம் (D.T.செல்வநாயகம்) என்றவாறு பல்துறை சார்ந்த கட்டுரைகள் மட்டக்களப்பு சார்ந்த இளந்தலைமுறையினரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள், நவீன கவிதை வளர்ச்சி தொடர்பாக சந்திரநாதன் எழுதிய கட்டுரைக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் நவீன இலக்கியத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் இலங்கைப் பல்கலைக்கழகம் சார்ந்த பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் தமது பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவற்றைப் போதித்தார். (தமது தமிழ் இலக்கிய வரலாற்று நூலிலும் நவீன இலக்கியத்திற்கு முக்கிய இடம் அளித்திருந்தார்) இவ்விதத்தில் அவரிடம் அவ்வேளை கற்றவரான சந்திரநாதன் நவீன கவிதை வளர்ச்சி பற்றி விரிவான கட்டுரை எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது; ஈழத்திலிருந்து நவீன இலக்கியம் சார்ந்து வெளிவந்த முக்கியமான முதற்கட்டுரை இதுவென்றே கூறவேண்டும். பாரதியில் அவ்வப்போது வெளிவந்துள்ள செய்திக் குறிப்புகள் சில இன்றைய நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன. ஈழத்துத் தமிழ்ச் சூழலில், *(i)* திராவிட இயக்கத்தின் வளர்ச்சி *(ii)* இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சி *(iii)* பெண்கள் அமைப்புகளின் வளர்ச்சி பற்றி எழுதுவோர் பலர் யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்துள்ள விடயங்களை ஓரளவு எழுதுவதுண்டு. மட்டக்களப்புப் பிரதேசம் சார்ந்துள்ள அத்தகைய விடயங்கள் பற்றி எதுவுமே எழுதுவதில்லை. இவ்விதத்தில் முறையே *(i)* மட்டுநகரில் கருஞ்சட்டை வீரர்கள், *(ii)* மட்டுநகரில் திரு. ஹரி அபயகுணவர்த்தனா, *(iii)* மங்கையர் மன்றம் பகுதியில் பெண்கள் எழுதிய சில கட்டுரைகள் ஆகியவை கவனத்திற்குரியன. மட்டக்களப்பின் சமகால சமூக அரசியல் நிலைமைகள் பற்றிய அருமையான புரிதல்களுக்கும் 'பாரதி'யின் 'செய்திகள்' 'கடிதங்கள்' என்பன கணிசமாக பயன்படக் கூடியனவாகவுள்ளன. விரிவு அஞ்சி

அவை பற்றி இவ்வேளை எதுவும் குறிப்பிடவில்லை. மட்டக்களப்பு பிரதேசம் தவிர்ந்த ஈழத்தின் ஏனைய பிரதேசங்களின் இலக்கிய வளர்ச்சிக்கு ஒட்டு மொத்தமான ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிக்கு – பாரதி ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் சுருக்கமாகச் சிலவற்றைக் கூறவேண்டும்.

ஈழத்து எழுத்தாளருள் வாசிப்புத் தாகம் மிக்கவர்கள் சிலரே. இவர்களுள் முக்கியமான ஒருவர் வ.அ.இராசரத்தினம். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அவர் பயின்ற போது அமரர் இலக்கிய கலாநிதி வ. சிவசுப் பிரமணியத்தின் நூல்கள் தமக்குத் தீனியானவை பற்றி 'வ.அ.இ'வே குறிப்பிட்டுள்ளார். அவரது சிறுகதையும் 'பாரதியில்' பிரசுரமாயுள்ளது. மலையகம் சார்ந்த பரமஹம்சதாசன், அனுராதபுரம் சார்ந்த அன்புதாசன் ஆகியோரது கவிதைகளுக்கும் பாரதி இடமளித்துள்ளது.

'பாரதி'யில் வெளிவந்த கட்டுரைகளுள் சில முக்கியத்துவம் மிகுந்தவை. பாரதியின் கவிதைகள் பற்றி இரசனை நோக்கிலான கட்டுரைகள் வெளிவந்த அன்றைய இலக்கியச் சூழலில் பாரதி கவிதைகளை விமர்சன நோக்கில் அணுகுகின்ற கட்டுரையொன்று (பாரதியின் திறமை என்ன?) நாவற்குழியூர் நடராஜனால் எழுதப்பட்டுள்ளது.

உலக நாடகமேதை சேக்ஸ்பியர்பற்றி இலண்டனிலிருந்தவாறு கலாநிதி.சு. வித்தியானந்தன் எழுதிய 'செகசிற்பியாரும் அவர் பிறப்பிடமும்' என்ற கட்டுரை வழங்கும் புதிய தகவல்கள் கவனிப்பிற்குரியன!

'இலங்கைத் தமிழரின் எதிர்காலம்' என்ற தலைப்பிலே அ. அமிர்தலிங்கம் B.A எழுதிய கட்டுரை அன்றைய இந்தியத் தமிழர் (மலையக மக்கள்) இலங்கைத் தமிழர் தொடர்பான முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றி அலசுவது கவனத்திற்குரியது; பின்நாளில் புகழ்பெற்ற அரசியல் தலைவரொருவரின் ஆளுமைத் திறனை விளங்கிக்கொள்ள விரும்புவோருக்கு பயன்படக்கூடியது.

சமகாலத்தில் வெளியாகி இன்று கிடைக்கக்கூடிய பாரதி (கொழும்பு), மறுமலர்ச்சி (யாழ்ப்பாணம்), முதலானவற்றுடன் இப்பாரதியை ஒப்பிட்டு முக்கியமான ஒருசில குறிப்புகளை நினைவுகூர்வதும் பயனுடையது. கொழும்பு – பாரதி ஈழத்தின் அச்சில் வந்த முதற் சஞ்சிகை (1946 ஜனவரி); ஈழத்தின் முதல் முற்போக்குச் சஞ்சிகை (முதலாவது முற்போக்குச் சஞ்சிகை தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்தது); ஆதலின் பிரக்ஞைபூர்வமான முறையிலே முற்போக்கு சார்ந்த படைப்புகளை வெயிட்டது. இவ்விதத்தில் ஈழத்தின் முக்கியமான மூத்த முற்போக்குப் படைப்பாளர் சிலரை அறிமுகப்படுத்தியது. முன்மாதிரி முற்போக்கு மொழிபெயர்ப்புப் படைப்புக்கள் சிலவற்றைப் புதிய தலைமுறை யினருக்கு இனங்காட்டியுள்ளது. சர்வதேச நோக்கிலான படைப்பு உருவாக்கம் தொடர்பான சில சிந்தனையையும் விதைத்துள்ளது. இலக்கியத் தின் மகத்தான சக்தியைப் புலப்படுத்தவும் முயன்றுள்ளது.

மறுமலர்ச்சி ஈழத்தில் தமிழ்ச்சூழலில் நவீனம் (Modern), நவீனத்தன்மை (Modernity) முதலியன தொடர்பான சிந்தனைகள் உருவாக வழிகோலியதனூடாக எழுத்தாளர் மத்தியில் புத்தெழுச்சியை ஊட்டியது. மேலும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முக்கியமாகக் கூடிய இரண் டாவது காலகட்டம் உருவாக வழிகோலியுள்ளது. முப்பதுகளின் 'ஈழகேசரி' சிறுகதைச் செல்நெறியி லிருந்து விலக முற்பட்ட அதேவேளையிலே ஈழத்தில் ஐம்பதுகளிலே உருவான முற்போக்கு சிறுகதை எழுத்தாளர்களை அண்மித்துச் செல்ல முனைந்துள்ளது. ஈழத்து நவீன கவிதையின் தோற்றத்திற்கு காத்திரமான முறையில் தடமமைக்க வில்லையென்பதும் ஐம்பதுகளிலிருந்தே முக்கியம் பெறத் தொடங்கிய மஹாகவி குழுவினருக்கு ஆரம்ப நிலையில் பிரசுர களமாக விளங்கியிருந்த தென்பதும் இன்று ஆழமாக நோக்கும்போதுதான் புலப்படுகின்றது. 'நவீன' இலக்கிய உருவாக்கத் துடன் தொடர்புபட்ட ஆங்கில ஆட்சிச் சூழலில் உருவான 'நவீனமயவாக்கம்' என்பதனையும் அதன் பின்னணியில் எழுந்த 'நவீன இலக்கியப் பிரக்ஞையையும் (நவீனம் - புதுமை, புதியது) பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை உட்படப் புலமையாளர் சிலர் ஏன் 'மறுமலர்ச்சி' என்று குறிப்பிடுகின்றனர் என்ற கேள்வி எழுவதற்கும் 'மறுமலர்ச்சிச் சஞ்சிகை' என்ற பெயர் வழிவகுத் திருப்பதையும் இவ்வேளை குறிப்பிட்டாக வேண்டும்.

இப்பாரதி ஈழத்து நவீன கவிதை

வளர்ச்சியிலே மிக முக்கியமான ஓரிரு கவிஞரை மட்டும் இனங்காட்டியுள்ளது (கவி செல்வராஜ்). அவ்வாறே ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியிலும் ஓரிரு எழுத்தாளரை (புரட்சிக்கமால்) இனங்காட்டியிருந்தது. எனினும் இவற்றை விடவும் குறிப்பிட்ட சஞ்சிகைகளைவிடவும் பிரக்ஞைபூர்வமாக ஈழத்துச் சமகால சமூக, அரசியல் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை கட்டுரைகள், செய்திகள் கடிதங்களூடாக வெளிப்படுத்தியுள்ளமை இதன் தனித்துவமாகின்றது.

'பாரதி'யில் தமிழ்நாட்டு இலக்கிய ஆர்வலர்களை ஈர்க்கக்கூடிய விடயங்களுமுள்ளன. உ-ம்: பேரறிஞன் - பேனாப்புரட்சி வீரன், C.N அண்ணாதுரை M.A என்ற தலைப்பில் (எம்.எஸ். பாலு, வந்தாறுமூலை) எழுதப்பட்ட கட்டுரை. இக்கட்டுரையின் ஓரிடத்தில் அண்ணாத்துரை நாஸ்திகள் என்பதற்கு கொடுக்கப்படுகின்ற புதிய விளக்கம் வாசகரை சிந்திக்க வைக்கின்றது. 'தபால்' என்ற பகுதியிலிடம்பெற்றுள்ள மட்டுநகரில் கருஞ்சட்டை வீரர்கள் என்ற தலைப்பிலான 27.03.1949இல் நடந்த கூட்டம் பற்றிய செய்தி விபரிப்பில், தமிழ்நாட்டிலிருந்து வந்த ஏ.பி. ஜனார்த்தனத்தின் பேச்சு சுருக்கமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதுவும் சிந்தனைக்கு விருந்தாகக்கூடியது. முன்னர் குறிப்பிட்ட பாரதியார் பற்றிய கட்டுரை (பாரதியின் திறமை என்ன? – நாவற்குழியூர் நடராஜன்) பாரதியாரின் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற கவிதையை கடுமையான விமர்சனத்திற்குட்படுத்துகின்றமை காரணமாக பாரதியியல் ஆர்வலருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தக்கூடியது.

'பாரதி' பாரதியாருக்கு வெளியிட்ட சிறப்பு மலர், அன்றைய சூழலில் ஈழத்தினருக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டிலுள்ளவருக்கும்பிரமிப்பை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது. 'பாரதி' சஞ்சிகையின் மகுடவாசகமே "சாதிச் சண்டை போச்சோ உங்கள் சமயச்சண்டை போச்சோ" என்றிருப்பதும் அத்தகைய உணர்வை ஏற்படுத்தக்கூடியது.

'பாரதி' சஞ்சிகையின் அட்டைகளை பாரதியார் தவிர பாரதிதாசன், மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திரபோஸ், ஜவஹர்லால் நேரு முதலானோர் அலங்கரித்திருப்பதும் தமிழ்நாட்டு இலக்கிய ஆர்வலருக்கு பேருவகை ஏற்படுத்த வல்லதே. 'பாரதி' தொகுப்பினை வாசிக்கின்ற இன்றைய வாசகர்களுக்கு குறிப்பாக பாரதியில் வெளிவந்துள்ள சிறுகதைகள் ஏமாற்றம் தரக்கூடும். 'அன்றைய கால இலக்கியச் சூழல், வாசிப்புச் சூழல், கல்விச்சூழல், கிராமச்சூழல் முதலானவற்றை ஒருகணம் மனதிலிருத்திக் கொள்ளுங்கள்' என்பதே அத்தகையோருக்கு எனது பணிவான வேண்டுகோளாகின்றது! அதுமட்டுமன்று, இதழியல் ஆர்வலர்கள் பின்வரும் விடயங்களை மனங்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்:

i) பாரதியின் முதல் இதழைத் தேடுதல்
ii) இரண்டாவது இதழ் முழுமையற்று இருப்பதால் அதனையும் தேடுதல்
iii) புனைபெயர்களுள் மறைந்துள்ள சிலர் அறியப்பட்டுள்ளனர். (உ-ம்: சத்தியநாதன் - பேராசிரியர் ப. சந்திரசேகரம்; எம்எம்ஸாலிஹ் - புரட்சிக் கமால்; அன்புதாசன் - அனுராதபுரத்தைச் சேர்ந்தவர். இன்றுள்ள கவிஞர் அன்பு ஜவர்ஷாவின் தந்தை; D.T. செல்வநாயகம் - எழுத்தாளர் அருள் செல்வநாயகம்; வ.சந்திரசேகரம் - ஆரையம்பதியைச் சேர்ந்தவர், பாடசாலை ஆசிரியர், அதிபர், இன்றைய எழுத்தாளர்கள் திசேரா, மணிசேகரன் ஆகியோரின் தந்தை மேலும் அறியப்பட வேண்டிய ஏனையோருள் முக்கியமானவர்கள். கவி.ஜி.எம்.செல்வராஜ், செல்வி நாகேஸ்வரி, ராஜூ எஸ்.கே.ராஜூ, செல்வி.தேவகி, ந. ஜெயமணி முதலானோர்.
iv) பாரதியில் இடம்பெற்றுள்ள சமகாலத்தில் வெளியான பின்வரும் சஞ்சிகை பற்றிய விபரங்களும் இதழியல் ஆர்வலருக்குப் பயன்படக்கூடியன.

1. லங்கா முரசு, ஆசிரியர்: கலாநிதி, துணை ஆசிரியர்: ஷா, லங்காமுரசு காரியாலயம், 22 மெயின் வீதி, மட்டக்களப்பு.
2. சேவைமணி, சேவை மணி காரியாலயம், வெள்ள மணல், சைனாபே.
3. எரிமலை, ஆசிரியர்: அ.செ.முருகானந்தன், திருகோணமலை.
4. விளம்பர சேகரி – ஆசிரியர்: S. S. நாதன், 54, நெசல் வீதி, கண்டி.
5. வெற்றிமணி, ஆசிரியர்: M.K.S. மணியம், நவமணி ஸ்ரோஸ், நாவலப்பிட்டி அல்லது டங்கன் காரியாலயம், வத்துமுல்லை.
6. தமிழ் அபிமானி, ஆசிரியர்: சக்தி மோஹன், 39/45 நெல்சன் வீதி, கொழும்பு-03.

# அழகியல் உணர்வுடன் கூடிய ஒரு தொழிற்துறையாக தமிழ் கூத்துக்கலை வளர்த்தெடுக்கப்படல் தொடர்பான ஒரு வெளிப்பாடு

**தா**மஸ் அக்கினாஸ் (*Thamas Aquinas*) என்பவர் புலன்கள் அல்லது மனத்தை இன்புறுத்துவது அழகு என்றார். 19ம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாவலாசிரியர் ஸ்டென்டால் (*Stendhal*) என்பவர், மகிழ்வூட்டக் கூடியது (*The promise of happiness*) என்றார். கீட்சு (*John Keats*) உண்மையே அழகு (*Truth is Beauty*) என்றார். பொதுவாக அழகென்பது காண்போர் கண்ணைப் பொறுத்தது என்பர். காண்பது கண்ணென்னும் பொறியினாலும் உணர்வது கருத்தென்னும் புலனே யாதலின் உள்ளம் உணர்வதே அழகாகிறது. அழகியலுக்கு விளக்கம்தரும்போது விழிப்புணர்வு பெரிதும் வேண்டப் படுகிறது. எது அழகு என்பதில் எவ்வளவு கருத்து விரிவுக்கும் வேறுபாட்டிற்கும் இடம் இருக்கிறதோ அவ்வளவுக்கு அழகியல் பற்றி விளக்கத்திலும் அவை உண்டு.

**கலாநிதி. எம்.பி.ரவிச்சந்திரா** SLTES
விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு

இந்த வகையில் இந்த இருநிலைக்கும் இடைப்பட்ட ஒரு ஏற்றத்திற்குரியது என்று சுட்டி அந்த வகையில் அழகியற் கோட்பாட்டை மூன்று நிலைகளில் அல்லது வகைகளில் நோக்கலாம் என ஆர். வீ. ஜோன்சன் என்ற திறனாய்வாளர் விளக்குகிறார். அவர் கருத்தின் படி அழகியல் என்பது,

அ. வாழ்வியற் கண்ணோட்டம்.

ஆ. கலைக் கண்ணோட்டம்.

இ. கலை, இலக்கியப்போக்கு

இம் மூன்று நிலைகளில் காணக் கூடியது.... கலை கலைக்காகவே என முழங்கியோர் கருத்து வெளிப்பாட்டில் சுதந்திரம் வேண்டியவர்கள். ஆனால் கலை எது என்பதே கேள்விக் குரியது. அதன் விடையும் கருத்து மாறுபாடுகளுக் குரியது. கலை எது என்பது முதலில் தெளிவானால் தான் அது எதற்காக என்பது பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும்.



ஒவ்வொரு பொருளுக்கும் அதனோடு தொடர்பும், உறவும் உடைய பிற பொருள்களின் பொதுமைப் பண்புகள் இருக்கும். அதே சமயம் மற்ற அனைத்தினின்றும், அதன் இனத்திலேயே கூடப் பிறவற்றினின்றும் அதைப் பிரித்தறியக் கூடிய ஒரு தனித்தன்மையும் இருக்கும். ஒன்றினது மற்றொன்றின்மையை விளக்கும் 'வைசேமக் கோட்பாடு" எந்தப் பொருளையும் தன்மையோடு அறிய உதவும். அவ்வகையில் கலையென்பது கருத்தையோ, காட்சியையோ, உணர்வையோ கருவியொன்றால், வெளியிடுவது. அதன் நோக்கமும் பயனும் கலைஞனின் அனுபவமும் கலைஞனுக்குச்செய்வதே. எனவே கலையை அதன் அனுபவம் தவிர்ந்த வேறு எதற்காகவும் உருவாக்குவதோ, பயன்படுத்துவதோ, மதிப்பிடுவ தோ அதன் தனித்தன்மையை உணர்த்துவதற்காகும்.

கலையை கலைக்காக மட்டும் படைக்கும் போதும் துய்க்கும் போதும் சமூகமாற்றத்தை விளக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த கருவியொன்று வீணாக்கப்படவில்லையா? என்ற வினா எழலாம். அவ்வகையில் அழகியல் ஒரு வாழ்வியல் பயன் இல்லையா? அழகியலும் ஒரு பயன்தான். பெரும் பயன். கலைக்கே உரிய பயன் அது. இலக்கியத்தில் வேறு பயன்களை வற்புறுத்துவது அதன் தனித்தன்மைக்கு வழிவகுக்கும். ஆனால் கலை அனுபவத்திற்கு கலை மட்டுமே இருக்கிறது. கலையில் பிற பயன்களை வற்புறுத்தாததால் பேரிழப்பு இல்லை. ஆனால் கலையில் கலைப் பயனைப் பெறாவிடில் அதனை வேறெப்படியும் ஈடுசெய்ய முடியாது.

கலைக்கும் அறிவியலுக்கும் உள்ள வேறுபாடுகளை குறித்துச் சிற்பி ஹென்றி மூர் கூறிய கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது. "அறிவியற் கண்டுபிடிப்புக்களை ஒரு ஐன்ஸ்டின் இல்லா விட்டால் இன்னொருவர் கண்டுபிடிக்க முடியும். ஆனால் ஹேம்லட்டை எழுத ஷேக்ஸ்பியரால் தான் முடியும். ஒரு அறிவியற் செய்தி அல்லது பொருள், தொலைந்தால் அல்லது அழிந்தால் என்றோ அதை மீட்டுருவாக்கம் செய்யமுடியும். ஆனால் ஒரு கலைஞனின் கலை அழிந்தால் (அவனால் கூட) அதை மீட்டுருவாக்கம் செய்ய முடியாது". ஏனெனில் கலை என்பது தனித்தன்மை வாய்ந்தது என்கிறார்.

இந்தவகையில் ஈழத்தில் மட்டக்களப்பு கூத்துக்களை சமூக யதார்த்தங்கள் மற்றும்

வரலாற்று நடப்பியல் முதலியவற்றின் நிலை நின்று விளங்கிக்கொள்ளல் வேண்டும். சமூக யதார்த்தங்கள், மற்றும் வரலாற்று நடப்பியல் முதலியவற்றுடன் தொடர்புபடுத்திக் கலை இலக்கியங்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும் என்பது மார்க்சிச அணுகு முறையின் அடியாதாரம். பொருளாதாரக் கட்டுமானமே சமூகக் கட்டு மானத்தையும் அந்தச் சமூகத்திற்குரிய கருத்தியலை யும் நிறுவனங்களையும், கலை இலக்கியங்களையும் தீர்மானிக்கும் அடிப்படையா கின்றது.

மார்க்சிச சிந்தனை மரபுகளில் பலதரப் பட்ட கிளைவிடும் வளர்ச்சிகள் படிம வளர்ச்சி கண்டு வருதலை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. 1960ஆம் ஆண்டின் பின்னர் மார்க்சிச கலை இலக்கியச் சிந்தனைகளில் மேலும் பன்முகப் பாங்குகள் வளர்ச்சியடையத் தொடங்கின. மார்க்சிச கலை இலக்கியத் திறனாய்வின் வளர்ச்சியில் விமர்சன நடப்பியல் (Critical Realism) சோஷலிச நடப்பியல் என்ற இரு கிளைகளையும் ஒப்பு நோக்குதல் கூர்ப்படையத் தொடங்கியது. மனித ஆற்றல்களையும் திறன்களையும் புதிய சமூக ஒழுங்கமைப்பை நிர்மாணிப்பதற்கான பணி சோஷலிசநடப்பியலின் கடப்பாடாக அமைகிறது. முதலாளித்துவக் கலை இலக்கியங்கள் முன் வைக்கும் போலி உணர்வுகள், தவறான உணர்வுகள் (False consciousness) முதலியவற்றை இனங் காண்பதற்கு இந்த அணுகுமுறை வினைத்திறன் வாய்ந்த அளவீடுகளை முன்வைக்கின்றது. நடப்பியலை நம்பகரமாகப் பிரதிபலிக்கும் பொழுது சரியான கருத்தியலும் பொருத்தமான அழகியலும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் சமூகம் பற்றிய சரியான அழகியற் பார்வையும் விளக்கமும் நடப்பியலின் முன் நிபந்தனையா கின்றன. மார்க்சிச கருத்தியல் வலுவும், அதனூ டாக பரிணமிக்கும் அழகியல் வலுவும், அவற்றின் சமூகப் பண்பாடும் நடப்பியலின் பலத்திற்கு வலுவூட்டுகின்றன எனலாம்.

இவ்வகையில் 1980ற்குப் பின் மட்டக் களப்பு நாடகச் செயற்பாட்டை பாரம்பரிய நாடகக் கலைஞர்களின் செயற்பாடு, பாடசாலை நாடகச் செயற்பாடு, பல்கலைக்கழக நாடகச் செயற்பாடு, நிறுவனங்களின் நாடகச் செயற்பாடு என நான்கு விதமாகப் பகுத்துக் கொள்ளலாம். இருந்தும் பாரம்பரிய அரங்கு வீரியத்துடனும், கலைச் செழுமையுடனும் விளங்கிய காலத்தில் இருந்து உயர் அழகியல் தராதரங்களுடன் நிகழ்த் தியவர்கள் யாரும் இல்லையென்றே குறிப்பிட வேண்டும். குறிப்பாக இன்று பாரம்பரியக்கலையை நிகழ்த்தும் கலைஞர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கலை வடிவங்கள் கூட உயர்கலை செழுமையுடன் இருந்த கலை வடிவத்தின் நலிவடைந்த தன்மையையே இனங்காட்டுகின்றன எனலாம்.

ஏனெனில் அன்று பாரம்பரிய அரங்க வடிவங்கள் மட்டக்களப்பு மக்களின் சமூகச் செயற்பாட்டில்பிரிக்க முடியாத சக்தியாக அமைந்து விளங்கின. சுய தொழிலை (விவசாயம், மீன்பிடி) நம்பி வாழ்ந்த மக்கள் தங்களின் சமூக நிகழ்வுகளில் ஒன்றாகவே அரங்கக் கலை நிகழ்வுகளையும் இணைத்து நோக்கினர். கோயில் திருவிழா, விசேட

சமூக நிகழ்வுகள் என்பவற்றில் அரங்கக் கலைகளின் நிகழ்த்துகையை ஒரு முக்கிய பகுதியாகக் கருதி தங்களின் சமூக வாழ்வில் ஒரு பகுதியாக கலை நிகழ்வுகளை ஆக்கிக்கொண்டனர். தங்களின் ஓய்விற்கும், பொழுதுபோக்கிற்கும் உரியதாக அரங்கக் கலை விளங்கியதால் அதன் பயிற்சி, அரங்கேற்றம், தொடர்மேடை ஏற்றம் என்பன ஓய்வான காலங்களைப் பயனுடையதாக்கிய துடன், இன்பக் குதூகலத்தையும் கொடுத்தது.

சோர்வையும், சோம்பலையும் தவிர்த்து உற்சாகத்தையும், மனநிறைவையும் மக்கள் அனைவருக்கும் இக்கலைவடிவங்கள் கொடுத்தன. இதனால் அவர்கள் அனைவரினதும் வாழ்வில் பிரிக்க முடியாத சக்தியாக அவை விளங்கின. அக்கலை வடிவங்களில் மேலும் மேலும் பல புதுமைகளைப் புரிந்து அவற்றின் உயர்தரத்தைப் பேணுவது அன்றைய மக்களின் வாழ்வியல் கடமையாக விளங்கியது. அன்று அக்கலை வடிவங்களின் உயிர்ப்பையும் அவற்றின் செழிப் பையும் பேணியது. அக்கலை வடிவம் செழுமை யுடன் விளங்கிய காலச் சமூகத்தின் கட்டிறுக்கம் ஆகும். சமூகக் கட்டிறுக்கம் தளர்ச்சியடைய சமூகத்தின் ஆதரவும், அரவணைப்பும் அரங்கக் கலைவடிவங்களுக்கு முழுமையாகக் கிடைக்க முடியாத நிலையேற்படுகிறது. இது அவற்றின் வீரியத்தையும் செழுமையையும் குறைத்து விடுகிறது. பல இடங்களில் பாரம்பரிய கலை வடிவங்களின் முக்கியத்துவத்தை தேவையற்ற தொன்றாக்கி விட்டுள்ளது.

தற்காலத்தில் பாரம்பரிய கூத்துக் கலை நிகழ்த்தப்படும் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள கன்னன்குடா, நாவற்காடு, கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு, போரதீவு பிரதேசங்களிலும் எழுவான்கரைப் பகுதியில் அமிர்தகழி, சீலாமுனை போன்ற பிரதேசங்களிலும் பாரம்பரிய கூத்துக்கலை உயிர்த்துடிப்புடன் வாழ்ந்த காலத்தில் இருந்து சமூகம் பொருளாதார ரீதியாக பாரிய மாற்றங்களை அடையாத சமூகங்களாகவே அவை விளங்குகின்றன. இச் சமூகங்களில் நிலவும் பின்தங்கிய நிலையே இன்றுவரை அச்சமூகங்களின் பாரம்பரிய கலை வடிவங்களை அங்கு நிலை நிறுத்தியுள்ளன. மட்டக்களப்பின் சமூக வளர்ச்சி என்பது சகல பிரதேசங்களிலும் சம அளவில் சமாந்தரமாக இடம்பெற்று இருக்குமாயின் சிலவேளைகளில் இக் கூத்துக் கலை தொடர்பான தேடலை தொல் லியல் கூடங்களில் நிகழ்த்த வேண்டிய சூழ்நிலை அல்லது தேவை ஏற்பட்டிருக்கும். ஆனால் எமது சமூகத்தின் சமனற்ற வளர்ச்சி நிலை சில பிரதேசங் களிலாவது அவற்றை அடையாளப்படுத்த பேருதவியாக உள்ளது எனலாம்.

இத்தகைய நிலைமைகளுக்கு மட்டக் களப்பில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சியும், அதனால் ஏற்பட்ட சிந்தனை மாற்றமும் கருத்தியல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. பாரம்பரிய தொழில் முயற்சிகள் விடுபட்டு அரச தொழில் வாய்ப்பு, தனியார் நிறுவன மயப்பட்ட தொழில் வாய்ப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தனியார் வர்த்தகம் போன்றவற்றில் ஏற்பட்ட நாட்டம் என்பனவும், உள்நாட்டு யுத்தம் காரண மாகவும், நகரமயமாதல் சிந்தனைகள் காரணமாக வும், கிராமப் புறங்களில் இருந்து நகரை நோக்கிய மக்களின் புலம்பெயர்வும் மேலும் அகதி வாழ்வும், பாரம்பரிய தொழிலுக்காக பெரும் மூலதனத்தை முதலிட்டு பல மாதங்களாக அதன்மூலம்கிடைக்கும் வருமானத்திற்கு காத்திருக்கும் நிலையும், போர்ச் சூழலால் பாரம்பரிய தொழிலை கைக்கொள்ள முடியாத சூழலும், எதுவித முதலுமின்றி தங்கள் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அரச தொழில் சார் புதிய சூழலும் அதனால் ஏற்படும் கௌரவம், அந்தஸ்து இவற்றை உணரத் தலைப்பட்டதும் காரணங்கள் எனலாம்.

மேலும்பாரம்பரிய தொழில்முயற்சியைப் பிழைப்பூதிய தொழிலாக அன்றி, தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் பல தொழில் முயற்சிகளில் ஒன்றாகக் கொள்ளும் நிலையும் இக்காலத்தில் ஏற்படுகிறது. குறித்த காலத்தில் வேலை செய்து அடுத்த பருவம் ஓய்வாக இருக்கும் நிலைக்கு மாறாக, ஓய்வான காலத்தை இன்னொரு விதத்தில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள மக்கள் முயற்சிக்கின்றனர். பாரம்பரிய தொழில்முயற்சிகளில்ஈடுபட்ட அநேகமானவர்கள் அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்களாகவோ, வியாபார முயற்சிகளில் ஈடுபடுபவர்களாகவோ இருக்கின்றனர். பண்டைய சமூக அமைப்பில் கிடைத்த ஓய்வும், கலை அனுபவங்களும் சம காலத்தில் கற்பனையில் கண்டு நுகரக் கூடிய ஒன்றாகவே மாறிவிட்டது. சமூக மாற்றத்தில் ஏற்பட்ட துரிதமும் ஓய்வின்மையும் பாரம்பரிய கலைவடிவங்களைப்

பாரம்பரிய சூழலில் நீண்டதொரு காலத்தை அல்லது நேரத்தைச் செலவிட்டு இரசிப்பதற்கான, அல்லது சுவைப்பதற்கான சந்தர்ப்பத்தை இல்லா தொழித்து விட்டது.

சமூகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியையும் மாற்றங்களையும் உள்வாங்கி புதிய சமூகச் சூழ்நிலைக்கேற்ப பாரம்பரிய அரங்க வடிவங்கள் தம்மைப் புணரமைத்துக் கொள்ளாததனால் புதிய சமூகச் சூழலின் தேவையினை அவற்றால் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இதைச் சம காலச் சூழலில் அவை நலிவடைவதற் கான அடிப்படைக் காரணமாகக் கருதலாம்.

பாரம்பரிய அரங்கை அதன் பாரம்பரிய நிலையில் பேணுவது சாத்தியமற்ற விடயமாகும் என்பதை மேற்குறித்த பின்புலம் உணர்த்துகிறது. இத்தகைய நிலைக்கு இந்தியாவைப் போல் தொழில் முறைக் கலைஞர்கள் இங்கு இல்லாது இருப்பதும் பிறிதொரு காரணமாகும். சமகாலச் சூழலில் பாரம்பரிய அரங்க வடிவங்களின் பேணுகையும், தொடர்ந்து முன்னெடுத்தலும் சமகால சமூகத் தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்து முன்னெடுப் பதிலேயே அதன் வளர்ச்சி தங்கியுள்ளது. இவ்வகை யில் எமது சுதேசியத்தின் வெளிப்பாடாக, அடையாளமாக விளங்குகின்ற கலைகளில் மாற்றங் களைச் செய்யும் போது அதன் தன்னடையாளங்கள் அழிந்து விடும் என்னும் அச்ச உணர்வு சுதேசியம் பற்றி விளிப்புடையவர்களிடத்தில் காணப் படுகிறது. இவ் அச்சம் நியாயமானதே. ஏனெனில் "பாரம்பரிய அரங்கின் தன்மைகள்" என்னும் விடயத்தில் இவர்கள் அரங்கின் சமூகப் பண்புகளை இணைத்துப் பார்க்கின்றனர். பாரம்பரிய அரங்கு எமது சமூக இயக்கத்தில் பிரிக்க முடியாத ஒரு சக்தியாக விளங்கியது உண்மையே. அது அக்கால கட்டத்தில் எமது அரங்கிற்கு இருந்த பலம். ஆனால் இன்று இந்நிலைமை மாறிவிட்டது. அன்று ஆற்றிய சமூகக் கடப்பாடு இன்று இவ்வரங்கிற்குத் தேவையற்றது. இக் காரணத்தால் தான் இரவு தொடங்கி விடியும் வரை கூத்தாடுதல், அதனைச் சூழ இருந்து இரசித்தல், நடிகருக்கு காசு மாலை அணிந்து கௌரவித்தல், அவர்கள் திறனை இரசித்தல், ஊர் ஒன்று திரளக் கூடிய இடத்தில் வட்டக்களரி அமைத்தல் எனத் தொடரும் பாரம்பரிய அரங்க நிகழ்த்துகைகளில் அரங்கியல் ரீதியான அம்சங்களை விட சமூக ரீதியான உறவுகளுக்கே மக்கள் முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். இது அன்றைய சமூகத் தேவையாகவும் இருந்தது எனலாம்.

இந்த வகையில் நவீன அரங்கச் சாதனங்களும் பாரம்பரிய அரங்கின் கலையழகை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான மேடை அமைப்புக்களும், அலங்காரச் சாதனங்களின் உன்னத பயன்பாடும் கொண்ட நிலையில், நாம் பாரம்பரிய கலையின் அழகியலை அதன் பாரம்பரிய சமூகப் பண்புகளுடன் அளிக்கை செய்யும் போது தான் சாத்தியமாகும் எனக் கூறுவது அதன் பாரம்பரிய சமூகப் பண்புகளை இணைத்துக் கொண்டு வளர வேண்டும் எனக் கூறுவதாகவே அமையும். இது எமக்குரிய உகந்த பண்பாட்டை விடுத்து உண்மைப் பண்பாட்டில் வாழும் எமக்கு எவ்விதத்தில் பொருந்தும். இன்று நாம் உண்மையில் பாரம்பரிய அரங்கு உருவாகிய பாரம்பரியச் சூழலில் பாரம்பரிய அடையாளங் களுடன் வாழ முற்படுவோமாயின் பாரம்பரிய அரங்கை அதன் சமூகப் பண்புகளுடன் பேணுவது சாத்தியமாகும். ஆனால் நாம் இப்போது அத்தகைய சூழலுக்குத் திரும்புவது எந்த வகையில் சாத்தியமாகும். எனவே, இங்கு செய்யக் கூடியது சமூக முக்கியத்துவத்தில் இருந்து பாரம்பரிய அரங்கை விடுத்து அதன் அரங்கியல் பண்புகளை கலை நேர்த்தியுடன் வெளிப்படுத்துகின்ற போதே பாரம்பரிய அரங்கு முக்கியத்துவம் பெறும்.

மட்டக்களப்பில் பாரம்பரிய அரங்க வடிவங்கள் நிகழ்த்துகை செய்யப்படும் வட்டக்களரி அச்சமூக இயக்கத்தின் பிரிக்க முடியாத சக்தியாகவும், பாரம்பரிய அரங்கக் கலை வடிவங்களுக்கும் சமூகத்திற்கும் இடையேயான உறவு நிலையை சிறப்பான முறையில் பேணுவதிலும் முக்கிய பங்கு வகித்தது. இன்று பாரம்பரிய அரங்கின் தனித்துவம் பற்றிப் பேசுவோர் அவ்வரங் கின் சிறப்பும், தனித்துவமும் வட்டக்களரியில் உள்ளதென்றும், வட்டக்களரியில் இருந்து பாரம்பரிய அரங்கைப் பிரிக்கும் முயற்சி அதன் தனித்துவத்தையே சிதைக்கும் முயற்சி என்றும் கூறுகின்றனர்.

இன்றைய சூழலில் எமது பாரம்பரிய அரங்கின் சமூகக்கடன் பிரதானமானதன்று. உயர் செழுமையுடன் இருந்த ஒரு கலை வடிவம் படிப்படியாக சிதைவடைந்து வந்து, சிதைவின் இறுதிக் கட்டத்தில் நிற்கும் போது, அக்கலை வடிவத்தை அதன் உயர்கலைச் செழுமையுடன் எவ்விதம் பேணுவது என்று சிந்திக்கும் போது,

பாரம்பரிய சமூக இயக்கத்தின் முக்கிய சக்தியாக இருந்த வட்டக்களரி அமைப்புடன் அரங்கை வளர்த்தெடுக்க வேண்டும் என முயற்சிப்பது பாரம்பரிய அரங்கை அதன் சமூகப் பண்புடன் பேணும் முயற்சியாகவே அமையும். வட்டக் களரிதான் பாரம்பரிய அரங்கின் அடிப்படை என்னும் சிந்தனையே பாரம்பரிய அரங்கின் இன்றைய நலிந்த நிலைக்குள்ளான காரணங்களில் ஒன்றாக அமைகிறது.

எனவே பாரம்பரிய அரங்கின் கலைத் துவத்தையும் அதன் உயர் செழுமையையும் பேணி, அதை மக்கள் நுகர வேண்டுமென சிந்தித்தோமானால் புதிய சூழலில் அதற்குப் பொருத்தமான அரங்கைப் பயன்படுத்தலாம். அது பாரம்பரிய அரங்கின் உயர் கலைச் செழுமையை எவ்வித குறைவுமின்றி வழங்கும்.

மட்டக்களப்பு பாரம்பரிய அரங்கின் தனித்துவம் கட்டுறுதியும் அலங்காரமும் நிறைந்த ஆடல்களும், கவித்துவம் நிறைந்த பாடல் களுமாகும். இவையிரண்டுமே அதன் அழகியல் தனித்துவத்தை மேம்படுத்துவதுடன் இன்றுவரை அவற்றிக்குச் சிறப்பையும் வழங்கிக் கொண்டிருக் கின்றன. இவை இரண்டையுமே மட்டக்களப்பு அரங்கின் அடையாளமாகவும், எமது பாரம்பரியக் கூத்துக் கலையின் தற்கால எச்சமாகவும் கருதமுடியும்.

இன்று பாரம்பரிய கூத்துக் கலையை நிகழ்த்தும் கலைஞர்கள் பலர் இவையிரண்டினதும் சிறப்பை விளங்கிக் கொள்ளாது பாரம்பரிய ஆட்டத்தின் அடிப்படையான சில அசைவுகளை தன்வசமாக்கி பாடல்களின் மெட்டுக்களைச் சரியாக விளங்கிக் கொள்ளாது ஆடியும் பாடியும் அதன் உயிர்ப்பைக் கேள்விக் குறியாக்கிக் கொண் ருக்கின்றனர். இங்கு செய்யவேண்டியதெல்லாம் அவற்றை நேர்த்தியான முறையில் ஒழுங்கு முறைக்குட்படுத்தி ஆடலினதும், பாடலினதும் அழகியல் துல்லியமாகப் புலப்படும் வகையில் அளிக்கை செய்ய வேண்டியதே ஆகும். இது பாரம்பரிய கூத்துக் கலைவடிவங்களின் ஆடல் மரபினதும், பாடல் மரபினதும் தனித்துவத்தைத் தொடர்ந்து பேணும் முயற்சியாக அமையும்.

இவ்வகையில் பாரம்பரிய கூத்துக் கலை வடிவங்களின் பின்னணி இசை பற்றியும் குறித்துரைத்தல் அவசியமாய் அமைகிறது. பாரம்பரிய கூத்துக்களில் மத்தளமும், சல்லாரியும் பின்னணி இசையை வழங்கும் முக்கியமான வாத்தியக் கருவிகளாகும். பாரம்பரிய கூத்துக்கலை நிகழ்த்துகையின் அடையாளங்கள் இவை. தற்காலச் சூழலில் பாரம்பரிய கூத்திசையின் வனப்பைச் சிறப்பாக எடுத்தாளும் வகையில் நவீன இசைக்கருவிகளையும், சாஸ்திரிய இசைக் கருவிகளையும் பயன்படுத்துவது தொடர்பாக ஆராயும் போது, அவை பாரம்பரிய கூத்திசையின் அடையாளத்தையும், உயிர்ப்பையும் சிதைக்காத விதத்தில் கையாளப்படுதல் வேண்டும். இவ்வாறு இல்லாத போது பாரம்பரிய கூத்திசையின் தாளக்கட்டுக்கள் சிதறுண்டு புதியதொரு இசைக்கோலத்தை உருவாக்கிவிடும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டிவரும். இவ்விடயத்தில் கலைஞரின் குறிக்கோள் தெளிவுடையதாக இருத்தல் வேண்டும்.

கதகளி, கண்டிய நடனம், பரதநாட்டியம் என விளங்கும் கலைவடிவங்களை அடையாளப் படுத்துவதில் அவற்றின் ஆடையலங்காரத்தின் பங்களிப்பு எவ்வாறு முக்கியமானதோ அது போல எமது பாரம்பரிய கூத்தரங்க வடிவத்தை அடையாளப்படுத்துவதிலும் ஆடையலங்காரத்தின் பங்களிப்பு முக்கியமானது. பாரம்பரிய கூத்துக் கலைவடிவத்தின் ஆடை அலங்காரத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் பிரமாண்டத்தன்மை, கண்ணையும் கருத்தையும் கவரும் பாங்கு, கலகலப்பு, அழகியற்செழுமை என்பன பாரம்பரிய கூத்தரங்கின் அழகியலைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் பாரம்பரிய கூத்தரங்க வடிவங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற் கெனத் தனித்துவமான ஆடை அலங்காரங்களைக் கொண்டமைந்துள்ளன. தற்காலத்தில் நிகழ்த்தப் படும் பாரம்பரிய கூத்து நிகழ்த்துகைகளில் ஏனைய அரங்கக் கூறுகளின் சிதைவைப் போல இங்கும் அத்தகைய சிதைவுகளை அவதானிக்கலாம். காரணம் தற்காலச் சமூகம் கலைஞனை ஊக்குவிக்காமையும், முன்னைய காலத்தைப் போல் கலைஞன் இதற்கெனப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடத் தயங்குவதும், கலைஞனுக்கு உள்ள ஆர்வமின்மையுமேயாகும் எனலாம்.

இவ்வகையில் எமது பாரம்பரிய கூத்துக்கலை வடிவங்கள் முன்னர் ஒரு காலத்தில் சமூகச் செயற்பாட்டின் பிரிக்க முடியாத சக்தியாக இருந்தது. ஆயினும் மாற்றமானது அதன் சமூகச் செயற்பாட்டை முக்கியம் அற்றதாக்கிவிட்டது.

அதனால் தற்காலச் சூழலில் 1980ற்குப் பின் கூத்துக் கலையின் இரசனை முறையில் வீழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இதனால் தற்காலத்தில் அவற்றின் இருப்பைப் பேணுவதற்கு அவற்றை சமூகப் பண்பிலிருந்து பிரித்தெடுத்து அவற்றின் அழகியல் செழுமைக்கும் கலை அடையாளத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து சிதைவடைந்து நலிவடைந்து கிடக்கும் கலைக் கூறுகளை அதன் எச்சங்களை புணரமைத்துச் செவ்விதமாக்கி வளர்த்துச் செல்வதிலேயே அவற்றைப் பேணும் முயற்சியும், எதிர்கால சந்ததிக்கு வழங்கும் முயற்சியும் தங்கியுள்ளது. எனவே இம் முயற்சிகள் ஒரு புணருத்தாரண முயற்சியாக இருத்தல் வேண்டுமே தவிர ஒரு புதுப்பித்தல் அல்லது புத்தாக்க முயற்சியாக இருத்தல் கூடாது. புதுப்பித்தல் அல்லது புத்தாக்கம் புதியதொரு கலை வடிவத்தின் பிரசவத்திற்கே வழி சமைக்கும். எனவே உள்ளதைப் பேண உரிய நடவடிக்கை அவசியமாகிறது.

எனவே இக் கலைத்தேடலில் இதனைத் தொழில் முறைக்கலையாக வளர்த்தெடுப்பது மிக முக்கியமானது என்பதோடு, இம் முயற்சியை வலுப்படுத்த இலங்கை சுதந்திர வர்த்தக மையம், உல்லாசப் பயணத்துறை இவற்றோடு இக்கலைத் துறை தொழில்முறையாகக் காண்பியப்படுத்தப் படுவதன் மூலம் இக் கலைத் துறையையும், இக் கலைத் துறைக்கான தொழிற்துறையையும் ஸ்தாபிதப்படுத்த முடியும். இதன் மூலம் எமது பாரம்பரியக்கலை அழகியல் உணர்வுடன் சர்வதேச மட்டத்தைச் சென்றடையக் கூடிய வாய்ப்பும், வசதியும் பெறும். இதன் காரணமாக எமது கலைஞர்கள் தொழிற்துறையாக இதனைப் பேண முடிவதோடு சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் கௌரவத்தைப் பெறக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும். இதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தையும், வெளிநாட்டு பொருளாதாரத்தையும் ஈட்டித்தருகின்ற ஒரு தொழில் முறையாக இக் கலையைப் பேண வாய்ப்புள்ளது எனக் கருதலாம்.

## முத்தமிழ் விழா - 2017 - போட்டி முடிவுகள்

### பாடசாலை மட்டப் போட்டிகள்

**மரபுக்கவிதை போட்டி**

முதலாமிடம் - செல்வன்.துரைராசசிங்கம் இகபரன் - மட்/ புனித மிக்கேல் கல்லூரி
இரண்டாமிடம் - செல்வி.முரளிதரன் அம்ருதாட்ஷலா - மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி
மூன்றாமிடம் - செல்வி.ரவிச்சந்திரன் ரஜிக்கா - மட்/ மகாஜன கல்லூரி

**நடனப்போட்டி**

முதலாமிடம் - மட்/ மகாஜனக்கல்லூரி
இரண்டாமிடம் - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை

### திறந்த போட்டிகள்

**நாடகப் போட்டி**

முதலாமிடம் - மட்/ புனித மிக்கேல் கல்லூரி
இரண்டாமிடம் - மட்/ மகாஜன கல்லூரி

**ஓவியப் போட்டி**

முதலாமிடம் - செல்வி.பாஸ்கரன் டிலக்ஷிகா - மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி
இரண்டாமிடம் - செல்வி.எஸ்.ஸாம்பவி - மட்/ வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை
மூன்றாமிடம் - செல்வி.ரி.ஸ்ரீரகபிரிந்தா - மட்/ விவேகானந்த மகளிர் கல்லூரி
செல்வி.சுஜிதரன் லக்ஷிஜா - மட்/ மகாஜன கல்லூரி

**வடமோடிக்கூத்து போட்டி**

ஆறுதல் பரிசு - திமிலை நளின கலாமன்றம், கிருஷ்ணன் கோயிலடி, திமிலைதீவு.



# கலைஞர்களின் நினைவுப்பதிவு

## மாஸ்டர் சிவலிங்கம்

**நா**ன் அன்று மாஸ்டர் சிவலிங்கம் மாமாவை சந்திக்கச் சென்ற போது, காலை 8.00 மணியிருக்கும். கடைக்குச் செல்வதற்கு ஆயத்தமாக அவரது வீட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தார்.

'வணக்கம் மாமா; என்ற விழிப்போடு அவரைச் சந்தித்து விபரம் கூறி என்னை அறிமுகம் செய்தபோது, எமது சிறு பராயத்திலே அவரைக்காணும் போதெல்லாம் விழிக்கும் உணர்வு மனதிலே கிளுகிளுப்பூட்டியது. "வணக்கம் மருமக்களே!" என்று கம்பீரம் ததும்பும் அந்தக் குரல் இப்போது வயோதிபத்தின் நிர்ப்பந்தத்திலே தளுதளுத்த படி "வாங்க.. வணக்கம்" என்றதும் உண்மையிலேயே கண்ணீரை வரவழைத்து விட்டிருந்தது. வயோதிபத்தின் தனிச் சிறப்பும் அடையாளமுமான வெண் நரை அவரை முற்றாக ஆக்கிரமித்திருந்தது. பேசும் அவர் விழிகளிலும் நரை பூத்துவிட்டிருந்த இமைகள்.. வயதாலே முதியவராய் இருந்தாலும் அவரது மனமும் செயலும் இன்னும் குழந்தையை போலிருந்தது. 'வாழும்போதே வாழ்த்துவோம்' என்னும் மண்முனை வடக்கு கலாசார பேரவையின் மகத்தான வாசகத் தினுள்ளே பொதிந்து கிடக்கும் தார்ப்பரியம் எண்ணிப் பார்க்கையிலே இத்தருணம் பெருமையை தந்தது. இந்த அரிய சந்தர்ப்பத்தினை எனக்கு வழங்கியமையை இட்டு மண்முனை வடக்கு கலாசார பேரவைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாஸ்டர் சிவலிங்கம் மாமா பற்றிய இதர விபரங்கள் ஏற்கனவே எமது தேனகம் 2010 ற்கான மலரிலே பக்கம் 24ல் வழங்கப்பட்டிருப்பதனால் அவ் விபரங்கள் தவிர்ந்த அவரது நினைவுகளின் பதிவாக எதிர்கால சந்ததிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தரவல்ல அவர்களது மகத்தான அறிவுரைகளை மாத்திரம் இங்கே பொறித்திட மண்முனை வடக்கு கலாசார பேரவை பேரவாக் கொண்ட தற்கமைவாக இப்பதிவு வாசகர்களாகிய உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த அரிய வாய்ப்புகளை தங்களது இலக்கியப் பணிக்கு எடுத்துக் காட்டாகவோ, முன் மாதிரியாகவோ கொண்டு

## சிறுவர் இலக்கியத்துறை



ஒருவரேனும் வளர்ச்சி பெறுவது எமது மண்முனை வடக்கு கலாசார பேரவைக்குக் கிடைக்கும் பெரு வெற்றியாக அமையுமென்பது திண்ணம். முதலாவதாக

**அவரது குடும்பப் பின்னணியைப் பற்றி வினவிய போது,**

மட்டக்களப்பிலே இரத்தினம் வாத்தியார் என்று பிரபலமான ஆசிரியரின் மகன் என்றும் தனது அண்ணன் மாரான இராசதுரை, துரைராஜசிங்கம் என்போரும் ஆசிரியர்கள் என்றும், ஆசிரியர் குடும்பம் என பெயர் பெற்ற குடும்பம் எனவும் தெரிவித்தார். அவரது முதுமை அவரது கம்பீரமான குரலை மறைத்து விட்டிருந்தது. அவரது அன்பு மனைவிதான் அருகே இருந்து அவரது உரைக்கு விளக்கம் தந்துதவினார்.

**அவரது சமூக வாழ்க்கையில் உள்ள அனுபவத்தைப் பற்றி வினவிய போது,**

தனது பன்னிரெண்டு வயதிலேயே வானொலியில் கதை கூறி வந்ததாகவும் பாடசாலையிலும் கிராமத்திலும், மொழி பெயர்ப்புக் கதைகளை நகைச்சுவை ததும்ப கூறுவதோடு அல்லது இதிகாசக் கதைகளை நகைச்சுவை ததும்ப சொல்வதன் மூலம் அறிவூட் டியமையும் கிராமத் தின் சிறுவர்களை அழைத்து ஒரிடத்திலே அமரச் செய்து கதை சொல்லுவதும் ஏனைய கலைகளை விட தனக்கு மிகவும் பிடித்த பணியாகவும் பொழுது போக்காகவும் இருந்ததாக கூறினார்.

மேலும், கிராமத்திலுள்ள சங்கங்களிலும் பிள்ளைகளுக்கு அறிவூட்டும் கதைகளை கூறியமையையும், ஆலய விழாக்களிலும் அறிவூட்டக்கூடிய கதைகள் வில்லுப் பாட்டுக்கள், செய்து மகிழ் வித் தமை யையும், அவர் மாணவனாக இருந்த காலத்திலே பாடசாலை மாணவ மன்றங்களிலும் சக மாணவர்களுக்கு மகாபாரதம் இராமாயணம் போன்ற இதிகாசங்களை இலகு தமிழிலே நகைச் சுவை ததும்ப கதைகளாக கூறி பல பட்டங்களும், விருதுகளும், கௌரவங்களும், பாராட்டுக்களும் பெற்றமையையும் துறை சார் அனுபவமாகக் கூறலாம் என்றார்.

**இளந்தலைமுறையினருக்கும் சமூகத்திற்கும் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

என வினவிய போது, அவர்களுக்கு எந்த புத்திமதி களையோ அறிவுரைகளையோ கூறுவதாயின் அவற்றை நகைச்சுவை கதைகள் மூலமாக எடுத்தியம்பும் போது நிச்சயமாக அது அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வடிவமாக அவர்களைச் சென்றடைந்து விடும். எனவே, அவர்களுக்கு நகைச்சுவைக் கதைகள் மூலம் சிறந்த அறிவைப் புகட்ட முடியும் என்று தான் ஆணித்தரமாக நம்புவதாகத் தெரிவித்தார்.

**கால ஓட்டத்திலே தங்களது கலைத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்ன?**

எனக் கேட்ட போது, பாடசாலையிலும் கிராமத்திலும் என மட்டுப்படுத்தாமல் தனது திறமையை வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் ஊடாக வெளிப்படுத்தி அவற்றினூடாக சிறுவர்களுக்கு நல்ல அறிவை போதிக்க முடியும் என்பதோடு, செயல் வடிவிலும் பலவித ஒலிகளை எழுப்பி சிறுவர் உணர்வைத் தூண்ட முடியும் என்பதையும் நிரூபித்தமையைக் குறிப்பிடலாம் என்றார்.

**தங்களது துறை வளர்ச்சிக்கு தாங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?**

என வினவிய போது, வானொலி, தொலைக்காட்சி,

கணணி, வீடியோ இவற்றை மட்டும் நம்பியிராமல் மாணவ மன்றங்களில் கையெழுத்துப் பிரதிகள் மூலமாகவும் கதை சொல்லும் ஆற்றலை விரிவுபடுத்தி வளர்ச்சியடையச் செய்யலாம் எனக் கூறினார்.

**தங்களுடைய துறை சார்பாக தங்களால் வழித்தோன்றல்கள் உருவாக்கப்பட்டுள்ளதா?**

எனக் கேட்ட வேளை, ஆம்! நிச்சயமாக என்று சந்தோஷம் பூத்த முகத்தோடு கூறினார். பல பாடசாலைகளிலும் பல மாணவர்கள் 'குட்டி மாஸ்டர்' எனும் புனை பெயருடன் அழைக்கப்பட்டு வருகிறார்கள் என்றும், இனியும் உருவாகி வருவார்கள் என்றும் ஆணித்தரமாகக் கூறினார்.

**ஆவணப்படுத்தல்கள் ஏதேனும் உள்ளனவா?**

எனக் கேட்ட போது, சிறுவர்களுக்கு ஏற்ற இலகு மொழி நடையிலே தமிழ்ப் பத்திரிகைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பாடசாலை விழாக்கள், கதைப் புத்தகங்கள் என்றும் மற்றும் தேனகம் போன்றவற்றிலும் ஆவணப் படுத்தப்பட்டுள்ளதாக பொதுவாகத் தெரிவித்தார். இவ்வாறாக அவர் ஒவ்வொரு கேள்விகளுக்கும் ஆழ்ந்து யோசனை செய்தபடியே விளக்கம் தந்திருந்தார். தனது 83ம் வயதிலே காலடி பதித்திருக்கும் அவரது முதுமையில் சிதறிக் கிடக்கும் ஞாபகங்களை ஒன்று சேர்த்தெடுத்து கூறியது பெரும் விஷயமாகவே கருதவேண்டியுள்ளது.

**மறக்க முடியாத விடயங்கள் ஏதாவது உள்ளனவா?**

என வினவிய போது, தாமதிக்காமலே பசுமரத்தாணியாய் அவரது உள்ளம் நிறைந்திருந்த விடயமாக சிறுவயதிலே, தமிழாசிரியர் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை புலவர் அவர்கள் தனது திறமையை, அதாவது பாடசாலையிலே மாணவர்களை கதை மூலம் வசீகரிப்பதைக் கண்டு வானொலிக்கு அழைத்துச் சென்று சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வழி வகைகள் செய்து கொடுத்ததை மறக்கமுடியாது என்று மனதார நன்றி உணர்வோடு கூறி நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

லண்டன் BUDS கழகம் அவரை அழைத்து 'கதைமாமணி' பட்டம் வழங்கி கௌரவித்தமையை விட புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை புலவரது செய்கையையே பெரும் பேறாக மறக்காமல் நினைவு கூர்ந்தார்.

திறமைகள் இருந்தும் வெளிப்படுத்த களங்களும், சந்தர்ப்பங்களும், ஊக்கம் தருவோரும் சரியாக அமையாத காரணத்தினாலேயே பலரது திறமைகள் இன்னும் வெளிக்கொணரப் படாமலேயே முற்றுப் பெறும் அவலநிலையில் இன்றைய எமது சமூகம் இருப்பது இந்த நேரத்திலே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாக அமைகின்றது. நிறைவாக,

**கடந்து வந்த பாதைகளில் ஏதேனும் பிரச்சனைகளை எதிர் நோக்கினீர்களா?**

எனக் கேட்க, பிரச்சனைகள் என்று கூறுமளவிற்கு எதுவுமில்லை என்று கூறி, தனக்கு இன்றுவரை பக்கபலமாயிருக்கும் அன்பு மனைவியை பார்த்து புன்னகைத்துக் கொண்டார். இத்தனை நேரமும் தமது பொன்னான நேரத்தினை எமக்காக ஒதுக்கி இனிய நினைவுகளை பதிவுகளாக்க இன்முகத்தோடு உதவியமைக்கு நன்றி கூறி அவரது ஆசிகளைப் பெற்றபடி விடை பெற்றேன்.

**நேர் கண்டவர்**

**திருமதி. தர்ஷிகா ஜெயந்**

# பண்டார வன்னியன்

**பாட்டு** : வன்னியன் ! பண்டார வன்னியன் !
வன்னியன் ! பண்டார வன்னியன் !
வற்றாத வள வன்னி நாடதனை
மாண்புடனே ஆண்டிருந்த வன்னியன்
அஞ்சா நெஞ்ச தமிழ் வன்னியன்
அஞ்சா நெஞ்ச தமிழ் வன்னியன்

ஏகாதிபத்திய ஆங்கிலேயரை எதிர்த்த திண்ணியன்
திறைகட்ட வேண்டிய பயம் காட்டியோரை எதிர்த்தவன்
வன்னி வளம் காத்திடப் போர்கொடி யுயர்த்தினன்
வெவ் சினங் கொண்டு போராடி வீர மரணமெய்தினன்
காட்டி கொடுத்த கயவ காக்கை வன்னியனின்
சூழ்ச்சிக் காலத்துக்குங்களை அழைத்து செல்கின்றேன்.

**இடம்** : பண்டார வன்னியன் அரண்மனை

**பாத்திரங்கள்** : பண்டார வன்னியன், கைலாய வன்னியன், பெரிய மெயினார், தூதுவன்

**பெரிய. மெயி** : அண்ணா.... ஆங்கிலத் தூதுவன் ஒருவன் வருகிறான்.

**தூதுவன்** : மகாராஜா தளபதி யுவெல் ஒலை தந்து இருக்கிறார்.

**பண்டா.வன்னி** : தம்பி கைலாய வன்னியா ஒலையை வாங்கி வாசி.

**கைலா.வன்னி :** (ஓலையை படித்தல்) மதிப்புக்குரிய பண்டார வன்னியனுக்கு மாட்சிமை தங்கிய தேசாதிபதி நோத்தின் தளபதி வரையும் நிருபம். யாழ்ப்பாண இராச்சியமும் வன்னியின் ஒரு பகுதியும் ஆங்கில பேரரசின் கீழ் வந்ததை தாங்கள் அறிவீர்கள். வன்னியரின் பரம்பரை வழக்கப்படி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தர்பாருக்கு வரக் கடமைப்பட்டுள்ளீர்கள். வழக்கம்போல வன்னியருக்குரிய சகல வரிசை வாத்தியங்களுடனும் வரவேற்கப்படுவீர்கள்.

**பண்டா.வன்னி :** (ஓலையை பறித்து) தர்பார்... அதற்கு நான் போக வேண்டுமா ? பிழைக்க வந்த வெள்ளையருக்கு இவ்வளவு அதிகாரமா?

**கைலா.வன்னி :** அண்ணா அவசரப்படுவது நல்லதல்ல. தர்பாருக்கு தாங்கள் போவதே நல்லது இதில் எவ்வித தவறும் இல்லை.

**பண்டா.வன்னி :** தூதரே நீர் போகலாம். பதில் அறிவிக்கப்படும் என உமது தளபதிக்கு கூறும்.

(தூதுவன் போதல்)

**பெரிய.மெயி :** அண்ணா! தர்பாருக்கு போவது தான் நல்லது. பிரித்தானிய பேரரசை ஏன் வீணிற் பகைக்க வேண்டும். அவர்களுக்கு உலகத்தில் எல்லா பாகங்களிலும் இராச்சியம் உண்டு.

**கைலா.வன்னி :** அவர்களிடம் பயிற்றப்பட்ட நல்ல படையுண்டு. நவீன போர் கருவிகளுண்டு துப்பாக்கிகளும் பீரங்கிகளும் ஏராளம் உண்டு.

**பண்டா.வன்னி :** ஹா...ஹா...ஹா... அப்படியென்றால் அவர்களுக்கு பயந்து நடுங்கி குற்றவியல் புரிய வேண்டும் என்று சொல்கிறீர்களா?

**கைலா.வன்னி :** இல்லை அண்ணா! அப்படி அஞ்ச வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. எனினும் யுத்தத்தை தவிர்க்கும் முறையில் நாம் நடந்து கொண்டால் நமக்கும் நமது நாட்டிற்கும் நன்மை உண்டு.

**பெரிய.மெயி :** ஆங்கிலேயர் ஏற்கனவே முல்லைதீவில் கோட்டை ஒன்றை கட்டி விட்டனர். பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளனர்.

**பண்டா.வன்னி :** (கோபத்துடன்) நிறுத்து! வன்னியரின் வீரத்திற்கும் தன்மானத்திற்கும் ஒவ்வாத வகையில் அந்நியரின் வீரத்தை புகழ்கிறீர்கள். உங்களால் வன்னியர் பரம்பரைக்கே அவமானம்.

**கைலா.வன்னி :** அண்ணா நமது எதிரிகளின்திறமையையும்அவர்களுக்கு சாதகமான சூழ்நிலையையும் நாம் நன்றாக அறிந்திருந்தால் தான் அவர்களுடன் நாம் வெற்றிகரமாகப் போர் புரியலாம்.

**பண்டா.வன்னி :** அவர்களின் வீரத்தையும் வாய்ப்பையும் கண்டு நாம் தாழ்வு மனப்பான்மை கொள்ளக்கூடாது.

**கைலா.வன்னி :** நாம் தாழ்வுணர்ச்சியுடன் பேசவில்லை அண்ணா ! காக்கை வன்னியன் வெள்ளையர் பக்கம் சேர்ந்திருக்கிறான். அவனின் குட்டையை வெளிப்படுத்த தங்களின் விஜயம் பயன்படலாம்.

**பெரிய.மெயி :** எதற்கும் முன்னேற்பாட்டுடன் படையுடன் போவது தான் நல்லது.

**பண்டா.வன்னி :** பெரிய மெயினார் தர்பாருக்கு போக படைகளை ஆயத்தம் செய்.

**பெரிய.மெயி :** உத்தரவு அண்ணா.

## காட்சி - 2

(லெப்டினன் யுவெல் கம்பீரமாக அமர்ந்திருக்கும் வேளை பண்டார வன்னியன் வருகிறான்)

**யுவெல்** : கமோன் வாங்க வன்னி தலைவரே, Sit down, தவிர்க்க முடியாத ஜோலிகளினால் தங்களை ஏற்கனவே அழைக்கவில்லை.

**பண்டா.வன்னி** : அதனால் என்ன ? இப்பொழுது விடையத்தை சொன்னாற் போதும்.

**யுவெல்** : கரிகட்டு மூலையும், முல்லை தீவையும் நாங்கள் காக்கை வன்னியனிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் பெற்று கொண்டோம்.

**பண்டா.வன்னி** : அப்படி என்றால் ?

**யுவெல்** : யாழ்ப்பாண இராச்சியமும் வன்னியின் ஒரு பகுதியும் எமது ஆணைக்குள் வந்து விட்டது என்பது தான் அர்த்தம். எல்லோருமே ஆங்கில ஆட்சிக்கு அடி பணியும் போது நீங்கள் மாத்திரம்

**பண்டா.வன்னி** : பணிந்து வாழ்ந்து பழக்கமில்லை.

**யுவெல்** : ஆணவமான பதில்.

**பண்டா.வன்னி** : அது எங்கள் பிறவி குணம்.

**யுவெல்** : பெருந்தவறு செய்கிறீர்.

**பண்டா.வன்னி** : தவறுக்கு பதில் சொல்ல சக்தி உண்டு.

**யுவெல்** : பண்டார வன்னியா! பகற் கனவு காண்கிறாய்.

**பண்டா.வன்னி** : கனவு காண்பவன் இந்த பண்டார வன்னியன் அல்ல நீதான்.

**யுவெல்** : ஆங்கிலேயரை எதிர்த்தால்,

**பண்டா.வன்னி** : அழிவு அல்லது வாழ்வு தானே.

**யுவெல்** : அதிக நாளில்லை அந்த முடிவிற்கு.

**பண்டா.வன்னி** : முடிவு என்ன? வினா என்ன? வெற்றி வீரசுவர்கம்.

**யுவெல்** : விதியுடன் விளையாடுகிறீர்.

**பண்டா.வன்னி** : உங்கள் விதியை நிர்ணயிக்கும் காலம் நெருங்கி விட்டது.

**யுவெல்** : இனி வன்னி நாடு அழியும் வரை போர்க்களம் தான்.

**பண்டா.வன்னி** : வெள்ளையனே வெறும் பேச்சை நிறுத்து. மலை கலங்கினாலும் நிலை கலங்காத வன்னி தமிழன் பண்டார வன்னியனிடம் துப்பாக்கி முனையை காட்டி கலங்க வைக்க முடியாது.

**யுவெல்** : அப்படி ஆனால் முடிவு?

**பண்டா.வன்னி** : முடியாது என்பதே!

**யுவெல்** : முடிவு அதுவானால் நீங்கள் போகலாம்.

## காட்சி – 3

(புதுக்குடியிருப்பை அடுத்துள்ள கிராமப் பாசறைக்கு முன் பண்டார வன்னியனும் காக்கை வன்னியனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)

**காக்கை வன்னியன் :** மகாராஜா! தாங்கள் ஒரே வாள் வீச்சில் 60 வெள்ளையரை கற்பூர புல்வெளியில் வெட்டி வீழ்த்தி விட்டீர்கள். இப்போ எட்வெட் மெட்சின் படை முல்லை கோட்டையை கைப்பற்றி விட்டது.

**பண்டார வன்னி :** கைப்பற்றி விட்டால் முழு வன்னி இராச்சியமும் கிடைத்து விட்டதாக பகற் கனவு காண்கிறான் வெள்ளையன். அவர்களது எண்ணம் ஈடேறாது.

**காக்கை வன்னியன் :** ஆம் மகாராஜா! தங்கள் வீரத்தைப்பற்றி அவர்கள் அறியவில்லை. அதனால் தான் இவ்வளவு கொட்டமடிக்கிறார்கள்.

**பண்டா.வன்னி :** காக்கை வன்னியா! நான் தனியொருவன் என்றாலும் என் போர் வாள் வெள்ளையரின் தலைகளை சீவி எறியும்.

**காக்கை வன்னியன் :** தங்களுக்கு துணையாக நானிருக்கும் போது வெள்ளையர்கள் வன்னி நாட்டை பிடித்துவிட முடியாது.

**பண்டா.வன்னி :** இந்த பண்டார வன்னியன் உயிருடன் இருக்கும் வரை வன்னி மண்ணை எவரும் அடிமைப்படுத்த முடியாது.

**காக்கை வன்னியன் :** மகாராஜா இதை தாங்கள் சொல்லியா தெரிய வேண்டும்? நாம் உடனடியாக இப்போ புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டிசுட்டான் செல்ல வேண்டும்

**பண்டா.வன்னி :** காக்கை வன்னியரே முல்லைத் தீவு கோட்டையை நாம் கைப்பற்றிய போது கப்டன் டிறிபெக் புற முதுகு காட்டி ஓடி விட்டான். அவர் இப்போது படையுடன் வரக்கூடும்.

**காக்கை வன்னியன் :** டிறிபெக்காவது படையுடன் வருவதாவது. தங்களது பெயரை கேட்டவுடனேயே டிறிபெக் நிச்சயம் வரமாட்டன்.

**பண்டா.வன்னி :** காக்கை வன்னியா எதற்கும் நாம் ஒரு படையைத் திரட்டுவது நல்லது ஒட்டிசுட்டான் பக்கமாக ஒரு படை வருவதாக அறிகிறேன்.

**காக்கை வன்னியன் :** படையென்ற பெயரில் நாலைந்து நோஞ்சாங்கள் வருவார்கள். அவர்களை தோற்கடிப்பது மிகவும் சுலபம்.

(கப்டன் டிறிபெக் படையுடன் வருதல்)

**காக்கை வன்னியன் :** இவனைப் பிடியுங்கள்...

**டிறிபெக் :** Arrest...

(படையினர் பண்டார வன்னியனை கைது செய்கின்றனர்.)

**டிறிபெக் :** ஹாஹ்....ஹாஹ்.... வகையாக மாட்டி கொண்டாய் பண்டார வன்னியா காக்கை வன்னியனை அலட்சியம் செய்தது ஞாபகம் இருக்கிறதா?

**பண்டா.வன்னி :** துரோகி... காக்கை வன்னியா என்குலத்தை கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! நச்சு பாம்பே! நயவஞ்சகப் பேயே! என்னைக் காட்டி கொடுத்து விட்டாயடா பாவி (காறி உமிழ்கின்றான்)

காக்கை வன்னியன் : ஆம்! நான் தீட்டிய திட்டத்தில் நீ இப்போ மாட்டி கொண்டாய். உன் வாய்க் கொழுப்பு இன்னும் அடங்கவில்லையா?

பண்டா.வன்னி : சுய நலத்தில் பிறந்த சோம்பேறியே! என்னை காட்டிக் கொடுத்த அறிவிலியே! உன்னை வன்னி மண் உள்ளவரை காறியுமிழும்.

காக்கை வன்னியன் : பாவம்! வாள் வீரம் பலிக்கவில்லை வாய் வீரம் பேசுகிறான்.

பண்டா.வன்னி : வாள் எடுத்து போர் செய்யத் தெரிந்திருந்தால் இன்று நீ பணிந்து வெள்ளையனுக்கு குற்றவியல் புரிந்திருக்கமாட்டாய்.

காக்கை வன்னியன் : பண்டார வன்னியா! உனக்கு பித்தம் தலைக்கேறிவிட்டதா?

பண்டா.வன்னி : ஆம். அது உன் தலையிலேயே நிரந்தரமாக தங்கிவிட்டது. வெள்ளையன் போட்ட எச்சில் இலைக்காக என்னையும் என் பொன் நாட்டையும் காட்டிக் கொடுத்து விட்டாயே பாவி.

காக்கை வன்னியன் : என்னை விட ஊர் பேர் தெரியாத குமார சிங்கன் வீரன் என்று நினைத்து உன் தங்கையை திருமணம் செய்து கொடுத்தாயே இப்போழுது அந்த வீரர் எங்கே ?

பண்டா.வன்னி : குமார சிங்கன் வன்னியின் தாய் நாட்டிற்காக மார்பிலே குண்டு பட்டு வீர சுவர்க்கம் அடைந்து விட்டானடா. உன்னைப் போல எம்மை காட்டிக் கொடுக்கும் எட்டப்பனாக செயற்படவில்லையடா.

காக்கை வன்னியன் : (நகை செய்தவனாக) முட்டாள் தனமாக உயிரை விடுபவனுக்கு பெயர் வீரன், தியாகி. பண்டார வன்னியா உன் வாய்ப்பந்தலை நிறுத்திவிட்டு மன்னிப்பு கேள். துரைகள் உன்னை மன்னிப்பார்கள்.

பண்டா.வன்னி : (உரக்க சிரித்து) நான் உன்னை போல கோழையாக இருந்தால் உனது எண்ணப்படி நடந்திருப்பேன். காக்கை வன்னியா வெள்ளையருக்காகப் பரிந்து பேசி அதற்குரிய கூலியைப் பெற்றுக்கொள்.

டிறிபெக் : போதும் நிறுத்து! நீதிமன்றத்தில் நீ சொல்ல வேண்டியதை சொல்.

பண்டா.வன்னி : (உரக்க சிரித்து) உங்களுக்கும் ஒரு நீதி இருக்கிறதா ?

டிறிபெக் : ஆங்கில இராச்சியத்தை அவமதிக்காதே. மதித்து நடந்தால் உன்னை மன்னித்து விடுவோம். இவனை இழுத்து செல்லுங்கள்.

பண்டா.வன்னி : என்னை இழுத்துச் செல்ல இவர்களால் முடியாது. ஏன் இந்த சிரமம்? நானே வருகின்றேன். என்னதான் விசாரிக்கபோகிறீர்களோ பார்ப்போம்!

## காட்சி – 4

(வெள்ளையரின் பாசறை நீதி மன்றம் நடுவில் உள்ள ஆசனத்தில் லெப்டினன் யுவெல் அமர்திருக்கிறார். அவரின் ஒருபக்கத்தில் தளபதி டிறிபெக்கும் மறுபக்கத்தில் காக்கை வன்னியனும் நிற்கின்றார்கள். சிறிது தூரத்தில் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் நிற்கின்றார்கள். பண்டார வன்னியன் சங்கிலியால் கட்டப்பட்டு இழுத்து வரப்படுகின்றான்)

யுவெல் : மிஸ்டர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் தாங்கள் தானே?

பண்டா.வன்னி : (மௌனம்)

| | | |
|---|---|---|
| யுவெல் | : | மௌனம் சாதிப்பது எம்மை அவமதிப்பதாகும். உன் மேல் பல குற்றங்கள் உண்டு Man. |
| பண்டா.வன்னி | : | நீதியை மறைத்து வஞ்சகத்தை முன் நிறுத்தி நாடகம் ஆடும் போது எப்படி பேச வரும்? |
| யுவெல் | : | முல்லைத் தீவில் கோட்டையை இடித்தது ஒரு குற்றம். கற்பூர புல்வெளியில் ஆங்கில வீரர் 60 பேரை ஒரே வாள் வீச்சில் கொலை செய்தது இன்னும் ஓர் குற்றம். ஆங்கில அரசாங்கத்தை இலங்கையில் இருந்து அகற்றுவதற்கு கண்டிய மன்னனோடு ஒப்பந்தம் செய்தது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம். இத்தனை குற்றங்களுக்கும் என்ன பதில் சொல்கிறாய்? |
| பண்டா.வன்னி | : | ஏன் இந்த அளவில் நிறுத்தி விட்டீர்கள்? முல்லைத்தீவுப் போரிலே கப்டன் டிறிபெக் வெறுங்கையனாக நின்றபோது, இன்று போய் நாளை வா என்று கூறியது ஒரு குற்றம். வன்னி மண்ணைக் காக்க துடித்தது இன்னுமொரு குற்றம். கறுவாய் வாங்க வந்த கயவர்களுக்கு அடிபணியாதது வேறோரு குற்றம். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். |
| யுவெல் | : | சடாப்! நாவை அடக்கிப் பேசு. இது எமது நீதிமன்றம் என ஞாபகம் இருக்கட்டும் |
| பண்டா.வன்னி | : | இது நீதியை நிலை நிறுத்தும் மன்றமும் இல்லை, இங்கே நீதியும் இல்லை. மறைந்திருந்து தாக்கும் மனம் கொண்டவர்களின் கண் துடைப்பு மன்றம். |
| யுவெல் | : | அதிகம் பேசாதே. உன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களுக்கு என்ன பதில் சொல்கிறாய்? |
| பண்டா.வன்னி | : | பதில்.... யாரை யார் கேட்க வேண்டிய கேள்வி? நான் கேட்பதற்கு நீர் பதில் சொல்லும். மனிதனின் பிறப்புரிமையை மதியாது ஏகாதிபத்திய வெறிபிடித்து சுழலும் உமது அரசாங்கம் குற்றம் செய்யவில்லையா? என்னுடைய பிரதேசத்தில் கோட்டை கட்டிப் போர் வீரரை நிறுத்தியது குற்றமில்லையா? |
| யுவெல் | : | கேலிக்கு இது இடமன்று. ஆங்கிலேயரை இலங்கையில் இருந்து அகற்ற சதி செய்தது? |
| பண்டா.வன்னி | : | இதற்கு சூழ்ச்சி செய்ய வேண்டியதில்லை. நேருக்கு நேர் சொல்கின்றேன், உங்களை இலங்கையில் இருந்து அகற்றினால் தான் எனக்கு நித்திரை வரும். |
| யுவெல் | : | சாதுரியமாகப் பேசி குற்றத்தை மறைக்க பார்கிறாயா? |
| பண்டா.வன்னி | : | அப்படி மறைத்து பல்லிளித்து தப்பிப் போகும் எண்ணம் எனது வரலாற்றில் இல்லை. |
| யுவெல் | : | நீ இப்பொழு குற்றவாளி, மன்னிப்பு கேள்! |
| பண்டா.வன்னி | : | நீ என்னிடம் மன்னிப்பு கேட்டால் உனது அரசாங்கத்திற்கு நன்மை உண்டு |
| யுவெல் | : | எம்மையும் நீதிமன்றத்தையும் அவமதித்ததற்காக உனக்கு தூக்கு தண்டனை வழங்குகின்றேன். |
| பண்டா.வன்னி | : | (வாளை உருவி) பண்டார வண்ணியனை தூக்கிலிட உன்னாலும் முடியாது, உன் பாட்டனாலும் முடியாது. பண்டார வன்னியன் இறப்பதாக இருந்தால் யுத்தம் செய்துதான் வீரச் சாவடைவான்..... வீரர்கள் இங்கிருந்தால் வாருங்கள் வாட் போருக்கு... (தூர இருந்து ஓர் ஆங்கில வெறியன் துப்பாக்கியால் சுடுகிறான்) |

பண்டா.வன்னி : நேர் நின்று போர் செய்யத் தெரியாத கோழையர் கொடுத்த பரிசு இந்த பண்டார வன்னியன் சிந்தும் இரத்தத்தில் இருந்து ஆயிரம் ஆயிரம் பண்டார வன்னியர்கள் தோன்றுவார்கள். வன்னி மாதாவே! உன் திருப்புதல்வனை பார்! சாவதற்கு நான் அஞ்சவில்லை தாய் மண் அடிமையாகப் போகின்றதே என்றுதான் கலங்குகின்றேன். காட்டிக் கொடுத்த காக்கை வன்னியா! உன் உடலைக் கிழித்து உன் இரத்தத்தால் வன்னி மாதாவிற்கு அபிசேகம் செய்ய முடியவில்லையே என்று தான் கவலைப் படுகின்றேன்... ஆ...... ஆ அன்பான பூமியே நான் மறவேன் வன்னி மாதா உன் அருந் தவப்புதல்வன் விடைபெறுகிறேன்.

(விழுந்து மடிதல் வெள்ளையர்கள் ஆர்ப்பரித்தல்)

டிறிபெக் : பிடிபட்டது வன்னி இராச்சியம், முழுவதும் அடங்கி விட்டது பண்டார வன்னியனின் அடங்காப்பற்று.

பாட்டு : வீராதி வீர பண்டார வன்னி மன்னவனே நீ
தீராத விருப்போடு வன்னி மாதா பற்றினால் போராடியே
நேர்நின்று போராட தெரியாத ஆங்கில வெறியனாலே
ஆவி துறந்தனையோ வன்னி நாட்டாரன்னியர்க் கடங்காரையா

நாட்டின் மானம் காத்த மன்னவா – நீங்க
மாழவில்லை எங்கள் மனதில் திண்ணமாய்
வாய்மையதை ஊட்டி நிற்கின்றாய் கண்ணியமாய்
ஓடும் இரத்தத்திலிரண்டரக் கலந்துர மூட்டி நிற்கின்றாய். (நாட்டின்......)

வன்னிமாதா மானம் காக்க உன் மூச்சை
எங்களுக்குத் தந்தடக்கினாயே யுன்பேச்சை
சிந்தையிலே உங்கள் புகழ் தன்னை வைத்துமே
ஆங்கிலேய அடிமை விலங்கை யடித்துடைப்போமே (நாட்டின்......)

உடன் பிறந்ததே கொள்ளும் வியாதிபோலவே – என்றும்
உடனிருந்தோர் காட்டிக் கொடுத்த கதைகள் பலவே
கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்தான் எட்டப்பனே
பண்டார வன்னியனைக் காட்டிக் கொடுத்தான் காக்கை வன்னியனே..
(நாட்டின்......)

-நன்றி-

**முத்தமிழ் விழா 2017ம் ஆண்டுக்கான திறந்த போட்டியில் முதலாமிடம் பெற்ற நாடகம் - மட்/புனித மிக்கேல் கல்லூரி**

# கலைஞர்களின் நினைவுப்பதிவு

## திருமதி. கமலா ஞானதாஸ்

மட்டக்களப்பு மண்ணில் கலைக்காக தம்மை அர்ப்பணித்து ஒரு கலைச் சந்ததியை உருவாக்கியுள்ள திருமதி.கமலா ஞானதாஸ் அவர்களை அவரது கலைப்பணி தொடர்பாக கலந்துரையாடி அதனைப் பதிவு செய்வதற்காக அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**தங்களது குடும்பப் பின்னணி பற்றிக் கூறுங்கள்?** என் நாம் கேட்டதற்கு,

ஐயாத்துரை. புவனேஸ்வரி தம்பதிகளின் நான்கு புதல்வியர்களுள் இரண்டாவது புதல்வியாக 1944ம் ஆண்டு புரட்டாதி மாதம் ஒன்பதாம் திகதி மட்டு நகரின் மத்தியில் உள்ள தாமரைக்கேணி என்னும் இடத்தில் பிறந்தேன். நான் வின்சன் மகளிர் உயர்தர பாடசாலையின் மாணவி. 12.09.1982 இல் திரு. தேவதாஸ் ஞானதாஸ் என்பவரை திருமணம் செய்து கொண்ட எனக்கு திரு.கௌசிகன் என்ற ஒரு மகன் இருக்கின்றார். எனது கடைசி சகோதரி திருமதி.சுகந்தா குருபரன் அவர்களும் ஒரு இசை ஆசிரியர் எனக் கூறினார்.

**தங்களது துறையில் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் எவை?** எனக் கேட்டதற்கு,

எனது பத்தாவது வயதில் நடன ஆசிரியர் அமரர் கைலாயப் பிள்ளை அவர்களிடம் நடனம் கற்க ஆரம்பித்தேன். பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட எனக்கு நடனக் கலை மீது இருந்த ஆர்வம் காரணமாக அதில் மேலும் தேர்ச்சி பெற இந்தியா சென்றேன். எனது தாய், நான் நடனக் கலை மீது கொண்ட ஆர்வத்தை புரிந்து கொண்டு, இந்தியாவில் அடையாறு திரு.கே.இலட்சுமணன் அவர்களிடம் கல்வி கற்க அனுப்பி வைத்தார். இரண்டு ஆண்டுகள் நடனக் கலையில் தேர்ச்சி பெற்று இலங்கைக்கு வந்தேன். அக்காலத்தில் இவ்வாறு இந்தியா சென்று நடனக் கலை கற்பது மிக அருமையாக இருந்தது. எனது திறனை விருத்தி செய்ய மீண்டும் இந்தியா சென்று இரண்டு

### நடனத்துறை

வருடங்கள் 'நட்டுவாங்கப் பயிற்சி' பெற்று முழுமையான நடன ஆசிரியராக எனது பணியை ஆரம்பித்தேன். ஆனால் நடன ஆசிரியர் நியமனம் வழங்கப் படவில்லை. இதற்காக மனம் தளரா மல் வீட்டில் "பரத கலார்ப்பணா" என்ற பெயரில் நடனப் பள்ளி ஒன்றை ஆரம்பித்தேன்.

அதன் பின்னர் 1975ம் ஆண்டு முதல் தற்காலிக நடன ஆசிரியராக மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையில் ஏழு ஆண்டுகள் கடமை புரிந்தேன். அக்காலப்பகுதியில் பல நடனப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து தேசிய மட்டத்திலும் அவை பரிசுகளைப் பெற்றன. பின் 1982இல் முதன் முதலாக விபுலானந்தா இசை நடனக் கல்லூரி ஆரம்பித்த போது அதன் விரிவுரையாளராக நிரந்தர நியமனம் பெற்றேன் எனக் கூறினார்.

**தங்களது துறை சார்பாக தங்களால் வழித்தோன்றல்கள் உருவாக்கப் பட்டுள்ளதா?** எனக் கேட்டதற்கு,

இன்று நடன ஆசிரியர்களாக இருப்பவர் கள் பலர் எனது மாணவிகளாக இருப்பது எனக்கு பெருமையைத் தருகின்றது. இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் கூட எனது மாணவர்கள் பலர் சிறந்த நடன ஆசிரியர்களாகக் கலைப் பணி ஆற்றுவதுடன், நடனப் பள்ளிகளை உருவாக்கி இலங்கைக்கு பெருமை தேடித் தருகின் றனர். இவர்களில் திருமதி.மாலதி யோகேந்திரன் நோர்வேயிலும், திருமதி.பிறிம்மினி விமல்ராஜ் லண்டனிலும், திருமதி.டயனா மிக்குனாய் ஜேர்மனிலும், திருமதி.ஷெரினா பிரான்சிலும், திருமதி.பவாநிதி செல்வக்குமார் லண்டனிலும் நடன ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

இன்னும் சிலர் நமது நாட்டில் இசை நடனக் கல்லூரி விரிவுரையாளர்களாகவும், நடன ஆசிரியர்களாகவும் இருந்து நடனக் கலையை வளர்த்து வருகின்றனர்.

**கால ஓட்டத்தில் தங்களது கலைத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?** என நாம் கேட்டதற்கு,

அவர் கூறிய பதில், இறுவட்டுக்கள் பயன் படுத்துவது இன்று அதிகமாக உள்ளது. இலகு கருதியும், செலவு கருதியும் இம்முறையினைப் பயன்படுத்துகின்றனர். நேரடியாக பக்க வாத்தியங்களுடன் ஒரு நடன ஆற்றுகை இடம்பெறுமளவுக்கு இது அமையாது. பாரம்பரியங்கள் பேணப் படாமையும் இன்று தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது. இவ்வாறான விடயங் களால் குருவின் அனுசரணையுடன் ஒரு நிகழ்வு மேடையேற்றப்பட வேண்டிய தேவை இல்லாமையால் அவ்வாறான விபரீதங்களுடம் இடம்பெறவே செய்கின்றன எனத் தெரிவித்தார்.

**தங்களது வாழ்வில் மறக்க முடியாத விடயங்கள் ஏதும் உள்ளனவா?** என நாம் கேட்டதற்கு,

பொதுவாக பதிலளித்தார். எனது மாணவிகள் என்னை முதன்மை விருந்தினராக தங்களது கலை நிகழ்வுகளுக்கு அழைத்து நோர்வே, சுவிஸ்லாந்து போன்ற நாடுகளுக்கு சென்ற போது ஏற்பட்ட அனுபவங்கள் மறக்க முடியாதவை எனக் கூறினார்.

**நடனத் துறை வளர்ச்சிக்கு தாங்கள் கூறும் ஆலோசனைகள் எவை?** எனக் கேட்ட போது,

பெற்றோர் ஒத்துழைப்பு, தொடர் பயிற்சி, குரு சிஷ்ய உறவு முறை பேணப்படல், அர்ப்பணிப்பு மனப்பாங்குடன் ஆசிரியர்கள் கடமையாற்றல், ஒழுக்கம் பேணப்படல், தெய்வ பக்தி, குரு ஆசி, பெற்றோர் ஆசி என்பவை கடைப்பிடிக்கப் படுமானால் நடனத்துறை மேன் மேலும் வளர்ச்சி அடையும் எனக் கூறினார்.

**தற்போதைய இளந் தலைமுறையினருக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?** என நாம் கேட்ட போது,

பரதத்தின் சாஸ்திரியத்தைப் பேணல், ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து உழைத்தல், அர்ப்பணிப்புடன் செயல்படல், பாரம்பரியம் மாறாமல் நவீன உத்திகளைக் கையாளுதல், இறுவட்டுப் பயன்பாட்டை கூடியளவு தவிர்த்தல், பரதம் தெருவில் ஆடும் ஊர்வல நடனமல்ல என்பதை அனைவரும் உணர்தல் என்பவற்றை

கடைப்பிடித்து ஒழுகுங்கால் ஒரு சிறந்த நடனத்துறை கலைஞராக அவர்கள் வளர முடியும் எனக் கூறினார்.

இவருடன் கலந்துரையாடிய போது இவர் பற்றி நாம் மேலும் கேட்டறிந்த தகவல்கள், 1982இல் விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றிய இவர், 1996 தொடக்கம் 2002வரை அக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றதுடன், தேசிய கல்விக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார். கணவர் கலையில் ஈடுபாடு உள்ளவராக இருந்ததாலும், அவரது குடும்பத்தினரின் ஆதரவு கிடைத்ததாலும், கலை உலகில் பல சாதனைகளைச் செய்தார். பல நடன ஆசிரியர்களை உருவாக்கினார். இவரது வாழ்க்கைக் காலத்தில் நான்கு மாணவிகளுக்கு அரங்கேற்றம் நடாத்தியுள்ளார். பல நாட்டிய நாடகங்களை மேடையேற்றி புகழ் படைத்துள்ளார். அவற்றுள் "சீதா பவகரணம்", "கண்ணகி மகள்", "இராமர் சீதா சுயம்வரம்", "விவேகானந்த லீலை", "உயிர் மீட்ட உத்தமி" ஆகியவை குறிப்படத்தக்கவை.

மேலும் இவரது சாதனைக்காக பல கௌரவ பட்டங்களையும் பெற்றுள்ளார். கலாசார அமைச்சு வழங்கிய கலாபூஷணம் விருது, அரச நடன நாட்டிய நாடக விருது விழா 2015இல் "நடன திலகம்" விருது, மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசார பேரவை வழங்கிய தேனகக் கலைச்சுடர் விருது, மட்டக்களப்பு கலாலயம் வழங்கிய "நர்த்தன கலா துரந்தா" விருது, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கிய "வித்தகர் விருது", மாருதம் F.M வழங்கிய "சாதனை சிகரம்" விருது, கொழும்பு சுருதி லய மன்றம் வழங்கிய "கலாரத்னா" விருது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நிறைவாக அவரிடம் இருந்து கிடைத்த பல நினைவுகளை பதிவு செய்து கொண்டு நன்றி கூறி விடைபெற்றோம்.

நேர்கண்டவர்கள்

**திருமதி. சுபா சக்கரவர்த்தி**

**திருமதி. மலர்விழி சிவஞானசோதிகுரு**

# எங்கள் நிலம் இது

ஆற்றினில் மீன்கள் பாடும்
அடவியில் குயில்கள் பாடும்
காற்றது தென்றலாகக்
காயமும் குளிரப்பாடும்
ஊற்று நீர் தடாகப் பூவில்
உட்கார்ந்து அளிகள் பாடும்
போற்றிடும் எங்கள் மண்ணில்
பொழுதெலாம் பாட்டுக் கேட்கும்

குயிலதன் பாடல் கேட்டு
குதூகலம் கொண்டதாலே
மயிலது நடனம் ஆடும்
மாபெரும் கலைவிழா வாகும்
வியத்தகு காட்சி நாளும்
விதம் விதமாகத் தோன்றும்
நயத்தகு உள்ளமெல்லாம்
நன்கதில் தோய்ந்து போகும்

முந்தையர் ஆண்ட பூமி
முடியது சூடி எங்கள்
தந்தையர் ஆண்ட பூமி
தமிழினம் நிலைத்த பூமி
சிந்தையில் எண்ணும் போது
சிலிர்த்திடும் மேனி எல்லாம்
வந்தனை செய்க நாளும்
வாழிய கால மெல்லாம்

நானிலம் இதனை எண்ணில்
நரம்பெல்லாம் புடைத்துக் கொள்ளும்
மாநிலம் இதுவே எங்கள்
மாண்பினை எடுத்துக் காட்டும்
தேன்நிலம் இதனைப் போலத்
தேசமும் உண்டுமாமோ?
கோன்நிலம் தன்னில் எங்கள்
கொடியது பறக்க வேண்டும்.

**- வாகரைவாணன்**

# மட்டக்களப்பு மாநில கலை பண்பாட்டின் சிறப்பு இயல்புகள்

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்

இக்கட்டுரையில் மட்டக்களப்புத் தமிழ் மக்களின் கலை கலாசார விழுமியங்கள் பற்றி ஆராயும்போது அதன் மூலவேர்களையும், சிறப்பியல்புகளையும் கண்டுகொள்ளலாம். இதில் ஆங்காங்கே யாழ்ப்பாணத் தமிழ் மக்களுடையதும் மலையகத் தமிழர்களின் பண்பாட்டுப் பாரம் பரியங்களும் எடுத்துக்காட்டப்படும்.

கிழக்கு வாழ் தமிழ் மக்களுடைய பாரம் பரியக் கலைகள், கலாசார மரபு முறைகள் தனித்துவமும் சிறப்பும் வாய்ந்தவை. இவற்றுள் அதிகமான கலையம்சங்கள் அருவி மறைந்து போய்க்கொண்டிருக்கின்றன. எதிர்கால சந்ததியினரும் ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களும் இவை பற்றித் தெரிந்து கொள்வதற்காக இவற்றைப் பாதுகாக்க வேண்டியதும் ஆவணப்படுத்த வேண்டியதுமான கடமை நம்மைச்சார்ந்துள்ளன. பாரம்பரிய கலைகள் என்னும் போது கூத்து (வடமோடி, தென்மோடி, விலாசம்), பறை மேளக்கூத்து, குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வசந்தன் கூத்து, மகிடிக் கூத்து, மலையகத் தமிழ் மக்களுடைய காமன் கூத்து, பொன்னர்சங்கர், யாழ்ப்பாண மக்களின் வடபாங்கு, தென்பாங்கு, முல்லை மோடி, மன்னார் பிரதேச மக்களால் ஆடப்பட்டுவரும் மன்னார் பாங்கு, கொம்பு முறிப்பு, கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், கிராமியக் கலைகள் அம்மன் காவியம், எண்ணெய்ச்சிந்து ஆகிய சகலதும் பிரதானமானவை. குரவைக் கூத்து, பறைமேளக் கூத்து, மகுடிக் கூத்து, வசந்தன் கூத்து ஆகியவை அருகிப் போயுள்ளன. ஆங்காங்கே பாடசாலைக்

கலை நிகழ்ச்சிகளில் மட்டுமே இடம் பெறுகின்றன. இவைபற்றித் தனித்தனியே விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

இவைபோன்று தமிழ் மக்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியங்களும் ஆவணப்படுத்தப் படவேண்டும். அவற்றுள் சேரநாட்டுப் பண்பாடு, இந்து சமயப்பண்பாடு, சமய சமரசப்பண்பாடு, சாதிப்பண்பாடு, தொழிற் பண்பாடு, ஒழுக்க முறைப் பண்பாடு, நாட்டுப் பாடல் பண்பாடு, வடசேரி, தென் சேரிப் பண்பாடு, சமூகப் பொருளாதாரப் பண்பாடு, சட்ட திட்டப்பண்பாடு, கலை கலாசார, மொழி இலக்கிய பண்பாடுகளின் சிறப்புக்கள் பற்றியும், தமிழகத் தொடர்பு, இஸ்லாமியர், சிங்களவர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோருடைய தொடர்புகளால் பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை என்பதனை இக் கட்டுரையில் பார்க்கலாம்.

முதலில் தமிழ் மக்களது கலைகள் பற்றிப் பார்குமிடத்து கூத்தினை எடுத்துக் கொள்ளலாம். கூத்து மிகப் பழமையான மரபுக் கலையாக உள்ளது. வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, விலாசம் என மூன்று வகையான கூத்துக்கள் உள்ளன.

## வடமோடிக் கூத்து:-

வடமோடிக் கூத்துப் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் பொதுவாகக் கூத்து பற்றி பண்டைய இலக்கிய இலக்கணங்களில் என்ன சொல்லப் பட்டுள்ளதென்பதை நோக்கலாம். தொல்காப்பியர் 'இருவகை கூத்தின் இலக்கணம் அறிந்து" எனக் குறிப்பிட்டுள்ளதற்கு, உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் இருவகையான அகக் கூத்தென உரை எழுதியுள்ளனர். உரையாசிரியர் மேலும் தேசிமார்க்கம் என்றார். அடியார்க்கு நல்லாரோ பல மாதிரியான இருவகைக் கூத்துக்கள் பற்றிக் கூறியுள்ளார்.

வசைக் கூத்து -புகழ்க் கூத்து
வேத்தியல் -பொதுவியல்
வரிக்கூத்து -சாந்திக்கூத்து
சாந்திக்கூத்து -விரோதக்கூத்து
ஆரியம் -தமிழ்
இயல்புக்கூத்து -தேசிக்கூத்து
அகக்கூத்து -புறக்கூத்து

என பதின்னான்கு வகையான கூத்துக்கள் பற்றிய விளக்கங்களைத் தந்துள்ளார். இவற்றுள் இன்று எஞ்சியிருப்பவை ஆரியம், தமிழ் என்ற இருவகைக் கூத்துக்கள் மட்டுமே. இவைதான் காலப்போக்கில் வடமோடி, தென்மோடி என அழைக்கப்பட்டன. மோடி என்பது பகுப்பு, வகை, விதம், பாணி (*Style*) எனப் பொருள் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் இதனை கருநாடகம், நாடகம் எனவும் மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு எனவும் அழைப்பர்.

இனி வடமோடிக்கூத்தினைப் பற்றி நோக்குமிடத்து, கூத்தில் பிரதானமானவர் அண்ணாவியார். இவரே கூத்தினைப் பழக்கி நெறிப்படுத்துபவர். இவர் கூத்துக்களைப் பாடியவராகவும், பலகூத்துக்கள் ஆடிய அனுபவமுள்ளவராகவும், நல்ல குரல் வளமுள்ள வராகவும் விளங்குவார். கூத்தைப் பழக்கும் முன்னர் ஆடுவதற்கு விருப்பமானவர்களை அழைத்து சட்டம் கொடுக்கும் நிகழ்வு இடம் பெறும். 'சட்டம்' என்பது ஓலைச்சட்டம். பனை ஓலையில் கூத்துப் பாடல்கள் எழுதப் பட்டிருக்கும். அதனை குரல் வளத்திற்கும், ஆளுமைக்கும் ஏற்ப நடிகர்களிடம் பாத்திரங்கள் கொடுக்கப்படும். பின்னர் பழக்குதல், சதங்கை அணிதல் அடுக்குப்பார்த்தல் (ஒத்திகை), அரங்கேற்றுதல் என்பன இடம்பெறும்.

வடமோடிக் கூத்தில், ஆட்டம், பாட்டு, தாளம், உடை, ஒப்பனை என்பன பிரதான இடம்பெறும். உடையைக் 'கரப்பு உடுப்பு' என அழைப்பர். கிரீடம், கதை, வில், அம்பு, வாள் முதலானவற்றைக் கொண்டு கூத்தர்கள் களரியில் வருவர். வரவுத்தாளம், கொலுத் தாளம் என்பன மிக சிறப்பாகவிருக்கும். தாளங்கள் ஈரடி, நாலடி, எட்டடி, வீசாணம் (பாம்பு போல் வளைந்தாடுதல்) குத்தி மிதித்தல், துள்ளி மிதித்தல் என பல வகையான ஆட்டங்கள் இடம் பெறும். வடமோடி யில் கொலு வரும்போது,

'தக திக தா தெய்யாத் தெய் தெய்ய தாத்தெய்யத்தோம்- திகதிகதா' எனத் தொடங்கி 'தகததிங்கணதோம்' எனக்கடைசித்தாளம் இரண்டு அல்லது மூன்று தரம் இறுக்கி அடிக்கப்பட்டவுடன் முடிவு பெறும். பெண் கூத்தர்களுக்குரிய தாளம்,

"தத்திமித் திமி தெய்ய திமித் திமி
தாகிட சுந்தரி தோம் தததிங்கிண"" என

ஆரம்பித்து பின்னர் 'திந்தாரத் தில்லானா' என்பது

வரைக்கும் அதிகம் மாற்றமில்லை. நாலடி போடுதலுக்குப் பதிலாகப் பெண்களுக்கு 'குந்துதல்' என்ற நடன நிலைசேர்க்கப்பட்டுள்ளது. பின்னர்,

'தாதித் தத் தோ தீர் தத் தோ தீந் தோம்
ததக தா தீந்தக தெய் தித்தக தெய்'
என தாளம் முடிவு பெறும்.

### தென்மோடிக் கூத்து:-

தென்மோடிக் கூத்து, வடமோடியினின்று ஆட்டம், பாட்டு, தாளம், ஒப்பனை, உடை சகலவற்றிலும் வேறுபட்டுள்ளது. ஆட்டம் சிரமமும் நுணுக்கமுமானது. தென்மோடித் தாளத்தைப் பார்க்கின்

'ததித் தளாதக த தெய்ய தககிமி தாதிமித்தித் தெய்யோ
ததித்தளாதக தாதெய்ய திமிதக தாதிமித்த தித்தெய்யோ'

எனத் தொடங்கிய இம்முதற்பகுதி சுமார் 8-12 முறை திரும்பத்திரும்பப் படிக்கப்படும் போது கூத்தர் களரி முகப்பில் நின்றவாறே ஏற்றபடி ஆடுதல் நியதி. பின்னர் அரங்கினுள் இறங்கி ஆடும்போது,

'தச்சோந்திமி தந்தரிகிட திமிதக
தாதெய்யதா தளங்கு ததிங்கிணா!'

எனத் தொடர்ந்து சென்று 'தக தக தக தக தக தக (முண்டை) தாதெய்யா தளாங்கு ததிங் கின' என்பதுடன் முடிவடையும். கட்டியக்காரன், தலையாரி, சேவகன், தொழிலாளி, குமாரத்தி, முனிவர் ஆகிய கூத்தர் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட தாளங்களையும், ஆட்டங்களையும் கொண்டு அமையும். அரச கன்னியர் முதலானவர் களுடைய வரவின் போது, 'ததித்தளாதக' என்ற பொதுத் தாளக் கட்டு பெரும்பாலும் அப்படியே இடம்பெறும். மேலும் அவர்கள் ஆடவேண்டிய நுணுக்கமான ஆடல்களுக்குரிய தாளக்கட்டுகளும் சில மேலதிகமாகச் சேர்க்கப்படுகின்றன. வீரர்களுக் குரிய துரிதமான ஆட்டவீரர் பிரட்டிமிதித்தல், துள்ளிமிதித்தல், குந்திமிதித்தல் முதலானவை பொதுத்தாளக்கட்டுக்குரிய ஆட்டங்களின் போதும், கொச்சக முடிவிலும், தருக்கள் (பாட்டு) படிக்கும் போதும், பொருத்தம் நோக்கி இடம்பெறும். இவ்வாறான தென்மோடிக்குரிய பலவகை நுணுக்கம் வாய்ந்த தாளக்கட்டுக்களும், ஆட்டங்களுமே கூத்தர்களைக் களைப்படையச் செய்கின்றன.

இனி, இருவகைக் கூத்துக்களிலும் படிக்கப்படும் மெட்டு (ராகம்) வேறுபாடு கொண்டவையாக உள்ளன. வடமோடிக்கூத்தில் விருத்தங்களை அதிகம் நீட்டி இசைக்காது படிப்பதும், தென்மோடியில் அதனை நீண்ட ஓசை புறப்பட இழுத்துப்பாடுவதும் வழக்காக உள்ளது. வசனங்களும் அவ்வாறே தென்மோடியில்

நீண்ட ஓசையுடன் பேசப்படும். உடை, ஒப்பனை இரண்டிலும் இரு கூத்துக்களிடையேயும் அதிக வேறுபாடுண்டு. இவ்வாறான பாரம்பரிய மரபுக் கூத்துக்கள் கட்டாயம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## குரவைக்கூத்து:-

தமிழர் வாழ்வில் மிகப் பழங்காலந் தொட்டு இடம் பெற்று வந்துள்ளதொரு கலையே குரவைக் கூத்தாகும். இதுபற்றி சங்கப் பாடல்களிலும், சிலப்பதிகாரம், குன்றக்குரவை ஆச்சியர் குரவை போன்ற பகுதிகளிலும் பேசப்பட்டுள்ளது. கிழக்கிலங்கையில் கிராமங்கள் தோறும் இடம்பெறும் சமய விழாக்கள், கல்யாண வீடுகள், சாமத்திய வீடுகள் (பூப்பு நீராட்டல்) முதலான நிகழ்வுகளில் குரவை ஒலி எழுப்பும் செயல் இன்றும் இடம்பெறுகின்றது. சங்க இலக்கியங்களில் காணப்படும் குரவை வேறுபட்டது.

'வாங்கமைப் பழுறிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே'
நற்றிணை - 276

இது ஒரு கூத்து வகையைச் சார்ந்ததாக அப்பொழுது விளங்கியது. நல்ல முற்றிய கள்ளைக் குடித்து விட்டு முற்றத்தில் உள்ள வேங்கை மரநிழலில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து கைகோர்த்து கூத்தாக ஆடினர். மலை படுகடாம், திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் குரவை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தமிழ் அகராதி குரவை பற்றிக்கூறும் போது குரவை முல்லை அல்லது குறிஞ்சி நில மகளிர் தம்முட் கை கோர்த்தாடும் கூத்து வகை என்றும், பெண்டிர் விசேட காலங்களில் நாவால் குளறி எழுப்பும் மகிழ்ச்சி ஒலியே குரவையொலியாகும் எனவும் விளக்குகின்றது. ஆனால் இன்று கைகோர்த்தாடுதல், பாடுதல் முதலானவை மங்கி மறைந்து இன்னொலி மட்டுமே கிராமப்புறங்களில் விளங்குகின்றது.

சங்க இலக்கியங்களிற் காணப்படுவதையும் விடச் சிலப்பதிகாரத்திலேயே அதிகம் குறிப்புக்கள் இடம்பெறுகின்றன.

"குரவையென்ப எழுவர் மங்கையர்
செந்நிலை மண்டிலக் கடகக்கைகோத்து
அந்நிலைக் கொப்ப நிற்றலாகும்;"

இதன் பிரகாரம் ஏழுபெண்கள் சேர்ந்து இவ்வாடலையும் ஒலியையும் செய்வர். கண்ணகி வழிபாட்டுடன் குரவை தொடர்புபட்டது. சடங்குகளின் போது குரவை போடுதல் சிறப்பாக இடம்பெறும். கந்தசட்டி விரதம் தொடங்கி மூன்று நாளில் வள்ளியம்மை திருமணம் நடைபெறும் போது, குரவைத்திருநாள் என்றும், கல்யாணப் படிப்பு என்றும் இதனை அழைப்பர்.

குரவையிடும் போது பெண்கள் வலக்கையினை முன் மடித்து உயர்த்தி, தம்மேல் உதட்டிற்கும் மூக்கிற்கும் இடையில் வலது உள்ளங்கையை வளைத்துப் பிடித்துக் கொள்வர். இடக் கையினை மடித்து வயிற்றோடு வைத்துக் கொண்டு மேலே உயர்ந்து இருக்கும் வலக்கையினைத் தாங்கிப் பிடித்துக் கொள்வர். சிலவேளைகளில் இடக்கையால் அருகே நிற்கும் பெண்ணின் தோளைப் பிடித்துக் கொள்வதும் உண்டு. வாயிதழ் இரண்டையும் குவித்து நாவிளிம்புகளை மேலே நோக்கி வளைத்து நா நுனியால் நுனி அண்ணத்தையும், குவிந்திருக்கும் இதழ்களின் உட்புறத்தையும் வாயின் உள்ளிருந்து வரும் காற்றின் வேகத்தோடு இணைய வருடும் போது ஒரு வகையான ஒலி தோன்றும். இவ் ஓசையே குரவையொலியாகும். கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களிடையேயும் குரவை போடும் பழக்கம் உள்ளது.

காட்டில் வாழும் குறவர்கள் கள் குடித்து மகிழ்ச்சியில் இருக்கும் போது, குரவையிடுதலைக் காணலாம். அவர்கள் தலையில் கலசம், வில், அம்பு என்பவற்றை வைத்துக் கொண்டு ஆடுவர். இச்சந்தர்ப்பத்தில் ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து குரவை ஒலி எழுப்புவர். இவ்வாறான குரவை இன்று வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கின்றது. எனவே கட்டாயம் இவை ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## பறைமேளக் கூத்து:-

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை என்னும் கிராமத்தில் பறைமேளம் அடிக்கும் வகுப்பினரால் மாத்திரமே இக்கூத்து ஆடப்பட்டுவருகின்றது. மிகப் பழமையான இக் கலையாடல் வேடம் அணிந்த இருவர் தமது பறைகளை அடித்து பல்வேறு தாளங்களுக் கேற்ப உடலை அசைத்து ஆடுதலே பறைமேளக்

கூத்தாகும். சிங்கள மக்களுடைய கண்டிய நடனத்திற்கும் இக்கூத்தின் ஆட்ட முறைகளுக்கும் இடையே சில நெருங்கிய ஒருமைப்பாடுள்ளது. கோயில் முன்றலில் சமதள அரங்கில் மக்கள் சூழ்ந்திருக்க இக்கூத்து நடைபெறும். இராஜவரவு, மந்திரிவரவு, கோணங்கிவரவு என அவரவர்க்குரிய வரவுத்தாளங்களைப் பறையில் எழுப்பி அவ்வோசைக்குத் தகுந்ததாக ஆடுவர். இதில் கதையம்சம் இராது. கதை இல்லாததாலும், ஒரு சமூகத்தினருக்கு மட்டுமே உரித்தாக இருப்பதாலும் ஏனைய சமூகத்தார் இக் கூத்தை ஆடவில்லை. இன்று பல்கலைக்கழக மட்டத்திலும் மாணவர்களால் இப்பறை மேளக்கூத்து ஆடப்பட்டு வருகின்றது. களுதாவளை கிராமத்திலும் தற்போது இக்கூத்து ஆடப்படுவதில்லை. எனவே வழக்கொழிந்து போகும் இக்கலையாடல் கட்டாயம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## மகுடிக்கூத்து :-

இக்கூத்து கிராமத்திற்கு கிராமம், பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டதாக உள்ளது. சித்திரை வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களின் போது, கிராம மக்களால் பொதுவான இடங்களில் சமதள அரங்கில் நகைச்சுவை கொண்ட நிகழ்வாக இடம் பெறும்.

மகுடிக்கூத்தில் ஒண்டுப்புலி என்ற குறவர் தலைமகன் மலையாள தேசத்திலிருந்து தனது மனைவி காமாட்சியுடன் கடல் கடந்து தனது கூட்டத்தாரையும் அழைத்துக் கொண்டு மட்டக்களப்பிற்கு வந்து, மட்டக்களப்பு மந்திரவாதிகளுடன் பந்தயம் இட்டு இறுதியில் வெற்றி பெறுவதாக மகுடி அமையும். மகுடிக்கூத்தில் இடைக்கிடையே மலையாளத்தான் மந்திரமா? மட்டக்களப்பான் மந்திரமா? சிறந்தது என்று பந்தயம் பிடிப்பர். மகுடி என்ற சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. மந்திரங்களைக் காட்டும் விளையாட்டு, மட்டக்களப்பு மந்திரம் என்றெல்லாம் கூறுவர். நாடகப் பாங்கில் மகுடி இடம் பெறும். மூன்று வகையான கூத்துக்கள் மட்டக்களப்பில் இடம்பெற்றன. அவை ஒவ்வொன்றும் தனித்துவம் வாய்ந்தவை. அவைபற்றி விரிவாகப் பார்ப்பதோடு, வசந்தன் கூத்து, கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், எண்ணெய்ச்சிந்து, காவியம் போன்ற கலையம்சங்களையும் நோக்குவதாயின் கட்டுரை மேலும் விரிவடைந்துவிடும் எனக் கருதி நிறைவு செய்கின்றேன்.



# கலைஞர்களின் நினைவுப்பதிவு

## திரு.க. குருநாதன்

ஈழத் திருநாட்டிலே கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மாவட்டத்தின் நொச்சிமுனை என்னும் கிராமத்தில் கதிர்காமத்தம்பி, செல்லத்தங்கம் என்பவர்களுக்கு 1948 ஆடி 25ம் திகதியன்று மகனாகப் பிறந்தார் குருநாதன். இவரது குடும்பம் சமூக சேவையில் தம்மை அர்ப்பணித்த குடும்பம் என்றால் மிகையாகாது. கல்லடி உப்போடையில் அமைந்துள்ள சிவானந்த வித்தியாலயம், இராமகிருஷ்ணன் மிஷன் பெண்கள் பாடசாலை, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பேர்ச்சி அம்மன் ஆலயம் போன்றவற்றிற்கு முப்பாட்டன் சொத்துக்கள், நிலங்கள் நன்கொடை செய்யப்பட்டு பொது மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

குருநாதன் அவர்கள் தமது இளமைக் கல்வியை இராமகிருஷ்ணன் மிஷன் பெண்கள் பாடசாலையிலும், வின்சன் உயர்தர பாடசாலையிலும் கற்றதுடன், பின்னர் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் சாதாரண தரம் வரை கற்று உயர்தர கல்வியினை மட்/ சிவானந்த வித்தியாலயத்தில் விஞ்ஞான பிரிவில் கற்றார். மேலும் விவசாய டிப்ளோமாவை கண்டி குண்டகசாலையிலும், சட்டக் கல்வியினை கொழும்பு பல்கலைக் கழகத்திலும் வெளிவாரியாகக் கற்றார். அத்துடன் நாடகத் துறையில் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் கொண்டவர். இதன் காரணமாக நாடகத் துறை சார்ந்து ஜனாதிபதியிடம் பரிசும் பெற்றுள்ளார்.

எமது 'தேனகம்' நூல் வெளியீட்டிற்காக மட்டக்களப்பில் தமது திறன்களை வெளிப்படுத்தி சமூகத்திற்கு தமது பாரிய பங்களிப்பினை செய்த கலைஞர்களை தேடி அவர்களின் நினைவுகளைப் பதிவதன் ஊடாக எதிர்கால சமூகத்திற்கு அவர்கள் பற்றிய தகவல்களையும் அவர்கள் சமூகத்திற்கு விட்டுச் செல்லும் அந்த செய்திகளையும் பதிவதை எமது பிரதான நோக்கமாக கொண்டு நாடகத் துறை சார்பாக திரு. கதிர்காமத்தம்பி குருநாதன் அவர்களை நாம் அவரது இல்லத்தில் ஒரு மாலை வேளையில் சந்தித்தோம்.

### நாடகத்துறை

**நாடகத்துறையில் ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி கூறுங்கள்?** என நாம் கேட்டபோது,

நாடகத் துறை பற்றி நோக்கும் போது நாடக ஆசிரியராகவும், நடிகராகவும், நெறியாளராகவும் கடமை யாற்றியுள்ளேன். நான் தயாரித்து நெறிப்படுத்தி நடித்த நாடகங்களாக கறுப்பு றோஜா சிவப்பு றோஜா (சேக்ஸ்பியரின் 'ஒதல்லோ' நாடகத்தின் தமிழாக்கம் - இது 1971இல் கண்டியிலும், 1977 மற்றும் 1978ம் ஆண்டு காலப் பகுதிகளில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டது), 1980ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் திகதியன்று நடைபெற்ற நாடகப் போட்டியில் இறுதி ஏழு நாடகங்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு சிறந்த துணை நடிகனுக்கான ஜனாதிபதி தேசிய விருதினைப் பெற்றுக்கொடுத்த ஒருமலர் கருகியது என்ற நாடகமும் (இந்நாடகம் மகாத்மா காந்தியின் கொள்கையைக் கருப்பொருளாகக் கொண்டது. விதவைக்கு வாழ்வு கொடுத்தலே முக்கிய கருவாக இருந்தது. இந்நாடகம் மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது), பெண்களின் திருமண வாழ்க்கையை ரொக்கத்திலும் அழகிலும் தீர்மானிக்கும் சமூகத்திற்கு சாட்டையடி கொடுத்த மனக்கோலம் என்ற நகைச்சுவை நாடகமும் ( 1980ம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பின் பல இடங்களிலும், அம்பாறை, கல்முனை மற்றும் திருகோணமலை போன்ற இடங்களிலும் மேடையேற்றப்பட்டது) குறிப்பிடத்தக்கது.

மேலும் பிறரால் நெறியாழ்கை செய்யப் பட்டு நான் நடித்த நாடகங்களாக, வளர்மதி இலக்கிய மன்றம் நெறியாழ்கை செய்ய ஆரையூர் இளவல் கதை வசனம் எழுதிய நீறுபூத்த நெருப்பு; இது மகாபாரதக்கதை. அர்ச்சுணனாக வேடமேற்று நடித்தேன். இந்நாடகம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் மேடையேற்றப்பட்டது. மானம் காத்த மாவீரன் இராமாயணக் கதையாகும். இதுவும் வளர்மதி இலக்கிய மன்றம் தயாரிக்க ஆரையூர் இளவல் கதைவசனம் எழுதி நெறியாழ்கை செய்தார். இதில் இராவணன் பாத்திரமேற்று நடித்தேன். தருமம் காத்த தலைவன் இதுவும் வளர்மதி இலக்கிய மன்றம் தயாரிக்க ஆரையூர் இளவல் கதைவசனம் எழுதி நெறியாழ்கை செய்தார். இந்நாடகம் அரச கலாசார பேரவையின் நாடகப் போட்டியில் முதலாமிடம் பெற்றது. இது மட்டுமல்லாது சாம்ராட் அசோகன், இது நாடகமாகவும் வீடியோ படமாகவும் திரையில் காண்பிக்கப்பட்டது. இயக்குனர் தயாரிப்பாளர் கிருஷ்ணன். இதில் சாம்ராட் அசோகனாக நடித்தேன். இந்நாடகம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது. ஜூலியட் சீசர் நாடகம் பலாலியில் மேடையேற்றப்பட்டது. இதில் சீசராக நடித்தேன் எனக் கூறினார்.

**அடுத்து தங்களது நாடகத் துறை சார்பாக மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் உள்ளனவா?** என நாம் கேட்டதற்கு,

நாடக வாழ்க்கையில் தனக்கு பல மறக்க முடியாத சம்பவங்கள் இருந்த போதிலும் சில சம்பவங்கள் இன்னும் பசுமையான ஞாபகங்களாக இருப்பதாகக் குறிப்பிட்டு அவற்றை எடுத்து ரைத்தார். கறுப்பு றோஜா சிவப்பு றோஜா என்ற நாடகத்தில் கதாநாயகனாக நான் காதலியைக் கொலை செய்யும் காட்சியில் அதாவது ஒதல்லோ டெஸ்டிமோனாவை கொலை செய்யும் காட்சி தத்ரூபமாக அமைந்ததால் கண்டியில் முதலில் மேடையேற்றப்பட்ட போது பார்வையாளரில் ஒரு சிங்கள மாணவி (தமிழ் மொழி தெரியாதவர்) மயக்கமுற்று விழுந்தார். அதே போல் அதே காட்சியில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட போது தமிழ் மாணவி மயக்கமுற்று விழுந்தார். இது எனது நடிப்புக்கும் நெறியாழ்கைக்கும் கிடைத்த வெற்றி என்பதை மறக்க முடியாது என்றார். எனது நாடகங்களுக்கு house full board இடப்பட்டுள்ளதும் எனக்கு மறக்கமுடியாத சம்பவங்களாகும். மேலும் எனது நாடகங்களுக்கு சினிமா போல் 12 அடியில் பெரிய கட்டவுட் மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத் துக்க முன்பாக போட்டோம். அக்காலத்தில் இவை எல்லாம் யாரும் செய்யாத செயல்கள் என்பதால் இன்றும் மறக்கமுடியாத சம்பவங்களாக உள்ளன எனப் புழகாங்கிதத்துடன் தெரிவித்தார்.

**கால ஓட்டத்தில் தங்களது கலைத் துறையில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது?** என நாம் கேட்டபோது,

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கம் காரணமாக நாடகங்கள் தொலைக்காட்சி நாடகங்களாக உருவாகி திரையிடும் அளவுக்கு மாறியுள்ளது. விரைவில் எனது நண்பர்களுடன்

இணைந்து தொலைக்காட்சி நாடகம் ஒன்று தயாரித்து திரையிட உள்ளேன் எனத் தெரிவித்தார்.

**தங்களது துறை சார்பாக ஆவணப் படுத்தல் ஏதும் உள்ளனவா?** என எம்மால் கேட்கப்பட்ட போது,

மேலே கூறப்பட்ட நாடகங்கள் அனைத்தும் புத்தக வடிவில் என்னால் ஆவணப்படுத்தப்பட்டுள் ளன எனத் தெரிவித்தார்.

**கடந்து வந்த பாதையில் தாங்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளைப் பற்றிக் கூறுமாறு** கேட்ட போது,

சினிமாவுக்கு மக்கள் கொடுக்கும் ஆர்வத்தை நாடகத் துறைக்குக் கொடுக்க கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. மேலும் பொருளாதாரப் பற்றாக்குறை, நவீன மயப்படுத்தப் பட்ட நாடக அரங்குகள் மட்டக்களப்பில் இல்லாமை போன்றவற்றை கடந்த காலத்தில் நான் எதிர்நோக்கிய பிரச்சனைகளாகக் குறிப்பிடலாம்.

**தங்களது துறை சார்பாக தங்களால் வழித் தோன்றல்கள் உருவாக்கப்பட்டுள்ளதா?** என எம்மால் வினாவப்பட்ட போது, எனது நாடகக் துறை வழித்தோன்றலாக திரு. அ. இருதயநாதன் (கலைக் கோட்டன்) அவர்களைக் குறிப்பிடலாம். இவர் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். கலாபூஷணம், வித்தகர், தேனகக் கலைச்சுடர், நாடக சிரோன்மணி போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சமூகத்திற்கும் மற்றும் இளந் தலைமுறையினருக்கும் தாங்கள் ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?** என நாம் கேட்ட போது,

இளைஞர்களே புத்தாக்கம் பெறுங்கள். உங்களது துறை சார்ந்த அறிவை பெருக்குங்கள். தினமும் எதையாவது வாசியுங்கள். எதையாவது எழுதுங்கள். அனுபவங்களைப் பகிருங்கள். நவீன உலகுடன் நீங்கள் ஒத்து வாழ படியுங்கள் இல்லை யேல் நீங்கள் வயோதிபராவீர்கள். 60 வயது உடையவன் புத்தாக்கம் பெறுவானாகில் அவன் தான் இளைஞன். 16 வயது இளைஞன் புத்தாக்கம் பெறாவிட்டால் அவன்தான் வயோதிபன். ஆகவே கற்போம். புத்தாக்கம் பெறுவோம். என இளந்தலை முறையினருக்கு தனது ஆக்கபூர்வமான கருத்தை தெரிவித்தார்.

இவற்றை விட இவரது தொழில் தொடர்பாக இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். குருநாதன் அவர்கள் எழுதிய நூல்களாக சிங்கள மொழியிலிருந்ததை தமிழில் மொழி பெயர்த்து பல திருத்தங்களுடன் புத்தக வடிவமாக்கிய அரச காணி தொடர்பான நடிவடிக்கைக் கோவை, மற்றும் காணி உரித்துத் தொடர்பாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை, சட்ட ரீதியான காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல் கைந்நூல், கடற்கரை வலயம், காணிச் சட்டங்கள் தொடர்பான நடைமுறை விடயங்கள் பற்றிய கட்டுரைத் தொகுப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் காணிச்சட்டம் சம்பந்தமாக 1045 பயிற்சிப் பட்டறைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் விரிவுரையாற்றியுள்ளார். குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு , அம்பாறை, கண்டி ஹபரணை, கொழும்பு, பதுளை, மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் விரிவுரையாற்றியுள்ளார். இதுமட்டு மல்லாது 2014இல் லண்டன் பாராளுமன்றத்தில் இலங்கையில் காணி அபகரிப்பு பற்றி உரையாற்றி யதுடன் லண்டன் "கனடி" மண்டபத்திலும், லண்டன் றெயானஸ் வீதியிலுள்ள பொது மண்டபத்தில் 'பொது மக்களுக்கான காணி' பற்றிய பொதுக் கூட்டத்தில் பேச்சாளராகக் கலந்து சிறப்பித்துள்ளார். இவர் பேச்சாற்றல் பயிற்சியை SLIDAஇல் கற்று சான்றிதழ் பெற்றுள்ளார்.

குருநாதன் அவர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் அதாவது சினிமாவுக்கு மக்கள் கொடுக்கும் ஆர்வத்தை நாடகத் துறைக்குக் கொடுக்க கடுமை யாக உழைக்க வேண்டும் என்பதில் குறியாக செயற் பட்டு வந்துள்ளார். அத்துடன் பொருளாதார பற்றாக்குறை, நவீன மயப்படுத்தப்பட்ட நாடக அரங்கு இல்லாமை போன்ற பிரச்சனைகளுக்கு மத்தியிலும் நாடகத்துறைக்கு அளப்பெரும் சாதனைகளையும் அவரது வழித்தோன்றல்களையும் உருவாக்கி எமது நாட்டிற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பெருமைசாற்றியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

நேர் கண்டவர்

**திருமதி.திலகவதி ஹரிதாஸ்**

# நான் பட்ட பாடு

**- சிறுகதை**



2016ம் ஆண்டுக்கான முத்தமிழ் விழாப் போட்டியில் முதலாமிடம் பெற்றது.

கண்ணாடி முன் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்ததில் நேரம் சென்றதே தெரியவில்லை. "மகனே லேற் ஆகுது" என்ற என் அப்பாவின் குரலே என்னை எச்சரித்தது. மணியைப் பார்த்தேன் கடிகாரம் ஏழு ஐம்பது எனக்காட்டியது. சுற்றிவிட்ட பம்பரம் போல் சுழன்ற நான் ஒருமாதிரி எல்லாவற்றையும் தயார் செய்துவிட்டு ஏழு ஐம்பத் தைந்துக்கெல்லாம் ஓட்டோவில் ஏறிக்கொண்டேன். அனைவருக்கும் கையைக் காட்டியவாறு வீட்டி லிருந்து புகையிரத நிலையம் நோக்கி மிக அவசரமாய் புறப் பட்டேன். இத்தனை அவசரமும் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஓர் நேர்முகப் பரீட்சைக்கு செல்ல இரவு எட்டு பதினைந்து மணிக்கு புறப்படும் புகையிரதத்தை நோக்கியே.

ஒருவாறு ஓட்டோக் காரனின் அமோக ஒத்துழைப்பில் மிகவும் விரைவாக புகையிரத நிலையத்தை அடைந்தேன். மணியைப் பார்த்தேன், எட்டு மணி மனதில் நிம்மதி பிறந்தது. இருப் பினும் ஏதோ மனம் பதற்றப்பட எண்ட காற்சட்டை பக்கற்றில் கையை விட்டு டிக்கட் இருப்பதையும் உறுதிசெய்துகொண்டு முழு நிம்மதியுடன் புகையிரத நிலையத்தினுள் சென்று ஒரு கதிரையில் அமர்ந்துகொண்டேன்.

மீண்டும் என் மனம் ஏனோ சலசலத்தது. திரும்பவும் காற்சட்டை பாக்கட்டில் கையை விட்டேன், டிக்கட் என்கையில் சிக்கவில்லை. என் நிம்மதி சிட்டாய் பறந்தது. இறங்கியவுடன் இருந்த டிக்கட் இப்போ இல்லையெனில் வரும் வழியில்தான் தவறியிருக்க வேண்டும் என எண்ணிக்கொண்டு வெளியே செல்லும் நோக்கில் அருகில் நாகரீகத் தோற்றத்துடன் நேர்மையாளராய் காட்சி தந்த ஒரு மனிதரிடம் "என் பையை சற்றுப் பார்த்துக்கொள்ளுங்க இப்ப வந்திருவன்" என்று சொல்லிவிட்டு புகையிரத நிலைய வாயிலை நோக்கி ஓடினேன். வாயிலிருந்து புகையிரத நிலையம் வரை நான் நடந்து வந்த பாதை முழுவதும் தேடினேன். என் கண்கள் தீயாய் வேலை செய்தன. நானறிந்த சகல மதக் கடவுள்களையும் மனதில் எண்ணிக்கொண்டு நிமிர்ந்த வேளையில் புகையிரத நிலையக் கடிகாரம் மணி எட்டு ஐந்து எனக் காட்டியது. மித மிஞ்சிய பதற்றத்துடன் திரும்பிய என் கண்களில் திடீரென விழுந்த விம்பம் டிக்கட்

விற்பனை நிலையத்தினுடையது. எனக்குள் ஒரு சிறு நம்பிக்கை பிறந்தது. என் முழுவேகத்துடன் டிக்கட் விற்பனை நிலையத்தை நோக்கி விரைந்தேன். ஆனால் என் கால்கள் ஏனோ வேகம் எடுக்க மறுத்தன. எப்படியோ டிக்கற் விற்பனை நிலையத்தை அடைந்தேன்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் "எட்டு பதினைந்து புகையிரதத்திற்கு ஒரு டிக்கட் எடுக்கலாமா?" எனத் தாழ்ந்த குரலில் வினவினேன். என் எதிர்பார்ப்புக்கு பலனில்லை. அங்கிருந்த ஊழியர் டிக்கட் அனைத்தும் நிறைவடைந்து விட்டதாகக் கூறினார். என் நம்பிக்கை முழுவதும் சூரியனைக் கண்ட பனி போல மறைந்தது. இருப்பினும் இறுதி முயற்சியாக நான் வந்த பாதையை மீண்டுமொரு முறை ஊடுருவித் தேடிக்கொண்டு அங்குமிங்கும் அலைந்தேன். திடீரென்று யாரோ என்னை "தம்பி" என்று அழைத்தது கேட்டது. சட்டெனத் திரும்பினேன், அது டிக்கட் விற்கும் ஊழியரின் குரல். அவரது சிரித்த முகம் என் நம்பிக்கையைக் கூட்டியது. அவரருகே சென்றேன். "தம்பி ஒருவர் தன் டிக்கட்டை கன்சல் பண்ணிட்டார். ஒரு டிக்கட் என்றால் எடுக்கலாம்" என்றார். அவர் கூறிய வார்த்தைகள், நான் தவமிருந்து கேட்ட வரத்தை, இறைவன் "தந்தேன்" எனக் கூறுவது போலமைந்தது. டிக்கட்டை மிகவும் மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு நேரமும் எட்டுப் பத்து என்பதை உறுதிசெய்து கொண்டு என் பக்கமும் அதிஷ்டம் இருக்கிறது என எண்ணியவாறு நான் அமர்ந்திருந்த கதிரையை நோக்கிச் சென்றேன். அங்கு நான் கண்டகாட்சி என் நிலையை தலைகீழாய் தூக்கிவாரிப்போட்டது.

நானிருந்த அக்கதிரையில் என் பையுமில்லை. நான் பொறுப்பளித்த அம்மனிதரு மில்லை. மிதமிஞ்சிய பதற்றத்தில் மூழ்கியவனாய் அருகிலிருந்தோரிடம் விசாரித்தேன். ஆனால் யாருக்கும் எதுவும் தெரியவில்லை. நான் நிலைகுலைந்து போனேன். புகையிரத நிலையத்தில் அந்நிலைய ஊழியர்களே அறிந்திராத மூலை முடுக்குகளிலெல்லாம் என் பையைத் தேடி அலைந்தேன். டிக்கட் கிடைத்ததில் கட்டியெழுப்பப்பட்ட என் நிம்மதிக்கோட்டை முற்றாய் சரிந்து தரைமட்டமானது. இறுதியில் என் கல்வித் தகைமை, என் அடையாளங்கள், ஆவணங்கள், சான்றிதழ்கள், நேர்முகப் பரீட்சைக்கான கடிதம்



என அனைத்தையும் இழந்தவனாய் நாளை நேர்முகப் பரீட்சைக்கு செல்ல முடியுமா? முடியாதா? என்ற இரு முடிவுகளினிடையில் நான் நின்ற வேளை கடிகாரமும் எட்டு பத்துக்கும் எட்டு பதினைந்திற்கும் இடையில் நின்றது. இன்றைய நாள் இதைவிட மோசமாய் அமைய முடியாது என வருந்தி கண்கள் கலங்கியவனாய் தலையில் கைவைத்தவாறு ஒரு கதிரையில் அமர்ந்தேன்.

திடீரென எனது முதுகில் யாரோ தட்டியதால் திடுக்கிட்டு நிமிர்ந்தேன். நான் பையைப் பொறுப்பளித்த அம்மனிதன் என் முன் என் பையுடன் நின்றார். இறைவனே என் முன் தரிசணம் தந்தது போன்ற உணர்வு எனக்கு, அவர் என்னிடம் "நான் மிகவும் அவசரமாக மலசலகூடம் சென்ற வேளை பாதுகாப்பு கருதி உங்கள் பையையும் எடுத்துச்சென்றேன். பின் உங்களைத் தேடி அலைந்து இப்போது தான் கண்டு கொண்டேன்" என்றார். உச்ச நிலை அதிர்ச்சியிலும் மன உழைச்சலிலும் இருந்த நான் அவர் மீது கோபப்படுவதா? அல்லது நன்றி கூறுவதா? என செய்வதறியாது, பதற்றமும் நன்றியுணர்வும் கலந்த முகத்துடன் அவரிடமிருந்து என் பையைப் பெற்றுக்கொண்ட அதேவேளை புகையிரதத்தின் "கூ.........கூ........." என்ற சமிஞ்சை ஒலி என் காதுகளில் விழ கடிகாரத்தைப் பார்த்தேன் மணி எட்டுப்பதினைந்து.

**திரு.மனோகிதராஜ் ஜுட் சுரேன்ராஜ்,**
இல.06, பற்றிமாகிரி வீதி, மட்டக்களப்பு.

# பண்பு காத்திடடா

விந்தை மிகு உலகிலே
வேட தாரிகள் ஆடுகிறார்
சந்தையாய் உலகு நாளும்
சிதைவதை சிந்தியாது ஓடுகிறார்.

பணம் கார் பங்களா
பணக் காரராய் நடிக்கிறார்
மந்தையாய் ஓர்புறம் - சொந்த
மகவையே காமுகின்றார்.

விந்தை மிகு விஞ்ஞான வளர்ச்சி
விண்ணளாவும் மாளிகைகள்
சொந்தமாக்க எண்ணி – பலர்
சொந்த உறவுகளை தொலைக்கின்றார்.

கோயில்கள் பல கட்டி
கும்பாபிஷேகங்கள் நடத்துகின்றார்
கொண்டாட்டம் கும்மாளம்
குடும்பத்திலோ துளியும் பற்றில்லை.

சொந்தப் பிள்ளைகள் வாழ்வில்
சுகதுக்கங்கள் பாராது வாழ்வோரும்
தந்தை தாய் பேணாது
தன் சுகத்தைப் பேண்போரும்

என்ன உலகமடா மனிதா
எண்ணிப் பார்க்க மாட்டாயா
பண்பான வாழ்க்கை வாழ
பகுத்தறிவு உனக்கு போதாதா

பணமும் பகட்டும் படிப்பும்
பஞ்சு மெத்தை வாழ்வும்
கொஞ்சிக் குலவத் துணையும் - மட்டும்
நெஞ்சு நிறைந்த வாழ்வாமோ

காலமாற்றம் கூட – உன்
கண் திறக்க வில்லை
கனல் பறக்கும் வெயிலாய்
கடவுள் சுட்டெரித்த போதும்

**செல்வி. விதுாசினி இளங்கோ**
மட்/ விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்

சுனாமியாய் சினம் கொண்டு
சீறிப்பாய்ந்த போதும்
அடை மழையாய் அழிவை
ஆண்டவன் விட்ட போதும்

அடங்காது ஆடும் மனிதா
ஆறடி நிலமே சொந்தமடா
கலிகாலமென்று காலத்தே பழிபோடாது
கருணையோடு பண்பு காத்திடடா.

2016ம் ஆண்டுக்கான முத்தமிழ் விழா திறந்த கவிதைப்போட்டியில் முதலாமிடம் பெற்றது.

# யதார்த்த விருத்தம்

யாப்பு :- அறுசீர் கழி நெடிலடி
ஆசிரிய விருத்தம்



அண்டமும் அணுவும் சேர்த்து
அருதிரு அறிவும் ஊட்டி
பிண்டமும் பிதிரும் கோர்த்து
பிறறுறா நெறியுங்காட்டி
ஆண்ட அவ் அருந்தகைகள்
அரி ஆவி அல்லா சாட்டி
துண்டாய் தொய் துவேசம் தூக்கி
துயர்மிகுஞ் சமர் புரிந்தோமே

நீறிடு நீல கண்டன்
நிழலதைத் தொழுதிட்டாலும்
ஏறிடு பாவம் அஃக
ஏசுவென் றழுதிட்டாலும்
ஆறிடு ஆக்கப் பிறையோன்
அல்லாவை அழைத்திட்டாலும்
சோறிடும் ஆதிமூலம் ஒற்றைச்
சோதியே அறிந்து கொள்வாய்
உற்றுமை சேர்ந்தோன் கையில்
உணர்தகா நெறிகள் உண்டோ
ஏற்றெமைகாக்கும் நாதன்
எறிந்ததை ஏற்ற ல் நன்றோ
வேற்றுமை விதைத்திடு பேய்கள்
விளைப்பவை தீங்குக ளன்றோ
ஒற்றுமை ஓங்கிநின் றெங்கள்
உள்ளங்கள் நிறைநாள் என்றோ

**செல்வன்.**
**துரைராசசிங்கம் இகபரன்**
மட்/புனித மிக்கேல் கல்லூரி

2017ம் ஆண்டு முத்தமிழ் விழா பாடசாலை மட்ட மரபுக் கவிதை போட்டியில் முதலாமிடம் பெற்றது.



# கலைஞர்களின் நினைவுப்பதிவு

## கலாபூசணம் அ. இருதயநாதன்

மண்முனை வடக்கு கலாசாரப்பேரவையின் 2016 – 2017ம் ஆண்டுக்கான தேனகம் மலரின் கலைஞர்களின் நினைவுப்பதிவுக்கான தேடலில் கூத்து தொடர்பான அனுபவப்பதிவுக்காக ஓய்வு பெற்ற அதிபரும் சமாதான நீதிவானுமாகிய கலாபூசணம் திரு. அ. இருதயநாதன் அவர்களை ஒரு மாலை வேளையில் அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**உங்களது குடும்பபின்னணி பற்றி கூறுங்கள்?** என நாம் அவரிடம் கேட்டதற்கு,

கிழக்கிலங்கையின் மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பாலமீன்மடு எனும் கிராமம் நித்தமும் கடல் அலைகளின் ஓசையும், கீச்சிடும் புள்ளினப் பறவைகளின் கூட்டமும், கடற் காற்று வீசும் போது சலசலக்கும் தென்னங் கீற்றுகளின் ஓசையும், விரிந்து மணம் பரப்புகின்ற தாழை மலர்களின் நறுமணமும் வீசுகின்ற சூழலில் அமைந்துள்ளது. அழகான இக் கிராமத்தில் வாழ்ந்த பொன்னையா ஜோசப் அழகையா, திரேஸ் பூரணம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக 28.05.1949 இல் பிறந்தேன். றோமன் கத்தோலிக்க சமயத்தை சேர்ந்த எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. துணைவியார் பெயர் திருமதி தயாநிதி இருதயநாதன். ஆரம்பக் கல்வியை பாலமீன்மடு மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றேன். ஆசிரியர் தொழிலில் ஆரம்பித்து அதிபர் தரம் - 1 இல் ஓய்வு பெற்றேன் என தனது குடும்பப் பின்னணியை வர்ணித்தார்.

**சமூக வாழ்க்கையில் உள்ள அனுபவங்கள் பற்றி** நாம் வினாவியபோது,

சமூகத் தொடர்பும் கலையும் கலந்த வாழ்க்கையாக இன்னும் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. அந்த வகையில் சமாதான நீதவானாகவும் , முன்னாள்

**கூத்துத்துறை**

பாலமீன்மடு கிராம அபிவிருத்திச்சங்க தலைவராகவும், கிராமோதய சபைத் தலைவராகவும், பாலமீன்மடு ஸ்ரீ சித்தி விநாயகர் கலாமன்றத் தலைவராகவும், மட்டக்களப்பு மறைமாவட்ட கலை இலக்கியப் பேரவை செயலாளராகவும், சமூகத் தொடர்பு நிலைய செயற்குழு உறுப்பினராகவும், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளராகவும், முன்னாள் மண்முனை வடக்கு கலாசார பேரவை உறுப்பினராகவும், வெட்டுக்காடு கிராம சேவகப் பிரிவு சிவில் சமூக அமைப்பு தலைவராகவும் இருந்து சமூகத்திற்கு எனது பங்களிப்பை வழங்கியுள்ளேன் எனக் கூறினார்.

**துறை சார்ந்த அனுபவம் பற்றி கூறுங்கள்** என நாம் கேட்ட போது,

*1970ம் ஆண்டு தொடக்கம் கலைப்பணியாற்றி வருகின்றேன். கலை உலகில் குறிப்பாக சமூக, இலக்கிய, புராண, வரலாறு, வீதி நாடகம், வில்லிசை, வடமோடிக்கூத்து, கவிதை மெல்லிசை பாடல்கள், அம்மானைக் காவியம் போன்றவற்றை ஆக்கம் செய்து வருகின்றேன். ஆடிய கூத்துக்கள் என்று சொல்லும் போது பதின்நான்காம் போர், சராசந்தன் போர், வில்வளைவு, பாசு பதம், சுவடுகள் என்பனவாகும். எழுதி அரங்கேற்றிய கூத்துக்கள் எனும்போது கிறிஸ்துவின் பிறப்பு, சுவடுகள், ஏழு கன்னியர்கள், பணம்படுத்தும் பாடு, கல்வியின் பெருமை, குஞ்சுக் கீரை, வீர அபிமன்னன், அபிமன்னன் வதம் என்பவற்றைக் குறிப்பிடலாம் எனத் தெரிவித்தார்.*

**சமூகத்திற்கு மற்றும் இளந்தலைமுறையினருக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன ?**
எனக் கேட்டதற்கு,

கூத்து ஒரு குழு ஆற்றுகை. அகத்தினை ஆற்றுகைப்படுத்தும் ஒரு நிகழ்வாகும். சினிமா வில் இடம்பெறும் நவரச உணர்வுகளின் வெளிப்பாடுகள் கூத்திலும் உண்டு. அத்துடன் கூத்து மனித ஆளுமையினைக் கூட்டமைக்கும் ஆரோக்கியமான கருவி மாத்திரமல்ல, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு நற்பண்பினை வளர்க்கவல்லது. இதன் இரசனை இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தவல்லது. மேலும் இதிகாச தத்துவங்களை சமூகத்தில் விதைக்க வல்லதுடன், சிறந்த உடல் வாகினை ஏற்படுத்த வல்லது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும் எனக் கூறினார்.

**கால ஓட்டத்தில் தங்களது கலைத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்ன?** எனக் கேட்டதற்கு,

வட்டக்களரி அமைத்து இரவு இரவாக விடியும் வரை கூத்துக்கள் ஆடப்பட்டன. ஆனால் தற்போது நேரத்தின் தேவை, ரசிகர்களின் மனநிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு சில

மணித்தியாலங்களுக்குச் சுருக்கப்பட்டு ஆடப்படுகின்றது. அது மட்டுமல்லாது இன்று பாடசாலைகளில் தமிழ் மொழித் தின போட்டி நிகழ்வுகளுக்குக் கூட 20 நிமிடங்கள் ஆடும் கூத்துக்களாக அவை சுருக்கப்பட்டுள்ளன.

**தங்களுடைய துறை வளர்ச்சிக்கு தாங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன ?** என நாம் கேட்டபோது,

நீண்ட கூத்துப்பிரதிகளை சுருக்கமாக அமைத்தல் வேண்டும். அத்துடன் கூத்துக்கு பிரதான வாத்தியக்கருவி மத்தளமாகும். ஆனால் இன்று மத்தளத்தை பெறுவது கஷ்டமாக உள்ளது. ஆதலால் மத்தளத்துடன் தோல் வாத்தியங்களையும் வாசித்தல் வேண்டும். மேலும் கூத்தின் தருக்கள் இரண்டு மெட்டில் பாடக்கூடியதாக அமைந்திருக்கும். எது எவ்வாறெனினும் தருக்களை உரிய முறையில் பாடினால் அப்பாடல் சகலரையும் கவரக் கூடியதாக அமையும்.

அகவல் உரிய ஏற்ற இறக்கத்துடன் பாடா விட்டால் அது விருத்தத்தின் செல்வாக்கினுள் ஆக்கிரமிக்கப்படும். இது அகவலுக்குரிய பண்பை இழந்து விடும். அதே நேரம் கூத்தின் வசனங்களும் நாடக பாணியில் உரைக்கப்படுவது கூத்தின் தனித்துவத்தைக் குன்றச் செய்து விடும். மேலும் கூத்து ஒன்று ஆடி அரங்கேறும் போது ஆரம்பத்தில் காப்பு படிப்பதிலிருந்து களரி தொட்டுக்கும்பிட்டு வாழி பாடும் வரை பிறழ்வுகள் இடம் பெறவே கூடாது.

எனவே கூத்தினை முறைமையாக எதிர்காலச் சந்ததிக்கு கையளிக்க வேண்டிய கடமை நமக்குண்டு. இதனை கலை கலாசார திணைக்களம் கூத்தின் வாண்மையாளர்களின் உதவியுடன் செய்வது அவர்களது கடமையாகும் எனத் தெரிவித்தார்.

**தங்களுடைய துறை சார்பாக தங்களால் வழித்தோன்றல்கள் உருவாக்கப்பட்டுள்ளதா ?** என நாம் கேட்டபோது,

கூத்து மட்டுமல்ல எக் கலைஞனாயினும் சரி அவன் பெற்ற வித்தகத் தன்மையை தமிழ் உலகிற்கு கையளிக்க வேண்டும். இந்த வகையில் எனக்கு கூத்தின் பிதாமகன் பாலமீன்மடு அண்ணாவியார் சந்தியாகு சதாசிவம் கங்காணியார் ஆவார். 'தா தெய்யத் தெய்' என்னும் அடிப்படைத் தாளத்தினை எனது வலக்காலில் சீலையையும், இடக்காலில் ஓலையையும் கட்டி சீலைக்கால், ஓலைக்கால் என்ற அந்த நுட்ப வார்த்தைத் தாளத்தினை அன்று தந்தார். சிறிய வயது, அப்படியே உள் வாங்கினேன். உரம் பெற்றேன்.

எனது வழித்தோன்றல்கள் எழுவான், படுவான் என இரண்டு பிரதேசங்களிலும் உண்டு. 18 வருடங்கள் படுவான்கரையில் அதிபராகக் கடமையாற்றிய போது அவ்வப்போது அந்தந்த கிராமங்களில் இளைஞர், யுவதிகளை ஒன்று சேர்த்து நாடகம், கூத்து இவைகளைச் செய்தேன். 18 வருடங்களுக்கும், யுத்தம் முனைப்புப் பெற்ற காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் எனது வழித்தோன்றல்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். இதற்கான ஆதாரமும் என்னிடம் உண்டு எனக் கூறினார்.

**மறக்க முடியாத விடயங்கள் ஏதும் உள்ளனவா?** என நாம் வினவியபோது,

யுத்த சூழ்நிலையில் பல ஆற்றுகைகளை பல பிரச்சினைகளின் மத்தியில் அளிக்கை செய்தது மறக்க முடியாது. இதனால் அனைவரும் எனது கலைப்படைப்புக்களை ஏற்றனர். என்னையும் ஏற்றனர் எனப் பெருமிதத்துடன் கூறினார்.

இறுதியாக **தாங்கள் கடந்து வந்த பாதையில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்ன?** என நாம் கேட்டபோது,

1. அன்றும் இன்றும் ஒரே பிரச்சினை ஒரு நிகழ்வுக்கு கலைஞர்களை ஒன்று சேர்ப்பது கஷ்டமானது.
2. கலைஞர்களுக்கான உடை, ஆபரணங்கள் போன்றவை பெறுவது சிரமமானது.
3. கலைஞர்களுக்கான பொருளாதார முடக்கம். இது அவனது குடும்ப ஜீவனோபாயத்தை பெரிதும் பாதிப்பதுடன் விரிசலையும் ஏற்படுத்துகின்றது.
4. எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சி போன்ற பொழுது போக்கு சாதனங்களின் வருகையால் நாட்டுக்கூத்தை நாடி வருபவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது எனத்தெரிவித்த அவர், மேலும் பிரச்சினை விமர்சனம் என ஒன்று இருந்தால்தான் கலைப் பயணம் முழுமையான வெற்றி அடையும் என்பது உண்மையாகும் எனத் தெரிவித்தார்.

இவற்றை விட கலைக்கோட்டன் அவர்கள் தன்னைப் பற்றிக் கூறும் போது,

பத்திற்கும் மேற்பட்ட புராண இலக்கிய, வரலாற்று நாடகங்களும், ஆறு வட மோடிக் கூத்துக்களும் அரங்கேற்றினேன். இலங்கை ரூபவாஹினியில் 'வீர அபிமன்னன்' நாட்டுக்கூத்து கலையரங்கம் நிகழ்ச்சியில் ஒளி பரப்பாகியது. எனது வட மோடி நாட்டுக் கூத்து 1993 ல் அகில இலங்கை தமிழ் மொழித்தினத்தில் முதலாம் இடம் பெற்றுள்ளது. அத்துடன் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை 1997 ல் நடாத்திய வடமோடி நாட்டுக் கூத்து போட்டியில் முதலாம் இடத்தினையும், 1998 இல் மாவட்ட கலாசாரப் பேரவை நடாத்திய கூத்து போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை பெற்றுள்ள விருதுகள் பற்றி நோக்கும் போது வித்தகர் விருது, சிறந்த சாரணிய சேவைக்காக ஜனாதிபதியால் ADULD AWARD விருது, திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட யேசுசபையினால் "கலைஞானி" பட்டம், மட்டக்களப்பு மறைமாவட்ட கலைக்கோயில் கலை மன்றத்தினால் "கலைக் கோட்டன்" பட்டம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மட்டக்களப்பு மாநகர சபையுடன் இணைந்து வழங்கிய சிறந்த பாரம்பரிய நாடகக் கலைஞர் விருது போன்றவற்றைப் பெற்றுக் கொண்டேன். கிடைத்த விஷேட விருது "கொடகே" விருதாகும் எனக் கூறி தனது நேர்காணலை நிறைவு செய்தார்.

பல தகவல்களை அவரிடம் இருந்து பெற்ற திருப்தியுடன் நாம் அவரிடமிருந்து விடை பெற்றோம்.

நேர்கண்டவர்கள்
**திரு. தெ. இரவீந்திரமூர்த்தி**
**திரு. எ. பிரியகாந்தன்**

மட்டக்களப்பு தமிழ் மக்களிடத்தில் இருந்து மருவிப்போகும்

# பாரம்பரிய விளையாட்டுக் கலைகள்

"மட்டக்களப்பு தமிழகம் சமூக விஞ்ஞான மானுடவியல் ஆய்வாளர்களின் சுவர்க்கம்" என பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளார். மனித சமூகம் கூட்டாக வாழத்தொடங்குவதற்கு முன்பே விளையாட்டுக்கள் செல்வாக்கு பெற்றிருந்ததாக மானுடவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பண்டைய மட்டக்களப்பு இலங்கையின் நெற்களஞ்சியம் என பாராட்டப் படும் அளவிற்கு விவசாயம் மேற்கொள்ளப் பட்டது. விவசாயத்தில் ஈடுபடாத கோடை காலங்களில் பாரம்பரிய விளையாட்டுக்கள் பல விளையாடப் பட்டதாக அறிய முடிகின்றது. இன்று உலகமயமாக்கலால் எல்லாம் சிதை வுற்றுக் கிடந்தாலும் மட்டக்களப்பு மாவட் டத்தை பொறுத்தமட்டில் இவ்விளையாட்டுக்கள் அண்மைக்காலமாகவே இடம்பெறவில்லை எனலாம். விவசாயத்தில் ஈடுபடாத கோடை காலங்களில் மாலை நேரமானால் பரந்த வெளிகளில் ஆண்கள் வார் அடித்தல், தட்டிக்கோடு, ஆடும் புலி முதலான விளையாட் டுக்களில் ஈடுபட கிராமத்து தெருக்களில் கிட்டிப்புள், பிள்ளையார் கட்டை, குண்டு அடித்தல் முந்திரியங்கொட்டை யடித்தல் முதலிய விளையாட்டுக்களிலும் தமது நேரத்தை ஆரோக் கியத்துடன் செலவிட்டனர். வீட்டில் இருக்கும் இளம்பெண்கள் பொச்சை, கண்ணாம் பொத்தி, கீச்சுமாச்சுத்தம்பலம் எனவும் இவற்றை விட வீட்டு விறாந்தையில் நாயும்புலியும், தாயம் முதலிய விளையாட்டுகளையும் விளையாடினர்.

**திரு. மு.நமசிவாயம்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், மண்முனை வடக்கு.

இதில் சில விளையாட்டுக்களை ஆண் பெண் வித்தியாசமின்றி ஆடுமறித்தல், சுரக்காய் இழுத்தல், கள்ளன் பொலிஸ், ஊஞ்சல், வட்டக்காவடி முதலிய வற்றை விளையாடினர்.

மக்கள் செய்து வந்தனர். கொம்பு விளையாட்டு ஒரு கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் அக்கிராம மக்கள் இரு சேரிகளாகப் பிரிவர். இதனை தென்சேரி என்றும் வடசேரி என்றும்



ஒருகுழுவினர் இவ்வாறான சிறு விளையாட்டுக்களில் ஈடுபடும் அதேசமயம் மற்றொரு சாரார் கொம்புமுறி, போர்த்தேங்காய் உடைத்தல், மாட்டு வண்டில் ஓட்டம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு வந்தனர். இத்தகைய விளையாட்டுக்கள் எல்லாம் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து மருவி விட்டன என்றே சொல்லவேண்டும். இவ்வாறு மருவிச்செல்லும் விளையாட்டுக்களை சற்று மீட்டுப்பார்த்தல் பொருத்தமாக இருக்கும்.

இந்த வகையில்கொம்புமுறி விளையாட்டுப் பற்றி நோக்கும் போது இவ்விளையாட்டானது கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர்பு பட்டதாகவே காணப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டம் கண்ணகி அம்மன் வழிபாட்டில் பிரபல்யம் பெற்றதாக காணப்படுகின்றது.

கண்ணகியம்மன் சடங்கு நடைபெறும் காலப்பகுதியாகிய கோடை காலமாகிய வைகாசி மாதத்திலே அதிகமாக இக்கொம்புமுறி விளையாட்டு இடம்பெறும். கிராமத்தில் உள்ள மக்களுக்கு ஏற்படும் அம்மை, சின்னமுத்து, கண்நோய் முதலான நோய்களில் இருந்து சுகவாழ்க்கை ஏற்பட்டு வெப்பம் தணிந்து மழைவளமும் செல்வமும் ஏற்பட வேண்டும் என்பதற்காக மக்கள் கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் சேர்த்து ஒரு தெய்வீக காதல் கலந்த விளையாட்டாக இக் கொம்பு விளையாட்டை

அழைப்பர். தென்சேரி கண்ணகியினுடைய கட்சி (அம்மன்கட்சி) என்றும், வடசேரி கோவலனுடைய கட்சி (சுவாமி கட்சி) என்றும் கூறுவர். தமது பிரதேசத்தில் குடியேறியவர்களில் தந்தை வழியில் சேரி ( வாரம்) பிரிந்து கொள்கின்றனர். தந்தை தென்சேரியாக இருந்தால் மகனும் தென்சேரியாக இருப்பார். இங்கு ஏற்கனவே வாழ்ந்தவர்கள் மச்சான்முறையை உடையவர்கள் மாற்றுச்சேரியில் இணைந்தனர். இதனால் ஒரு குடும்பத்தில் தந்தையும் பிள்ளைகளும் ஒரு சேரியாக இருக்க தாய் மாற்றுச்சேரியில் இருப்பது தவிர்க்க முடியாததாகிற்று. தந்தை வழியே இந்தச் சேரிப்பிரிவு பிரதானப்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்விளையாட்டுக்கான கொம்புகள் கரையாக்கு மரத்திலே வெட்டப்படுகின்றது. இது இல்லாதபோது வின்னை, விடத்தல், கோணப்புளி ஆகிய மரங்களும் உகந்தவையாக கொள்ளப் படுகின்றது. இக் கொம்புகள் மரத்தில் இருந்தும் வேர்களில் இருந்தும் மரமும் வேரும் இணைந்ததாகவும் வெட்டியெடுப்பர்.

கொம்பு விளையாட்டின் படிமுறைகள்

1. கொம்பு நேர்தல்
2. கொம்புகளை தெரிவு செய்தலும் அதன் சம அளவை பேணலும்.
3. சேரி அல்லது வாரம் பிரிதல்

4. போர்த்தேங்காய் உடைத்தல்
5. இரு சேரியாரும் தேர் அமைத்தல்
6. இரு பகுதியினரும் ஊர்வலம் வருதல்
7. கொம்பு வரிதல்
8. கொம்பு எழுந்தருளி வருதலும் சபைக்கு காட்டலும்
9. கொம்பு பூட்டுதல், ஆடை கட்டுதல், கடைக்கால் கயிறு இடல்.
10. செவ்வாய்குற்றி நடல், வடம் கட்டல்
11. கொம்பு தாய் மரத்திலும் செவ்வாய் குற்றியிலும் இணைக்கப்படல்
12. கொம்பு முறியும் வரை இழுத்தல்
13. அம்மனுக்கு வெற்றி செல்லலும் பால் பொங்கலும்
14. திருக்குளிர்த்தி பாடலும் விழா முடிவுறலும்.

முதல் தினத்தில் இரு சேரியினரதும் பிரதிநிதிகள் எதிர் எதிரே தேங்காயை உருட்டி அனுப்புவதன் மூலம் தேங்காயை உடைப்பர். எந்த அணியினர் எதிரணியின் கூடியளவான தேங்காயை உடைக்கின்றார்களோ அந்த அணியே வெற்றி பெற்றதாக கருதுவர். இத்தேங்காய் உடைத்தலுக்கு பெரிதும் சிறுவர்களையே பயன்படுத்துவர்.

போர்த்தேங்காய் உடைத்தலைத் தொடர்ந்து முதலில் முறிக்கப்படும் கொம்பு கொழுகொம்பு என அழைக்கப் படுகின்றது. இதில் அம்மனின் கட்சியை வெற்றி பெற வைப்பது மரபாக உள்ளது.

தென்சேரி, வடசேரி ஆகிய இரு கொம்புகளும் செங்கோணத்திலும் சற்று ஒடுங்கியதாகவும் கூர்கோணத்திலும் இருப்பது மரபு. இரண்டாவது நாளில் கொம்பு முறிபோட்டி சுவாரஸ்யமான முறையில் இடம்பெறும். இரு சேரிக் கொம்புகளையும் இணைத்து கட்டப்படும் கொம்புகள் 'பில்லி' எனப்படும். பில்லி கட்டப் பட்ட கொம்பே விளையாட்டுக்கு தகுதியான கொம்பாக கருதப்படும். ஒரு மரத்தில் கட்டிய அரிப்பு (சிறுவட்டம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியின் கொம்பு தொடுக்கப்படும். அக்கொம்பில் கொழுவிய வடசேரி கொம்பிலே இன்னுமோர் அரிப்பினைப் பிணைத்து அதிலே பெரிய வடமொன்றை மாட்டுவர். அவ்வடத்தைப் பிடித்து பல பேர் இழுக்கும் போது இரு சேரியையும் சேர்ந்த திறமையானவர்கள் சிலர் தத்தம் கொம்புகளில் பல்வாய் கொம்பின் (தலைப்பகுதி) குச்சி (கொம்பின் இடத்திற்கு நடுஆணி) முதுகுமரம் (கொம்பின் கடைப்பகுதி) போன்ற உறுப்புக்களை எல்லாம் முறைப்படி பிடித்துக்கொள்வர். அரிப்பிற் பிணைந்த பெருவட்டத்தினை இருசேரிபொது மக்களும் இழுப்பர். பலருடைய இழுவை பொறுப்பி னால் இரண்டில் ஒரு கொம்பு முறியும். உடனே வெற்றியீட்டிய பிரிவினர் தமது சேரியின் பெயரைச் சொல்லி வெற்றிக்களிப்பில் ஆடிப்பாடி ஆனந்தமடைவர்.



கொம்பு முறிக்கப்பட்ட பின்னரே பல சிறப்பான நிகழ்வுகள் இடம்பெறும். தென்சேரி, வடசேரி ஆகிய இரு சேரியினரும் அலங்கரிக்கப்பட்ட பூம்பந்தல்களில் தத்தம் கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். இவ்வேளையில் அலங்கரிக்கப்பட்ட கண்ணகை அம்மன் சிலையையும் ஊர்வலமாக எடுத்து செல்வர். இத்தகைய சந்தர்ப்பங்களில் கண்ணகை அம்மன் காவியம், ஊர்சுற்றுகாவியம், உடுக்கு சிந்து என்பன பாடப்பட்டு தெய்வீக உணர்வை ஏற்படுத்த இளைஞர்கள் வசந்தன் கூத்தாடியும் மங்கையர் குரவையிட்டும், கும்மியடித்தும் தத்தம் திறமைகளை வெளிப்படுத்துவர். இதன்போது

"கோலப் பணிச்சோலை கொய்தெடுத்து
கொம்பு விளையாட்டுப் போகையிலே
வேலப்பர் வந்து மடி பிடித்து
மெத்தவும் சிக்கிக் கொண்டார் தோழி"

போன்ற பாடல்களை பாடுவதுடன் ஊர்சுற்றி செல்லும் போது வெற்றி பெற்றவர்கள் தோற்பவர்களை பற்றி வசைபாடுவதாக அமைந்த பாடல்களையும் பாடுவர். இப்பாடல்கள் ஓசை நயமும், பொருட்சுவையும் கொண்டதாகவும், கருத்தாளம் மிக்கதாகவும் இருந்ததாக பேராசிரியர் சு.வித்தியானந்தன் தமது நாட்டார் பாடல் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே"

என வடசேரியார் தமது கொம்பின் மகிமையைப் போற்றிப் பாட தென்சேரியாரோ

"தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திரத் தேருக்கு மேலே மேலே"

எனப் பாடி மகிழ்வர். இவ்வாறாக இரவு முழுவதும் ஆடல் பாடல்கள் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்று மறுநாள் காலையில் கண்ணகை அம்மனுக்கு திருக்குளிர்த்தி பாடி கொம்பு விளையாட்டை நிறைவு செய்வர்.

இக் கொம்புமுறி விளையாட்டைப் போன்று கிட்டிப்புள் விளையாட்டும் கிராமத்தில் பிரபல்யம் பெற்ற விளையாட்டாககாணப்பட்டது. இரு குழுக்களாக பிரிந்து சிறு குழி தோண்டி அதிலே கிட்டியை ( சிறிய கம்பு துண்டு ) வைத்து புள்ளால் (1, 1/2 முழம் அளவான கம்பு ) விசையை பயன்படுத்தி முன்னோக்கி தள்ளுவர் ( உத்துதல்). எதிரணி கிட்டியை பிடித்து தடுத்தாடும். பின்னர்

உத்தி முடிய கிட்டி அடித்து செல்வர். இதில் பங்கு பற்றும் ஒரு நபர் மூன்று முறை கிட்டி அடிக்கலாம். எல்லோரும் கிட்டி அடித்து முடிந்ததும் எதிரணியினர் கிட்டி பாடி (ஊதி) வருதல் வேண்டும். இந்நிலையில் பல இனிமையான பாடல்களை பாடி வருவர்.

"ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடி சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுக்கியடிக்கப் பாலாறு பாலாறு..."
"மாம்பட்ட மரபட்ட தென்னாலோடிய
பூம்பட்ட புளியம்பட்ட
பாடட்டோ பாடட்டோ..."

போன்ற பாடல்களைபாடி ஓடி வருவார்கள். இவ்வாறு பாடி வரும்போது மூச்சு விடாமல் பாட வேண்டும் மூச்சு விட்டால் அந்நபரை எதிரணியினர் துரத்தி பிடித்து தலையில் குட்டுவர். பாடி வரும் நபர் குழியை மிதித்தால் விளையாட்டு முடிவுறும். இதேபோல் கண்ணாண்டே கடையாண்டே விளையாட்டும் முக்கியம் பெற்ற ஒன்றாக சிறப்புற்று இருந்தது. இதில் விளையாடுகின்ற குழுவில் ஒருவர் கண்ணாண்டே கூறப்போவார் ஏனையவர்கள் ஒழிப்பார்கள். கூறப்போனவர்,

"கண்ணாண்டே கடையாண்டே
கடைக்கு வைத்த மாம்பழத்தை
கையோட காலோட கொண்டு வரயோ..."

என்று பாடுவார். ஒழித்தவர்கள் கொண்டுவா என்றதும் விளையாட்டு ஆரம்பமாகும்.

இதேபோல் ஊஞ்சல் விளையாட்டும் இப்பெரு நிலப்பரப்பில் வேருன்றி விருட்சமாகி நின்றது. சித்திரை மாதம் பிறந்தால் போதும் ஒவ்வொரு வீட்டிலும் ஊஞ்சல் கட்டுவார்கள். நாவல், வேம்பு தேற்றா போன்ற பலமான மரக்கிளைகளில் கயிற்றைக்கட்டி கீழ் பகுதியில் ஏற்ற பலகை போட்டு புது உடையணிந்து ஊஞ்சல் ஆடும்போது வருமே ஒரு ஆனந்தம் ஐயோ! சொல்ல முடியல்ல. முதியவர்களை வைத்து ஊஞ்சல் ஆட்டுவதும் இளம் பெண்களை ஏற்றி வைத்து ஆடும்போது சீன வெடியை கொழுத்தி ஊஞ்சலுக்கு கீழே போட்டு அவர்களை பயம் காட்டும் போது அவர்கள் சத்தம் போட்டுக் கத்துவதும்...... சிந்தித்து பார்க்கும் போது நேற்று இடம்பெற்றது போல் ஒரு பிரமை. இதன்போதும் பல இன்னிசையான பாடல்களை பாடுவார்கள்.

"கொக்குப் பறக்குது கொக்குப்பறக்குது
கோவிந்தன் வாசலிலே
எட்டுச்சலங்கையும் கட்டிப்பறக்குது
நம்மட வாசலிலே...
வேப்பம் மரத்திலே ஊஞ்சல் போட்டு
வேப்பண்ணன் பொஞ்சாதி ஏறியாட
நாக மரத்திலே ஊஞ்சல் போட்டு
நாகண்ணன் பொஞ்சாதி ஏறியாட
முருங்கை மரத்திலே ஊஞ்சல் போட்டு
முருகண்ணன் பொஞ்சாதி ஏறியாட
புளியமரத்திலே ஊஞ்சல் பொட்டு
புளியண்ணன் பொஞ்சாதி ஏறியாட...."

போன்ற பாடல்களைப் பாடி ஆடுவர்.

ஆடும் போது ஊஞ்சல் சற்று விலகி தாய் மரத்தில் பட்டால்

"தெத்தாத ஊஞ்சில் தெத்தாத
தெத்து பலகாரம் சுட்டுத்தாறேன்
நேரேபோ ஊஞ்சல் நேரேபோ
நேற்றடிச்ச காற்றோடே..."

எனப்பாடி சரி செய்து கொள்வார்கள். இவ்வாறாக

"காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு......"

என்ற மகாகவி பாரதியாரின் கவிக்கமைய ஆறும் வயலும் சூழ்ந்தும், காடும் மலையும் நிறைந்தும், படகும் துறையும் சேர்ந்தும், பாட்டும் கூத்தும் பரவ பார்க்கும் இடமெல்லாம் ஊருக்கு உவப்பாக நீக்கமற ஆலயங்கள் நிறைந்து ஆனந்தம் பரவும் அன்னை மண்ணில் ஆனந்தம் நிரம்பி வழிய வசந்தம் தழுவிய அழகிய வாழ்வுக்கு அதிபதிகளாக இருந்தோம். இன்று எல்லாமே நினைவுக்குரியதாக, நெடுமூச்சுக் குரியதாக கைநழுவிப்போன கனவுகளாகி விட்டன.

நாம் அனைவரும் இன்று பூகோளமயமாக்கலுக்கு ஆட்பட்டு எம் பிரதேசம் மீதான விருப்பையும் எம் மொழி மீதான காதலையும் இழந்து வருகின்றோம். எமது கலைகளை, எமது கலாசார கட்டமைப்பை, எம் மரபை தொலைத்து நிற்கின்றோம்.

எனவே இவ்வாறான நிலைகளைத் தவிர்த்து எம் இனத்தின், மண்ணின் பெருமையை பறைசாற்றி நின்று, இன்று எம் மாவட்டத்தை விட்டு நீண்ட தூரம் பயணித்து விட்ட அல்லது மருவிப்போன எமது பாரம்பரிய விளையாட்டு கலைகளை மாவட்டத்தில் இருக்கின்ற விளையாட்டு கழகங்களும், கலைக் கழகங்களும், ஏனைய பொது அமைப்புக்களும் மீண்டும் வரவழைத்து புதுப்பிக்க வேண்டும். அதேபோல் பிரதேச செயலகத்தால் நடாத்தப்படும் பிரதேச விளையாட்டின் போது இப்பாரம்பரிய மரபு சார்ந்த விளையாட்டுக் களையும் உள்வாங்கி நடாத்தினால் எமது பிரதேசத்தில் இருந்தும், எமது மாவட்டத்தில் இருந்தும் மருவிப்போன எமது பாரம்பரிய விளையாட்டுக் கலைகளுக்கு புதுவடிவம் கொடுத்து பேணிப்பாதுகாக்கலாம்.

# கலைஞர்களின்
# நினைவுப்பதிவு

## திருமதி. மகாலெட்சுமி தர்மலிங்கம்

**மீ**ன்பாடும் தேன்னாடாம் மட்டக்களப்பு மாநகரம் பல கலைஞர்களைத் தன்னகத்தே கொண்டது. கலைகளின் நகரமாக விளங்கும் மட்டக்களப்பில் இன்னும் அறியப்படாத தலைவர்கள், தமது முதுமைக் காலங்களிலும் இன்னும் பேசப்படாமலேயே இருக்கின்றனர்.

இன்றைய உலகம் திறன்களின் (skill) உலகமாக மாறியுள்ளது. தனது திறன்களை வளர்த்துக் கொள்ளும் மனிதர்களே வாழ்வில் வெற்றிபெற முடியும். ஆனால் தனது திறன்களை சமூக மேம்பாட்டிற்கும் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தும் மனிதர்களே உலகில் வெற்றி பெற்றவர்களாக வலம் வருகின்றார்கள். இவர்களை அவர்கள் சார்ந்த சமூகம் கொண்டாடும்.

அந்தவகையில் எமது 'தேனகம்' நூல் வெளியீட்டிற்காக மட்டக்களப்பில் தமது திறன்களை வெளிப்படுத்தி சமூகத்திற்கு தமது பாரிய பங்களிப்பினை செய்த கலைஞர்களை தேடி அவர்களின் நினைவுகளைப் பதிவதன் ஊடாக எதிர்கால சமூகத்திற்கு அவர்கள் பற்றிய தகவல்களையும் அவர்கள் சமூகத்திற்கு விட்டுச் செல்லும் அந்த செய்திகளையும் பதிவதே எமது பிரதான நோக்கமாக இருந்தது. இந்த வகையில் விஷ வைத்தியராகக் கடந்த பல வருடங்களாக சேவை புரிந்த திருமதி.மகாலெட்சுமி தர்மலிங்கம் அவர்களை சந்தித்து உரையாடினோம்.

திருமதி.மகாலெட்சும் தர்மலிங்கம் அமரர் க.கண்ணப்பர், கண்ணப்பர் ரெத்தினம்மா ஆகியோரின் செல்வப் புதல்வியாவார். இவரது தந்தை கண்ணப்பர் கிராம சேவையாளராக அரச உத்தியோகம் பார்த்தாலும் வைத்தியத் தொழிலையும், மாந்திரீகத்தையும் கற்று வைத்திய சேவை செய்தார். தாயாரும் மாந்திரீகம், மற்றும் விஷவைத்தியத் துறையில் சிறந்து விளங்கியவர்.

இவருக்கு மூன்று ஆண் சகோதரர்களும், நான்கு பெண் சகோதரிகளுமுண்டு. இதில் இவர் உட்பட இவரது சகோதரர்கள் இருவர் விஷ வைத்தியத் துறையில்

### பாரம்பரிய மருத்துவத்துறை

இயங்கி வருகின்றார்கள். மொத்தத்தில் இவரது குடும்பம் ஒரு வைத்தியக் குடும்பமாகும். மேலும் இவரது மூன்று பிள்ளைகளில் ஆண்மகன் ஆயள்வேத வைத்திய மாணவனாக கல்வி கற்று வருகின்றார்.

திருமதி மகாலெட்சுமி தர்மலிங்கம் அவர்களின் நினைவுகளைப் பதிவதற்காக அவரை ஒரு மாலை வேளையில் அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினோம். அதில் எம்மால் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு அவர் தந்த பதில்களை அவரது மொழி நடையிலேயே தருகின்றோம். பதினைந்து வருடங்களாக சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் கடமை புரிந்ததன் காரணமாக பெண்ணியம் சார்பான கருத்துக்களும் இவரது பதிலில் ஊடாடி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர் தன்னைப் பற்றிக் கூறும் போது, நான் பாரம்பரிய பரம்பரை சித்த வைத்தியத் துறையைச் சேர்ந்தவர். இதன் காரணமாக விஷ வைத்தியத்துறையில் எனது தந்தை, தாய், தமையன், மாமன்மார்கள், உறவினர்கள், மூதாதையர்கள் சிறப்புற்று விளங்கியதைப்போன்று விஷ வைத்தியத்தில் பதிவு பெற்ற வைத்தியராகி விஷம், வாதம், பித்தம், சிலேப்பனம் நோய்களையும், குஷ்டம், கட்டிப்புண், கண்டக் கட்டிகள், ஆறாப்புண், சுரம் போன்ற நோய்களையும் குணப்படுத்தி வந்துள்ளேன். நோய் சம்பந்தமான அனுபவம் நிறைய எனக்குண்டு.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் கிட்டத்தட்ட 15 வருடங்கள் அவர்களுடன் இணைந்து கஷ்டப் பிரதேசத்திலுள்ள கஷ்டமான குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று வாழ்வாதாரத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிவகைகளை வலியுறுத்துவதுடன், அவற்றை ஏற்படுத்தியும் கொடுத்துள்ளோம். சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் நீண்ட கால இணைப்பாளராக அங்கத்துவம் வகித்து நிர்வாக உத்தியோகத்தராகவும் பணியாற்றியுள்ளேன். அன்றாட வாழ்க்கையில் கல்வி, கலாசாரங்களை மக்கள் மத்தியில் ஊக்குவித்தல், பேணிக்காத்தல், குடும்ப நலன்கள், ஒற்றுமை, வறுமை ஒழிந்திட தொழில்களை என்ன யுக்தியில் கையாளுதல் போன்றவற்றை மக்கள் மத்தியில் புகட்டுவதுடன், சமூக மேம்பாட்டு விழுமியங்களை பாதுகாத்தும், சமூகம் என்ற வகையில் நலம் சார் கைங்கரியங்களை கடைப்பிடித்தும் செயல்படுத்தியும் வந்தேன். இது சமூக மட்டத்தில் எனக்குக் கிடைத்த மிகுந்த அனுபவமாகும் எனத் தெரிவித்தார்.

**சமூகத்திற்கும் மற்றும் இளந் தலைமுறையினருக்கும் ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?** என எம்மால் வினவப்பட்ட போது,

கல்வி மனித வாழ்க்கையில் இன்றியமையாத தொன்று. கல்வியைக் கற்பதன் மூலம் பற்பல பிரயோசனங்களும் நன்மைகளும் உண்டு. செல்வங்களுள் கல்விச் செல்வம் முதலாவது செல்வமாகும். கல்வி மூட நம்பிக்கைகள், மடமைகள், துஷ்ட குணங்கள் யாவற்றையும் மாற்றக் கூடியது. அந்தவகையில் கல்வி மூலம் கலை, கலாசார, பண்பாட்டு சமூகம் பல துறைகளிலும் சிறப்பாக விருத்தி பெறும் என்பதில் ஐயமில்லை என்பதே உண்மையாகும் எனப் பதிலளித்தார்.

**தங்களது துறை சார்பாக தங்களால் வழித்தோன்றல்கள் உருவாக்கப்பட்டுள்ளதா?** என்ற கேள்விக்கு,

ஆம். எனது மகன் தர்மலிங்கம் யாழினன். அவருக்கு இந்த வைத்தியத் துறையில் மிகுந்த ஈடுபாடு உண்டு எனத் தெரிவித்ததுடன், அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பாரம்பரிய லங்கா சித்த ஆயள்வேத மருத்துவக் கல்லூரியில் 05 வருடங்கள் சர்வாங்க வைத்தியம் படித்து பூர்த்தி செய்து பரீட்சையும் எழுதியுள்ளார் எனவும் அத்துடன் தனது விஷவைத்தியத்தை படித்து அதற்கும் அரசாங்கத்தினால் வைக்கப்படும் பரீட்சைக்கு தோற்றியுள்ளார் எனவும் தெரிவித்தார். எனது தாயின் பின் நான், எனக்குப் பின் வழித்தோன்றல்கள் அழிந்து போகாமல் இருக்குமளவும் எனது மகனை வழித்தோன்றலாக உருவாக்கியுள்ளேன் எனக் கூறியதுடன், பக்கவிளைவுகளற்ற சிறந்த மருத்துவம் அழிந்து விடாமல் அதனை விருத்தி செய்வதற்காகவே எனது மகனையும் இத்துறையில் ஈடுபடத் தூண்டினேன் எனத் தெரிவித்தார்.

**தங்களது துறை சார்பாக ஆவணப் படுத்தங்கள் ஏதும் உள்ளனவா?** என நாம் கேட்டதற்கு,

பல புத்தகங்களையும், மருத்துவக்குறிப்புக்களையும் ஆவணமாக வைத்துள்ளேன். சர்வாங்கத்துக்குரிய புத்தகங்கள், விஷ வைத்திய சிந்தாமணி, ஒன்பது ஆருடம் கட்டு வைத்தியம், வைத்திய சிந்தாமணி திரட்டு, கட்டு வைத்தியம், மர்மக் கலை புத்தகம், மற்றும் எண்ணெய், தூள்கள், குளிசைகள் செய்யும் பழைய குறிப்புப் புத்தகங்கள், விஷக்கடி வைத்திய நூல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**தங்களது துறை சார்பாக தங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவங்கள்** பற்றிக் கூறுமாறு நாம் கேட்ட போது,

விஷம் தீண்டிய ஒருவரை மயக்கமுறு நிலையில் உயிர் கொடுத்து எங்களால் இயன்றவரை மீட்டு மந்திர மாந்திரீகம் மூலம் குழையடித்து, அவரது மலம், சலம் அடைத்தால் போக வைத்து, காதிற்கு மருந்திட்டு, கண்ணிற்கு நித்திரை ஏற்படாது கலிங்கமிட்டு சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கையில் குறித்த நோயாளி மீண்டும் மயக்கமுறு நிலையை அடையும் போது வாழ்வா? சாவா? என்ற நிலையில் போராடி உயிரை மீட்கும் சந்தர்ப்பங்கள் வாழ்வில் மறக்கமுடியாதவையாகும் எனக் கூறினார்.

**தாங்கள் கடந்து வந்த பாதையில் எதிர்நோக்கிய பிரச்சனைகள் எவை?** என நாம் கேட்ட போது,

நோயாளியை முற்றாகக் குணப்படுத்தி அதற்குரிய முறைகளாக விஷப் பாம்பு தீண்டினால் குறைந்த பட்சம் பழம், மீன்கள், இறைச்சி, உப்புக் கருவாடு பத்தியம் இருக்க வேண்டும். அவர் பால் சோறு, மெல்லிய மரக்கறி, பிஞ்சு வகையானவை மற்றும் பேதிக்கு கொடுக்கும் வரை தயிர் போன்றவை சாப்பிடலாம். இவற்றைக் கடைப்பிடிக்காமல் தலைகீழாக மாற்றி மீண்டும் விஷத்தை உள்வாங்கிய சில நோயாளிகளுக்கு நடந்த சம்பவங்கள் அச்சந்தர்ப்பத்தில் பெரும் பிரச்சனையைத் தோற்றுவிக்கும் எனத் தெரிவித்தார்.

ஒரு விஷம் தீண்டியவரை வைத்தியரிடம் கொண்டு வந்தால் அவர் எந்தத் திசையிலிருந்து வருகின்றார் என்பது தூதன் சொல்லும் மாகுறி. இவைகளைக் கணக்கெடுத்து கடித்த பாம்பு என்ன இனம் என்று கண்டறிந்து, எத்தனை பற்கள் ஏறியுள்ளது என்பதையும் கண்டறிதல் வேண்டும். விஷம் இறங்கும் போது மாந்திரீகத்தால் காளி, காலகஸ்தமி, யமன், யமதூதன் எனும் 04 பற்களுக்குமான மாந்திரீகத்தினால் விபூதி, வேப்பம் குழையடித்து பார்த்து விஷத்தைக் கடிவாயிலிருந்து இறக்குதல் வேண்டும். அதே வேளையில் கடித்த இடம் தடித்திருந்தாலும், தொடர்ந்து வலித்துக் கொண்டிருந்தாலும், கடிவாயிலில் குருதி ஓடினாலும் மரணம் சம்பவிக்கலாம் என்பதனால், காலக் கடியில் "மீண்" என்று சொல்லப்பட்ட மருந்து மாந்திரீகங்களைச் செய்து விஷம் தீண்டியவரை இறப்பின்றி காப்பாற்றுவோம். விஷம் தீண்டியவருக்கு விஷம் அதிகமாக இருந்தால் உச்சி கீறி மருந்து வைத்தல், தலையில் சட்டி வைத்து எரித்தல், தூவாலை மருந்து பூசுதல், நசியம் அடித்தல், கண்ணில் மயக்கம் இருந்தால் கலிங்கம் இடுதல் ஆகிய சிகிச்சைகளை அளித்து விஷத்துக்கான உள்மருந்து கொடுத்து விஷதாரிகளை விஷத்திலிருந்து காப்பாற்றுவோம். இப்புண்ணிய விஷ வைத்தியத்தை பரம்பரை வாயிலாக செய்து பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளோம் என மனத்திருப்தியுடன் தெரிவித்தார்.

மேலும் இவர் தனது துறை வளர்ச்சிக்காகவும் மற்றும் இவ் வைத்தியத் துறையை அழிந்து போக விடாமல் மேன்மேலும் வளர்ப்பதற்காகவும் தன்னோடு இவ்வைத்தியத் துறை நில்லாமல் படித்த, அதைப் படிக்க விரும்பும் மாணவச் செல்வங்களையும் , இவ்வைத்தியத் துறையினை கொண்டு செல்ல விரும்பும் நலன் விரும்பிகளையும் வைத்தியத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களையும் ஊக்குவிப்பதுடன் மூலிகைகளை இனங்காட்டியும் படிப்பித்தும் வருகின்றார்.

ஆங்கில மருத்துவம் முன்னேறிய அளவிற்கு எமது பிரதேசத்தில் பாரம்பரிய மருத்துவம் முன்னேறவில்லை. இதற்கு முக்கிய காரணம் அரச அங்கீகாரம் கிடைப்பது மிகவும் குறைவாகவுள்ளது. சித்த மருத்துவத்துறை ஆளணிகள், மூலிகைத் தோட்டம், சித்த மருத்துவ ஆய்வு மையம் இவை ஒன்றுடனொன்று தொடர்பு பட்டவையாகும், சித்த மருத்துவர்களின் சுமையைக் குறைக்கக் கூடியவை. அரச அங்கீகாரம் பெறப்படுமாயின் தரமான மருந்துகளைத் தயாரிக்க முடியும். இந்தியா மற்றும் வெளிநாட்டிலுள்ள சித்த மருத்துவங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும். தன்னிகரில்லாததும், பக்கவிளைவு களற்றதும், தனித்துவமானதுமான உடல் உள அன்மீக நலம் பேணும் பாரம்பரிய மருத்துவ முறைகள் எமது பரம்பரைச் சொத்தாகும். இவற்றைப் பாதுகாப்பது எம் அனைவரினதும் கடமையாகும் எனத் தெரிவித்து தனது நேர்காணலை நிறைவு செய்தார்

நேர் கண்டவர்

**திரு. வி. மைக்கல் கொலின்**

**திருமதி. சுந்தரமதி வேதநாயகம்**

# கேரளாவுக்கும் மட்டக்களப்புக்கும் உரித்தான போடி முறைமை

- கவிக்கோ
வெல்லவூர்க் கோபால்

மட்டக்களப்புத் தேசத்தின் தனித்துவம் மிக்க பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய மரபாக நிலைநிறுத்தப்படுவது அதன் போடி முறைமையாகும். சேரநாட்டின் நீண்டகால மரபாக - குறிப்பாக கேரளத்தின் மத்திய காலத்தைத் தொடர்ந்து சிறப்பிடம் வகித்த போடிமுறைமையே அதன் தாய்வழி மரபுகளை பெருமளவு உள்வாங்கிய மட்டக்களப்புத் தேசத்தில் அறிமுகமாகி நிலை பெற்றுள்ளமை ஆய்வுகளின் வெளிப்பாடாக அமைகின்றது. காணி உடமையாளர்களாக விளங்கிய கேரளத்தின் நாயர் சமூகத்திலும் மட்டக்களப்பின் முக்குக சமூகத்திலும் ஏற்பட்ட இப்போடி முறைமை குறித்து இங்கு கவனம் கொள்வது இதில் முக்கியமானதாகும். போடி முறைமையானது மருமக்க(ள்)தாய நெறிமுறைகளை அடியொற்றிவந்த ஒரு தலைமைத்துவ சிறப்பம்சமாகவே கொள்ளப்படுகின்றது. நிலவுடமையாளரைக் குறிக்கும் போக்தா என்ற மலையாளச் சொல்லே திரிந்து போடியானதென பேராசிரியர் வேலுப்பிள்ளை போன்றவர்கள் கருதுவர். எனினும் மலையாள மொழி தோற்றம் பெறுவதற்கு முன்னரேயே அங்கு போடிமுறைமை விளங்கியமை ஆய்வுகளின் வெளிப்பாடாகவே உள்ளது. கேரளத்தின் நாடுடையார், நாடுவழி, ஊரலர் எனும் ஊர்ப்போடி , போடிவாள் அல்லது போடுவாள், போடி போன்ற தலைமைத்துவங்களைப் போன்றே மட்டக்களப்பின் உடையார், ஊர்ப்போடி, போடிகள், போடி என்ற தலைமைத்துவ அமைப்பு விளங்குகின்றது. கேரளத்தில் போடுவாள், போடி எனப் பெயருக்குப் பின்னால் வரும் ஈற்றுப்பெயரினை ஒத்ததாகவே மட்டக்களப்பிலும் பெயருக்குப் பின்னால் போடிகள், போடி என்ற ஈற்றுப் பெயரும் அமைகின்றது.

கேரளத்தை ஒட்டியதாக பெருமளவு விவசாய நிலங்களைக் கொண்டுள்ள திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் தென்மதுரைப் பிரதேசங்களில் அன்றைய காலகட்டத்தே இதற்கான அடையாளங்கள் தென்படவே செய்கின்றன. அப்பிரதேசங்களில் போடியென்பது கௌரவத்துக்குரிய பெயராக மாத்திரமன்றி விருதுக்குரிய பெயராகவும் குறிப்பிடப்படுகின்றது. நாயக்கர் ஆட்சிக் காலத்தே போடி என்பது விருதுக்குரிய பெயராக விளங்கியிருப்பதை தமிழகத்தின் இன்றைய தேனி மாவட்டத்திலுள்ள பெருமளவு விவசாய நிலங்களைக் கொண்டுள்ள போடி நாயக்கன் ஊர் வரலாறு நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. மதுரையில் திருமலை நாயக்கரது ஆட்சிக் காலத்தே பாண்டி நாட்டின் சில எல்லைக் கிராமங்களில் இரவு வேளையில் புலியொன்றுவந்து கால்நடைகளைக் கொன்று தின்பதோடு

மக்களையும் தொல்லைக்குள்ளாக்கி வந்தது. உயிருக்கு அஞ்சிய அப்பகுதி மக்கள் மாலைபட்டதும் அயல்கிராமங்களுக்குச்சென்று தஞ்சமடைவது வழக்கமாகியிருந்தது. இதனால் சிலர் மதுரைக்குச் சென்று திருமலை நாயக்கரிடம் முறையிட்டனர். மன்னர் தனது படைவீரர்களில் துணிச்சல்மிக்க வீரன்ஒருவனை அம்மக்களுடன் அனுப்பிவைத்தான். அவன் அம்மக்களுக்கு பாதுகாப்பளித்ததோடு அப்புலியுடன் பொருது அதனைக் கொன்றான். மன்னர் அவனுக்கு போடிநாயக்கன் எனும் விருதளித்து அப்பகுதிக்கு போடிநாயக்கனூர்எனும் நாமம் சூட்டி அவனைப் பாழையக்காரனாகவும் மதுரை மன்னர் திருமலை நாயக்கர் நியமித்தார். இது சுமார் முன்னூறு ஆண்டுகால வரலாறாகும்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை போடி எனும்பெயர்ச்சிறப்பு இன்றுவரை மதிப்புடனேயே கருதப்படுகின்றது. அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம்வரை போடி என்ற ஈற்றுப் பெயரைக் கொண்டு தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிடுதலை இப்பிரதேச விவசாயப் பெருங்குடியினர் ஒரு பெருமையாகவே கொண்டிருந்தனர். மட்டக் களப்புப்பிரதேசத்தின் மிக நீண்டகால நிலவுடமைச் சமூகமாக விளங்கிய முற்குகர் சமூகத்தினையே இப்பெயர் குறிப்பதாக அன்று அமைந்திருப்பினும் பிற்பட்ட காலத்தே நில உடமையாளர்களாக விளங்கிய அனைவரும் இப்பெயர்ச் சிறப்புக்கு உரியவர்களாயினர்.

கேரளத்தைப் பொறுத்தவரை போடி யென்ற ஈற்றுப்பெயர் இல்லாதுபோக, பிராமணர் களால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சாதீயப் பெயரை ஈற்றுப்பெயராக வைக்கும் தன்மையே காரணமாயிற்று. இதன் காரணமாக நாயர், நம்பூதிரி, மேனன், பணிக்கர், பிள்ளை, நாடார், நம்பியார், ஐயர் போன்ற சாதீய ஈற்றுப் பெயர்கள் இடம்பெறலாயின. எனினும் ஆலய நிருவாகக் கட்டமைப்பினூடாக அவற்றின் அகப்புறச் செயல்பாடுகளுக்கு உரியவர்களாக விளங்கிய அகப் போடிவாள் மற்றும் புறப் போடிவாளும் திருவிதாங்கூர் மன்னன் (1729 – 1758) மார்த்தாண்டவர்மனால் பழிதீர்க்கும் நோக்குடன் பதவியொழிக்கப்பட்ட திருவனந்த புரம் பத்மநாபா ஆலயத்தில் நிருவாகப் பொறுப்பிலிருந்த போடிமாரும் பிற்பட்ட காலத்திலும் போடிமாரின் சிறப்புக் குறித்து அறியச் சான்றாகவுள்ளனர். ஆலய நிருவாகத்தி லிருந்த போடிமார் 'யோகத்தில் போடிமார்' என அழைக்கப்பட்டனர். யோகம் என்பது ஆலய நிருவகத்தைக் குறிப்பதாக அமையும். இதுகுறித்து பேராசிரியர் ரி.கே. கெங்காதரன் தனது *Evalution of the Kerala History and Culture* எனும் நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

கேரளத்தின் நிலவுடமையாளர்களான இப்போடிமார்பற்றியும் அவர்களது செயல்பாடுகள் பற்றியும் வெளிநாட்டுப் பயணிகள் தங்களது குறிப்புகளில் விரிவாக எழுதியிருக்கின்றனர். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கேரளத்தில் தங்கியிருந்த போர்த்துக்கல் நாட்டவரான டுறேற் பார்போசா (*Durate Barbosa*) என்பவர் தனது *A Description of the Cast of Africa and Malabar* – எனும் நூலில் இதுகுறித்துப் பல முக்கிய தகவல்களைத் தந்துள்ளார். அவர் தங்கியிருந்த காலத்தே கேரளத்தில் இருவித போடியமைப்பு தோற்றம் பெற்றிருந்ததையும் மன்னப்போடி – புலப்போடி எனும் உயர்வு தாழ்வு குறித்த அவற்றின் தோற்றப் பாடு பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்தார். நிலவுடமையாளர்களான நாயர்ப் போடிமாரின் காணிகளில் தாழ்ந்த சாதியினர் கூலிகளாகப் பணிபுரிவர். இவர்கள் நாயர் சமூகப் பெண்களுடன் பழகுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. அது பெரும் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்பட்டது. எனினும் சில சந்தர்ப்பங்களில் தடைகளையும் மீறி தவறுகள் நடந்துவிடுவது முண்டு. இது அறியப்படும்போது அதன்பின் வரும் கார்த்திகை நட்சத்திர நாளில் ஊரலர் எனும் ஊர்ப்போடியார் தலைமையில் மக்கள்கூடி அவர்களுக்கான தண்டனையை நிறைவேற்றுவர். குறித்த தாழ்ந்தசாதி ஆண்மகனை ஒரு கம்பத்தில் கட்டி எல்லோரும் பார்க்கும்படியாக ஊர்ச்சந்தியில் தொங்கவிடுவர். பின்னர் ஊரைச்சுற்றி அவனைக் கொண்டுவருவர். அதன்பின்னர் அவனையும் குறித்த பெண்ணையும் ஊரின் எல்லையில் நிறுத்தி அப்பெண்ணுக்கு தடியால் அடித்தோ அல்லது கற்களால் எறிந்தோ ஊரைவிட்டு அவ்விருவரையும் விரட்டிவிடுவர்.

இதில் கவனத்தில் கொள்ளப்படத்தக்க முக்கிய அம்சம் யாதெனில் அப்பெண்ணுக்குப் பிறக்கும் வாரிசுகள் மருமக்க(ள்) தாயச் சட்டப் பிரகாரம் தாய்வழிச் சொத்துக்கு உரித்துடையவர் என்பதே. இதில் நாயர் சமூகத்தினர் பொதுவாக

உயர்வுநிலை குறித்து மன்னப்போடி என அழைக்கப்பட இவ்வாரிசுகள் தங்களது தந்தைவழித் தொடர்பால் தாழ்ந்த நிலையுடைய புலப்போடி என அழைக்கப்பட்டு தாய்வழிச் சொத்தான தராவத்துக்கு உரித்துடையவராயினர். மண்ணப்போடி – புலப்போடி அமைப்பின் செயல்பாடானது மனிதாபிமானத்துக்கும் சமூகப் பண்பாட்டுக்கும் அப்பாற்பட்ட நடைமுறையாகப் பலராலும் கருதப்பட்டமையால் கோட்டயம் மன்னராக விருந்த கேரளவர்மனால் 1696ல் இந்நடைமுறை முற்றாக ஒழிக்கப்பட்டதாக கேரள வரலாறு பதிவுசெய்துள்ளது.

மட்டக்களப்புத் தேசத்தின் பாரம்பரியம் மிக்க மரபுவழிப்பட்ட வரலாற்றியலில் போடிமார் மிக்க மதிப்புடையவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர். கேரளத்தில் பிராமணர்களால் தோற்றுவிக்கப்பட்ட மனிதாபிமானமற்ற சமுதாயக் கட்டமைப்பு மட்டக்களப்பில் தோற்றம் பெறவில்லை. நிலவுடைமையாளர்களாக விளங்கிய போடிமார் அனைத்துச் சமூகங்களையும் தங்களுடன் அணைத்துக்கொண்டே வாழ்ந்துவந்துள்ளனர்.

மட்டக்களப்புப் போடி கல்வெட்டு குறிப்பிடும் கி.பி 1520ல் கண்டி அரசால் மாருதசேனன் என நாமம் சூட்டப்பட்ட கண்ணாப்போடி மன்னன்பிட்டி தொடக்கம் மாணிக்க கங்கை வரை தன்னாட்சி நிறுவிச் செயல்பட்டதையும் மட்டக்களப்பில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் கால்பதித்தபோது அவர்களை முழுமூச்சாக எதிர்த்து உயிரிழந்தும் சிறைசென்றும் சொத்திழப்புக்களுக்கு உள்ளாகியும் தங்கள் தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொண்ட போடிமார் குறித்த தகவல்களையும் மட்டக்களப்பு வரலாறு பதிவுசெய்தேயுள்ளது. கி.பி 1530 தொடக்கம் 1542 வரையான காலப்பகுதியில் கிறிஸ்தவப் பாதிரியார் சைமாவோ கோயம்பரா அவரது தலைமைக்கு எழுதிய கடிதங்கள் போடிமாரின் சிறப்பினை முன்னிறுத்துவதைக் காணலாம். கி.பி 1675ல் இலங்கையின் ஒல்லாந்த ஆளுனர் தனது நாட்டு அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் "மட்டக்களப்பின் தலைவர்கள் (போடிகள்) மூர்க்கத்தனம் மிக்கவர்களாகவும் நம்பகத் தன்மை அற்றவர்களாகவும் இருக்கின்றனர் எனவும் ஒல்லாந்தக் கம்பனிகளுக்கு தொடர்ந்தும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துபவர்களாகவே யுள்ளனர்" எனவும் குறிப்பிட்டிருப்பது மட்டக்களப்பில் ஒல்லாந்தர் அதிகார நிலைக்கு வந்து முப்பத்தைந்து ஆண்டுகளைக் கடந்தும் ஒரு தனித்துவமான ஆட்சியை தங்களால் நிலைநிறுத்த முடியாமலிருந்ததை மெய்ப்பிப்பதாக அமைந்தது. இதன் காரணமாகவேதான் ஒல்லாந்தர் தங்களது ஆட்சியை செவ்வனே கொண்டுசெல்ல உள்ளூர் நிருவாகச் செயல்பாடுகளில் போடிமாரிடம் நிருவாகத்தைப் பகிர்ந்தளித்து தங்கள் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர். இதன் பிரதிபலனாக தலைமைப்போடி மற்றும் ஊர்ப்போடி முறைமை மட்டக்களப்பில் அறிமுகமானதுடன் முக்குகச் சட்டமும் சமுதாயச் சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒல்லாந்தரிடமிருந்து மட்டக்களப்பை ஆங்கிலேயர் கைப்பற்றியபோதும் போடிமாரின் பாரிய எதிர்ப்புக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலையே தென்பட்டது. இதன் காரணமாகவே அவர்கள் நிலமைப் போடிகளையும் வன்னியனார் மற்றும் உடையார்களையும் நியமித்து தாய்வழி முதுசொத்தை முன்னிலைப்படுத்திய முக்குகச் சட்டத்தையும் கி.பி 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை குடியியல் விசாரணைகளில் ஏற்றுக்கொண்டனர்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரிய நிலவுடமை பற்றிய ஆய்வினை மேற்கொண்ட பொருளியல் ஆசான் குமாரவேலு தம்பையா தேரோட்டம் எனும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர கும்பாபிஷேக மலரில் (1998) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"வன்னிமையென்ற சுதந்திரச் சிற்றரசுகள் செழிப்புற்றிருந்த காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட நிலவுடமை முறையும் அதன் கட்டமைப்பு வளர்ச்சியும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் நீண்ட மரபுகளுக்கும் வழக்காறுகளுக்கும் காரணமாயமைந்திருந்தன. இத்தகைய பின்னணியில் தோற்றுவிக்கப்பட்டு விருத்தியடைந்த இப்பிரதேசத்தின் மானியமுறைப் பொருளாதாரமானது பாரம்பரிய மானிய அமைப்பு முறையை ஒத்ததாகவும் நிலமே பிரதான பொருளாதார மூலமாக பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. எனினும் ஏனைய மானிய முறையில் காணமுடியாத நிலஉடமையையும் அதன் ஒழுங்குபடுத்தல்களையும் அவற்றினால் உருவான சமூக விழுமியங்களையும் அடியொற்றிய போடியார் முறை இப்பிரதேசங்களில் தனித்துவம்மிக்கதாகத் தென்பட்டது.

இம்முறைமையானது இப்பிரதேசத்திற் கேயுரிய பாரம்பரிய வழக்காறுகளின் உயர்நிலைப் படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனைய பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் நிலப் பிரபுத்துவ முறையும் அதனோடியைந்த மானியமுறைப் பண்புகளும் காணப்படுகின்ற நிலையில் மட்டக்களப்புப் பிரதேசத்தே இப்போடி யார் முறை உருவாக்கிய மானியமுறையின் வழக்காறுகள் சமூகப் பெறுமானங்களையும் பொருளியல் விருத்தியையும் அடியொற்றி யவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகின்றது. சான்றாக ஏனைய மானிய முறைப் பொருளாதாரங் களில் ஊழியம், அடிமை முறையாக அல்லது கீழ்நிலைப்படுத்தப்பட்ட சாதாரண கூலித் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டதைக் காணக்கூடிய நிலையில் மட்டக்களப்புப் பிரதேசப் போடிமார் மரபுமுறையின் கீழ் இவ்வாறு கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்தப்பட்ட ஊழியமானது அவர்களைச் சாதாரண கூலித் தொழிலாளர்கள் என்பதைவிட மனித நேயம்மிக்க மனித உழைப்பினையும் இப்போடிமாரால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதனை மிக முக்கியமாகக் குறிப்பிட்டேயாகவேண்டும். இதனடிப்படையில் பார்க்கின்றபோது, பொதுவாக மட்டக்களப்பின் நிலவுடமையளர்களாக வாழ்ந்த போடிமார் மிக்க கண்ணியம் மிக்கவர்களாகவும் மனிதாபிமானம் கொண்டவர்களாகவும் அனைவரையும் சமமாக வழிநடாத்தி தங்களை நிலைநிறுத்திக்கொண்டவர்கள் என்பதனையும் நம்மால் அறிந்துகொள்ளமுடிகின்றது." இவ்வாறு குமாரவேலு தம்பையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

### கேரளத்தின் பணியாளரும் மட்டக்களப்பின் முல்லைக்காரரும் :

கேரளத்தின் மருமக்க(ள்)தாய நடைமுறை களில் பணியாளர் முக்கியத்துவம் பெறுவதைப் போன்றே மட்டக்களப்பின் தாய்வழி முதுசொம் நடைமுறைகளில் முல்லைக்காரர்கள் முக்கியத் துவம் பெறுகின்றனர். இது குறித்தும் சற்றுப் பார்ப்பது இங்கு பொருத்தமானதாகும்.

வயல்சார்ந்த நிலப்பகுதி மருதமெனவும் காடுசார்ந்த நிலப்பகுதி முல்லையெனவும் பெயர்பெறும். மருதநில மக்கள் வேழாண் தொழில் சார்ந்தும் முல்லை நில மக்கள் கால்நடை வளர்ப்புச் சார்ந்தும் வாழ்ந்தவர்கள். மருதநில மக்களின் விவசாயச் செயல்பாடுகளுக்கு துணைநின்றவர்கள் முல்லை நிலத்தவராவர். இச்செயல்பாடுகள் புதிய கற்காலம் முதலே விரிவுபட்டுள்ளதாக தமிழக வரலாறுகள் தெளிவுபடுத்தும். உழவுக்கான ஏரும் அதனை இழுப்பதற்கான எருதும் முல்லை நிலத்தவரிடமேயிருந்தது.

காலப்போக்கில் விவசாயப் பணியாளர் களாக முல்லைக்காரர்கள் மாறக் காரணமாய மைந்தது அவர்களிடமிருந்த இவையிரண்டுமாகும். இவர்கள் அன்று நிலத்தை உழுது பண்படுத்திக் கொடுப்பதற்கான கூலியினை போடிமாரிடமிருந்து நெல்லாகவோ அன்றேல் பிற தானியங்களாகவோ பெற்றுக்கொண்டனர். பிற்பட்ட காலங்களில் விளைச்சலின் பின் கூலிகொடுக்கும் முறைமையும் அறிமுகமானது. இது விளைச்சலில் குறிப்பிட்ட பங்குவீதமாகவும் அமைந்தது. படிப்படியாக வேளாண் மக்களிடத்தே நிலவுடமையாளர்கள் உருவானபோது புதிய கூலிமுறையும் அறிமுக மானது. பணியாளர்கள் தங்களது உழைப்பின் திறமையால் தங்களை வளர்த்துக்கொள்ளவும் இது வழிகோலியது. காலப்போக்கில் நிலவுடமை யாளர்களான போடிமார் தங்களது பணியாளர் களுக்கு தங்கள் வயலில் ஒரு பகுதியை கூலிக்காகச் செய்கை பண்ணும் முறையினைக் கொண்டு வந்தனர். கேரளத்தில் இது பணியாளர் விருத்தி என அழைக்கப்பட மட்டக்களப்பில் முல்லைக் காரன் வயல் அல்லது முல்லை வயல் என சங்ககாலச் சிறப்பால் அழைக்கப்படலாயிற்று.

பணியாளர் விருத்தி என்பது பணியா ளருக்கு இனாமாக வழங்கப்படும் வயல் என்ற அர்த்தத்தை உடையதாகும். பணியாளர் அல்லது முல்லைக்காரர்கள் போடிமாருக்கு மிக்க நெருக்கமு டையவராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் விளங்கினர். விவசாய நிலங்களை சிறப்பாக பராபரிக்கும் பொறுப்புடன் கூலியாட்களைக் கொண்டு வயல் வேலைகளை செவ்வனே மேற் கொள்ளும் கடமையும் அவர்களுக்கிருந்தது. மட்டக்களப்பில் உடமையாளரின் காணிகள் போடி வயல் என அழைக்கப்படுவதைப்போன்று கேரளத்தில் இக்காணிகள் நாயர் காணி என அழைக்கப்படுவதைக் காணலாம்.

கி.பி 17ம் நூற்றாண்டுவரை சிறப்பாகப் பேணப்பட்டுவந்த போடிமாரை முன்னிறுத்திய மருமக்க(ள்)தாய செயல்பாடுகளும் முக்குகச் சட்ட நெறிமுறைகளும் அதன் பின்னர் ஐரோப்பிய

ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டுக்குவந்த அரச காணியை காணியற்றோருக்குப் பகிர்ந்தளித்தல், வரி அறவீடுகள், பொருளாதாரக் கொள்கைகள், மிசநெறிக் கல்வி முறைகள் மற்றும் சமூக சட்டதிட்டங்கள் என்பவற்றால் படிப்படியாகத் தளர்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டன. கேரளத்தைப் பொறுத்தவரை நாயர் சமூகத்தில் ஏற்பட்ட புதிய நடைமுறைக் கல்வி எழுச்சியும் அரசுத் தொழில்துறை வருமானமும் சுய உழைப்பு வருவாய் எனும் புதிய பாதைக்குள் அவர்களை இட்டுச்சென்றது. மருமக்கள்தாய தராவத்து மூலம் கிடைக்கின்ற வருமானத்திலும் பல மடங்கு வருமானத்தை சுயஉழைப்பு அவர்களுக்கு ஈட்டிக்கொடுக்க தராவத்தின்பால் அவர்களுக்கிருந்த அக்கறையும் படிப்படியாக விடுபடலானது.

கி.பி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே மருமக்கள் தாயத்துக்குட்பட்ட காணிகளின் உரிமைப் பிரச்சனைகள் பரவலாக எழத் தொடங்கின. புதிய நடைமுறைகள் மற்றும் சமூகச் சீர்திருத்தங்கள் என்பவற்றின்பால் தங்களை வெகுவாக இணைத்துக்கொண்ட கேரளத்து மக்கள் அதிலும் குறிப்பாக நாயர் சமூகத்தினர் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு சுயவருமான வாழ்க்கை முறைக்கு மாறியபின்னர் தாய்வழிச் சொத்துக்களின் பராபரிப்பாளர்களாக இருந்தவர்களின் வாரிசுகள் காலப்போக்கில் அக்காணிகளைக் கையகப்படுத்தினர். இதனால் ஏற்பட்ட பிரச்சனைகளின் பிரதிபலிப்பு நீதிமன்றங்களில் எதிரொலித்தது. முதலில் திருவாங்கூர் அரசு இதற்கு தீர்வுகாணும் நோக்கில் 1912ல் முதலாவது நாயர்சட்டமூலத்தை (1st Nayar Act – 1912) உருவாக்கியது. அதன்மூலம் மருமக்கள்தாய மரபுகளுக்கு ஏற்றவகையில் பெறப்படும் வருமானமனைத்தும் உரியவர்களுக்கு சென்றடைய வழிபிறந்தது.

பின்னர் 1920ல் நிறைவேற்றப்பட்ட கொச்சி நாயர் சட்டமூலம் (Kochi Nayar Regulation Act – 1920) மருமக்க(ள்) தாய சொத்துக்களின் பராபரிப்பாளர்களான தராவத்துக்காரர்களின் ஆதிக்கப்போக்கை பெருமளவு கட்டுப்படுத்துவதாக அமைந்திருந்தது. எனினும் இதில் மென்மேலும் பிரச்சனைகள் நீண்டுகொண்டு சென்றதால் சென்னை சட்ட நிர்ணய சபையில் 1933ல் நிறைவேற்றப்பட்ட மருமக்க(ள்)தாய சட்டமூலத்தின்படி (Marumakkathayam Act – 1933) தராவத்து எனப்படும் தாய்வழிச் சொத்துக்கள் அனைத்தும் உரியவர்கள் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. இதனைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையிலிருந்த தாய்வழி மரபான மருமக்கள்தாயச் செயல்பாடுகள் கேரளத்திலிருந்து படிப்படியாக விடுபடலாயிற்று. எனினும் தாயக்காணி என்ற பெயரில் கேரளத்துக் கிராமப் புறங்களில் இன்றும் அழைக்கப்படுகின்ற வயல் காணிகள் இன்னும் கூட மருமக்கள் தாயத்தின் சிறப்பினை பறைசாற்றுபவையாகவே உள்ளன.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் முதலே முக்குகச் சட்டமானது எல்லா நிலையிலும் வலுவிழக்கலானது. இதன் பிரதிபலிப்பாக தாய்வழி மாமன் மருமக்கள் என தாய்வழி முதுசொச் சொத்துக்களின் பராபரிப்பாளர்களாக இருந்தவர்களின் வாரிசுகளான தந்தைவழியினர் அச்சொத்துக்களின் பராபரிப்பாளர்களாக மாறியதோடு அவற்றின் உரிமையாளர்களாகத் தங்களை நிலைப்படுத்த முற்பட்டனர். இதன் பிரதிபலிப்பாக 1845 தொடக்கம் 1916 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு உயர் நீதிமன்றம் பன்னிரெண்டு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன்போது மாவட்ட நீதிபதி எச்.ஓ கிறேடி (H.O.Grady), மேலதிக மாவட்ட நீதிபதி சி.காய் (C.Hai), மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.முறே (A.Murray) போன்றோர் நீதிபதிகளாகப் பணிபுரிந்துள்ளனர். அனைத்து வழக்குகளும் இதில் முக்குகச் சட்டத்திற்கு அமைவாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். இதில் பிற்பட்ட மூன்று வழக்குகள் முக்கியத்துவம் பெறுவனவாகும். தாய்வழிச் சொத்துக்களின் பராபரிப்பாளர்களாகவிருந்த நிலமை வேலாப்போடியும் நிலமைகமலப்போடியும் மரணமடைந்த பின்னர் அவர்களது சகோதரிகளுக்குச் செல்ல வேண்டிய வயல்நிலங்களையும் தோட்டங்களையும் இரு நிலமைப் போடிகளின் பிள்ளைகளும் கையகப்படுத்தியதால் அவர்களுக்கு எதிராக 10236- 29.10.1845ம் இலக்கமும் 16384 -27.02.1871இலக்கமும் கொண்ட இரு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இவற்றில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் அச்சொத்துக்களின் பெறுமதி எதிரிகளிடமிருந்து வழக்காளிகளுக்கு பணமாக

வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதி வழக்காக மட்டக்களப்பு இலுப்பையடிச்சேனை என்னும் இடத்திலுள்ள தாய்வழிக் காணி தொடர்பில் 07.02.1916ல் மட்டக்களப்பு உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட 4260ம் இலக்க வழக்கு அமைகின்றது. இதில் அளிக்கப்பட்ட தீர்ப்பும் முக்குகச் சட்டத்தை அடியொற்றியதாகவே அமைந்திருந்தது. எனினும் மட்டக்களப்புத் தேசத்தில் மிகநீண்ட காலமாக வழக்கிலிருந்த தாய்வழி முதுசொம் நடைமுறைகள் இன்று இல்லாதுபோன சூழலில் போடிமாரின் சிறப்பியல்புகளும் படிப்படியாக விடுபட்டுப்போனமை வரலாற்றுப் பதிவாகவே நிலைபெறும்.

சான்றாதாரங்கள்:


1. *Alexandar Jhonstan - Ceylon Native Laws and Customs*
2. *Ayapan. A,-Social Revelution in a Kerala History*
3. *Barbosa Durate -A Description of the Cast of Africa and Malabar*
4. *Buchan Francis -A Journey from Madras through Mysore, Canara and Malabar*
5. *Britto.C, -Mukkuvas Law*
6. *Mathew.K.S,- Societies in Medival Malabar*
7. *Padmanabamenan.K.P, -History of Kerala*
8. *Mark P. Whitakar-East Cost Sri Lankan Tamil Temple*
9. *Thambiah.S.W, -Laws and Customs of Tamils*
10. இளம்குளம் குஞ்சன்பிள்ளை — சேரசாம்ராஜ்ஜியம் ஒன்பதும் பத்தும் நூற்றாண்டுகளில் (மலையாளம்)
11. சிவசண்முகம்.ஞா,-மட்டக்களப்பு குகன்குல முக்குகர் வரலாறும் மரபுகளும்
12. தம்பையா குமாரவேலு — தேரோட்டம் (தான்தோன்றீச்சர கும்பாபிஷேக மலர் -1998)
13. பத்மநாதன்.சி,- இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்
14. பாவேந்தன்.எஸ்,-கீழைத்தேய மரபுவழிச் சட்டங்கள்
15. வெல்லவூர்க் கோபால் - மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் (திருத்திய 3ம் பதிப்பு)
16. வெல்லவூர்க் கோபால் - மலையாள நாடும் மட்டக்களப்பும்
17. வெல்லவூர்க் கோபால் - தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும்


# முத்தமிழ் விழா - 2016 - போட்டி முடிவுகள்

## பாடசாலை மட்டப் போட்டிகள்

**கிராமிய பாடல் போட்டி**

முதலாமிடம் - மட்/ சிவானந்த தேசிய பாடசாலை
இரண்டாமிடம் - மட்/ மகாஜன கல்லூரி
மூன்றாமிடம் - மட்/ இந்து கல்லூரி

## திறந்த போட்டிகள்

**நாடகப் போட்டி**

முதலாமிடம் - அரங்க ஊற்றுக்கள்
இரண்டாமிடம் - மட்/ சிவானந்த தேசிய பாடசாலை
மூன்றாமிடம் - மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி

**கவிதைப் போட்டி**

| | | |
|---|---|---|
| முதலாமிடம் | - செல்வி.விதுாசினி இளங்கோ | - மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி |
| இரண்டாமிடம் | - திருமதி.இந்திராணி புஷ்பராஜா | - இல.06, திருமகள் வீதி கிழக்கு, கல்லடி உப்போடை. |
| மூன்றாமிடம் | - செல்வி.கந்தசாமி அஸ்வினி | - மட் மகாஜன கல்லூரி |

**சிறுகதைப் போட்டி**

| | | |
|---|---|---|
| முதலாமிடம் | - திரு.மனோகிதராஜ் யூட் சுரேன்ராஜ் | - இல.06, பற்றிமாகிரி வீதி, மட்டக்களப்பு |
| இரண்டாமிடம் | - செல்வி.விதுாசினி இளங்கோ | - மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி |
| மூன்றாமிடம் | - கில்பட் சிறிதர் ஜக்ஷான் வேணுஜன் | - 513/45, பூம்புகார் வீதி, மட்டக்களப்பு. |

# தூறலில் கிடைத்த சில துளிகள்...

எமது மண்முனை வடக்கு பிரதேச செயலகம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 2016ம் ஆண்டு இருநாட்கள் நடாத்திய கவிதை பயிற்சிப் பட்டறையில் இருந்து கிடைத்த சில கவிதைத் துளிகள் அடுத்துவரும் பக்கங்களில் இடம் பெறுகின்றன. இவை மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவித்து, எதிர் காலத்தில் எழுத்தாற்றல் மிக்க இளம் சந்ததியினரின் வருகைக்கு ஒரு படிக்கல்லாக அமையும் என்ற நம்பிக்கையுடனேயே பிரசுரிக்க படுகின்றது.

**- கலாசார**

**உத்தியோகத்தர்**

## வண்ணத்துப் பூச்சி

எனது வீட்டின் தென்னைகள்
நடனமாடுகின்றன
பச்சை வயல்களின்
சிரிப்பொலிகள் கேட்கின்றன

திடீரென்று எங்கேயோ இருந்து
பட்டு சிறகுகளை அணிந்து
வண்ணத்துப் பூச்சிகள்
அணிவகுத்து வருகின்றன

நானும் அதன் பின்னே
பறக்கின்றேன்
என்னால் முடியவில்லை
என்னை ஏமாற்றி செல்கின்றன

வண்ணத்துப் பூச்சியாய்
பறந்து கொண்டே இருக்கின்றேன்
தொடுவானமாய் தொடர்கின்றது
என் பயணம்



**செல்வி.ம.பவதாரணி**
மட்/ விவேகானந்தா மகளிர் வித்தியாலயம்

# யார் செய்த பாவம்

என் வீட்டு முத்தத்தில்
வேப்பம் குச்சி கொண்டு
கூடொன்று கட்டியது காகம்
நாட்கள் பல கழிந்தோடின
நான் பார்த்த வேளையிலே
குயிலொன்று புகுந்து
இருமுட்டை இட்டு விட்டு
விண்வெளியில் பறந்தது
இரைதேடச் சென்றகாகம்
இடம் தேடி வந்ததங்கு
தான் இட்ட முட்டை என்று
அனைத்தையும் அடைகாத்து
பொரித்தது குஞ்சு
அவற்றை வளர்த்தது நம்பி
சில நாட்கள் புரண்டோட
சிறுசிறு பேச்சு பிறந்தது வாயில்
அப்பிஞ்சுக் குரலில்
கரைந்தன மூன்று
கூவின இரண்டு
கூவிய இரண்டும்
குயிலது குஞ்சு
என்றதை உணர்ந்து
துரத்தி கொட்டியது காகம்
ஒரு வீட்டுப்பிள்ளை
என்றிருந்த
இரண்டும்
தனிமரமாகி
நின்றன வாடி
யாரோ செய்த சதியால்
அவை என்ன செய்யும்
என்ற றிந்த காகம்
தன்னோடு சேர்த்து
வாழ்ந்தன ஒன்றாய்

செல்வன். **கு.சஜிவன்**
மட்/சிவானந்த தேசிய பாடசாலை

# கடற்கரைப் பயணம்

கணங்களும் ரணங்களாய்
தோன்றும் தருணமதில்
கால் நனைக்க கடற் கரையில் நான்

கரை தொட விரைந்திடும் கடலலை
கண்ணீராய் தெறித்து
கடலினுள் மறைகிறது

கடல் நீரிலும் கண்ணீரிலும்
சுகமறியா சுய நினைவின்
சிறு துளியாய்....

செல்வி. **ரஜாயினி ரஜனிக்காந்**
மட்/ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி

# பட்டாம் பூச்சிகள்

தென்னைகள் அசைந்தாட
வெளியேறுகிறேன்
வயல் முழுவதும்
வண்ண வண்ண பட்டாம் பூச்சிகள்

என்னால் முடியவில்லை
பறந்தது நானும் பறந்தேன்
மீண்டும் வயல் வெளியே
என்கையில் இருந்து
நழுவி நழுவிப்பறந்தது

பிடித்தேன் -
என்கைக்குள் சிறகொன்றை
ஒடித்துவிட்டு
சுதந்திரமாய்ப் பறந்தது.

செல்வன்
**அ. தனுராஜ்**
மட்/சிவானந்த
தேசிய பாடசாலை

# தனிமை

நான் கடற்கரையில் நிற்கின்றேன்
தொலை தூர வானம் கூட
பக்கமாக உள்ளது
கடலலை என்னை இரைச்சலுடன்
போ என்கிறது
வாழ்வின் விளிம்பில்
தனிக்கின்றேன் !
உப்புக் காற்றில் துமிக்கிறது
என் கண்ணீர்....

**செல்வி. பரராஜசிங்கம் றிஜிதா**
மட்/ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி.

# வண்ணத்துப்பூச்சி

தலை வெட்டிய மரமாய்
தலையாட்டும் தென்னை
செம்மணல் நிறைந்த
வெட்டிய வயல் அருகே

ஆசை தூண்டும் அழகு
நிற வண்ணாத்தி
பாய்ந்து பிடிக்க
முயன்றேன், பறந்தது

மானை வேட்டையாட
வில்லம்புடன் செல்லும்
வேடனாய் எனை
மாற்றிய வண்ணாத்தி
மேலெழுந்து பறந்தது

பாய்ந்து பிடித்தேன்
பதுமமலர் இதழ் சிறகு
படபடவென அடித்தது
பறக்க விடு என
பதறியது

பிறர் சுதந்திரம்
பறிக்க விரும்பாத நான்
போ, என விட்டேன்
போனது அகம் மகிழ்ந்து.

**செல்வி.கு.வினோஜா**
மட்/ வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை

# வாழ்வின் முடிவு

மலை உச்சியில்
மனதில் கவலைகளை
சுமந்து கொண்டு நிற்கின்றேன்

மரங்கள்
என்னைப் பற்றி
பேசுகின்றன

கல்வெட்டுக்களில் எழுதப்பட்ட
எழுத்துக்கள் போல்
என் மனதில் எழுதப்பட்ட

அழியாத ஞாபக அலைகள்
என்னைத் துரத்துகின்றன

பறவைகள் கூண்டுக்குள்
சிறகு விரிப்பதையும்
கொஞ்சிக் குலாவுவதையும்
பார்த்து இரசித்த காலம்

என் மனதை உறுத்திற்று
வாழ்வின் முடிவையும் கூட

**செல்வி.டி.டினுஷா**
மட்/ ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி

# நிழல்

காற்றில் அகப்பட்ட
சருகு போல அங்குமிங்கும்
அலைகிறேன்
கோடை வெயிலின்
கோபத்தால்
அலையும் போது புரிகிறது
அழிந்து போன மரங்கள்

செல்வன். ந. ரிஷோபாரன்
மட்/ இந்துக் கல்லூரி

# யதார்த்தம்

நான் கடற்கரையில் நின்ற போது
கடல் நீரில் பந்தொன்று
மோதிவரக் கண்டேன்
அலை அலையாய் என்
உள்ளம் அலைபாயக் கண்டேன்
நிலையில்லா உலகின்
யதார்த்தத்தை எண்ணி
முடிவில்லா கடலின் எல்லையைத் தேடி
நான் நிற்கின்றேன்.

செல்வி.தி.டெனிஷ்ரா
மட்/ ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி



# பட்டாம் பூச்சி

எங்கும் வயல் காற்று
நடுவினிலே என் வீடு
காற்று தலை விரித்தாட
நானும் ஆடினேன்
கண்ணெதிரே வண்ணப் பட்டாம்
பூச்சி
தேனை உண்ட வண்ணம்
அணைக்க அவா கொண்டு
மலைகள் பல கடந்து
அலைந்து ஓடினேன் என்னிடத்தில்
அகப்படவில்லை அது.

செல்வி.ம.சசியமிதா
மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை

# நான் கடற்கரையில்

விண் தொடும் கடலே
என் விரல் தொட்டுச் செல்கின்றாய்
என் தனிமைதனை உணர்ந்து
எனைத் தழுவி அணைத்திடு

வாட்டி வருத்தும் வெயிலில் நீ
வரண்டு போகும் வாழ்க்கையில் - நான்
என் மூச்சை அடக்கி வாழ்கிறேன்
வருந்தும் என் மனதை அறி

என் பிறப்பே என் பின் அலையாய் வந்து
வாட்டம் கண்டு நழுவுகிறாய்
என் உணர்ரைவக் கூறி விட்டேன்
விழி வைத்து வழி சொல்

உனைத் தனித்து விடாமல்
நான் பாதம் வைத்துச் செல்கிறேன்
கண்ணுக்குத் தெரியா உன் கடலடியின்
முடிவும் பெருமையும்...

**செல்வி.சு.ருஷானந்தி**
மட்/ விவேகானந்தா மகளிர் வித்தியாலயம்

---

# பட்டாம்பூச்சி

தலைகள் அறுக்கப்பட்டு
கிடக்கிறது பிணங்கள்
வயல் முழுவதும்
ஆங்காங்கே தேங்கி
நிற்கின்றது செங்குருதி

அடுத்த போரை எதிர்பார்த்து
குண்டுகளைத் தாங்கி
கம்பீரமாய் நிற்கும்
படைவீரர்கள் மத்தியில்..

படலையைத் திறந்து
நான் வெளியேவர
வசீகரமாய் வீசியது
காற்று...

இருளில் தெரியும் மின்மினி போல
அழகிய மலர்கள்
அதன் மேல்...!!!

கண்களை கொள்ளை கொள்ளும்
வண்ணம் அழகு பொழியும்
பட்டாம் பூச்சி கூட்டங்கள்

ஆஹா....
எத்தனை அழகு

**செல்வி.ப.றிஜிதா**
மட்/ ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி



# தேனகம்
## தொகுப்பும் மதிப்பீடும்

திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்:**

இலங்கை அரசின் நிர்வாகப் பரவலாக்கக் கொள்கைக்கிணங்க 1990களின் ஆரம்பத்தில் நாடெங்கிலும் பிரதேச செயலகங்கள் அமைக்கப் பட்டபோது மட்டக்களப்பு மாவட்டத்திலும் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மண்முனை வடக்கு பிரதேச செயலகம் 1992இல் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயலகத்தின் கலாசார பேரவை 1993 தொடக்கம் 'முத்தமிழ் விழா'வினை வருடாந்தம் நடத்தி வருவதுடன் அவ்விழாவில் 'தேனகம்' என்னும் சிறப்பு மலரினையும் வெளியிட்டு வருகின்றது.

ஒரு பிரதேசத்தின் இலக்கியம், கலை, வரலாறு, தனி நபர் மற்றும் சங்கங்களின் ஆளுமைகள் ஆகியனவற்றை காலத்திற்குக் காலம் பதிவு செய்து ஆவணப்படுத்துவதில் பிரதேச செயலங்களினால் வருடா வருடம் வெளியிடப் படும் இதழ்களுக்கு பெரும் பங்கு உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இப் பணியினை இம் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் வெளியிடும் இத்தகைய இதழ்கள் திறம்பட ஆற்றி வருகின்றன என்பதனை இவ்விதழ்களின் தொடர்ச்சியான வாசகி என்ற வகையில் என்னால் உறுதியுடன் கூற முடியும். கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையில் குறிப்பிட்ட பிரதேச இதழ்கள், தமிழ் சிறப்பு மாணவர்களால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு ஆய்வுக் கட்டுரைகளாக அவர்களது தேர்வின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

இத்தகைய பின்னணியில் மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் வெளிடப்படும் 'தேனகம்' என்னும் இதழும் மண்முனை வடக்கு பிரதேசத்தின் பாரம்பரியங் களையும், சம காலப் பதிவுகளையும் வெளிக் கொணர்வதில் காத்திரமான பங்களிப்பினைச் செய்து வருகின்றமையை அறிய முடியும். 1993 தொடக்கம் 1995 வரையிலான காலப்பகுதியில்

முத்தமிழ் விழா என்னும் பெயரில் மூன்று இதழ்கள் சிறப்பு மலர்களாக வெளிவந்தன. அதன் பின்னர் 1996 தொடக்கம் 'தேனகம்' என்ற பெயரில் முத்தமிழ் விழா சிறப்பு மலர் வெளிவந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக கால் நூற்றாண்டு வரலாற்றினைக் கொண்டமையும் இவ்விதழின் பங்களிப்பினை மதிப்பீடு செய்வது தற்போது பொருத்தமானதும் தேவையானதுமான விடயமாகும்.

1993 தொடக்கம் 2015 வரையிலான காலப் பகுதியில் வெளிவந்த 22 இதழ்கள் குறித்த நோக்காக இக் கட்டுரை அமைகின்றது. ஏறத்தாழ 200 ஆக்கங்கள் இவற்றில் உள்ளன. புத்தாயிரமாம் (2000) ஆண்டில் 'புத்தாயிரம் சிறப்பு மலர்' ஒன்றினை (தேனக இதழை விட) மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவை வெளியிட்டிருந்தது. 1993 தொடக்கம் 1999 வரையிலான காலப்பகுதியில் வெளிவந்த ஏழு இதழ்கள் பற்றிய இக் கட்டுரையாசிரியரின் மதிப்பீடு அம் மலரில் இடம் பெற்றிருந்தது.

ஒட்டுமொத்த மதிப்பீடு என்ற அடிப் படையில் அக்குறிப்புக்களும் இங்கு கவனத்திற்கு (சுருக்கமாக) எடுக்கப்பட்டுள்ளன. 'தேனகத்தில்' வெளிவந்துள்ள ஆக்கங்கள் வசதியும் பொருத்தமும் எளிமையும் கருதி கவிதை, சிறுகதை, கட்டுரை, ஏனையவை என்ற அடிப்படையில் பாகுபடுத்தப் பட்டுள்ளன. இப்பாகுபாடு ஒவ்வொரு துறைக்கும் 'தேனகம்' எத்தகைய பங்களிப்பினை வழங்கி யுள்ளது என்பதைப் புரிந்து கொள்வதற்கும் தொடர்ந்த ஆய்வு முயற்சிகளுக்கும் வழிவகுக்கும்.

**தேனக ஆக்கங்கள்:**

இக்கட்டுரை, அனைத்து ஆக்கங்களையும் கருத்தில் கொண்டு எழுதப்படுகின்றதென்பதையும் அனைத்துப் படைப்பாளிகளின் பெயர்களைப் பட்டியலிடுவதைத் தவிர்த்துள்ளது என்பதையும் தமது தனித்துவமான படைப்புக்களால் மட்டக்களப்புப் பிரதேசத்தின் அடையாளத்தை தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பதித்துள்ள வகையில் முக்கியம் பெறும் படைப்பாளிகளின் ஆக்கங்களை எடுத்துக் காட்டுக்களாகத் தருவதில் கவனம் செலுத்தியுள்ளது என்பதையும் ஆரம்பத்திலேயே குறிப்பிடுவது பொருத்தமானது. (அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள ஆண்டு தேனகம் வெளிவந்த ஆண்டைக் குறிப்பிடுகின்றது. ஆக்கங் களை எழுதியோரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.)

**கவிதை:**

வெளிவந்துள்ள ஆக்கங்களுள் கவிதைகள் ஏறத்தாழ 24% ஆகும். செ.குணரத்தினம், திமிலைத்துமிலன், சாருமதி, திமிலை மகாலிங்கம், வாகரைவாணன், ரி.எல். ஜவ்பர்கான், ஏ. நவரத்தினராசா குரூஸ், வாசுதேவன், அ.ச.பாய்வா, ராஜபாரதி, ராஜாத்தி (வி.தவராஜா), த.மலர்ச்செல்வன், வி.மைக்கல் கொலின், கண.மகேஸ்வரன், தில்லை, த.உருத்திரா, அனார், பொன்.தவநாயகம், கா. சிவலிங்கம், கலைமகள் முதலான தனித்துவமான கவிஞர்கள் தம் கவிதைகளை இவ்விதழ்களிற் படைத்துள்ளனர். அத்துடன் மைதிலி, பிரேந்திரன், அமுதநிலா, வே.சுந்தரமதி, ஜெ.நந்தினி, க.ஜெகதீஸ் வரன், ச.எ.சித்தார்த்தன், ஹபீபா இஸ்மாயில் போன்றோரது கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. தவிரவும் பாடசாலை மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளும் இதழ்களில் இணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்கள், மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரியம், இன நல்லுறவின் அவசியம், சமூகச்சீர்கேடுகள் முதலான பல விடயங்கள் கவிதையின் கருப்பொருள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழல் ஏற் படுத்திய பாதிப்புக்களைக் கூறுவனவாக பின்வரும் கவிதைகளைக் கூறமுடியும்.

திமிலை மகாலிங்கத்தின் 'என்ன நடந்தது இங்கே ஏனிந்த மாறுதல்கள்' (1993) என்னும் கவிதை யுத்த சூழல் பற்றியும் மனிதர் காணாமல் போதல் பற்றியும் விபரிக்கின்றது. சாருமதி எழுதிய 'ஒரு சிவப்புப் பாடல்' (1995), 'மீண்டும் மதுரை எரிதல் வேண்டும்' (1996) ஆகியன இன அடக்கு முறைக்கு எதிரான குரல்களாக வெளிப்பட்டுள்ளன. 'ஒரு சிவப்புப் பாடல்' என்னும் கவிதையிலிருந்து சில வரிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

'விடிந்த கிழக்கு
இருண்டு விட்டது
தோல்விதான்
ஆனால் நிரந்தரமாக இல்லை
..................
மேற்கில் விடிவுகளைத் தேடும்
முட்டாள்தனம்
நிகழலாம்

மேற்கு காக்கைகளைக் கக்கும் இடம்
வெண்புறாக்கள் அங்கு
விளையாடத்தானும் போவதில்லை'

அ.ச. பாய்வாவின் 'காத்திருப்பேன்' (1996), 'வெருக்கடி நாய்கள்' (2002), 'சாம்பல் கனவு' (2004) ஆகியனவும் யுத்த சூழலின் பாதிப்புக்களை வெளிப்படுத்துவனவே. த.மலர்ச்செல்வனின் 'வெக்கை எழுகிற சாமியறை' (2001) காலநிலை மாற்றத்தினை முன்வைத்து காலம் மனிதர்களை மாற்றியுள்ளமையையும் யுத்தகால சூழலை குறிப்பாகக் கூறியுள்ளமையையும் காணலாம். வி.மைக்கல் கொலினின் 'எம் மண்ணின் மணம்' (2001) என்னும் பின்வரும் கவிதை இப் பொருளை வெளிப்படையாகவே பேசியிருக்கிறது.

'மார்கழி மாத இருளில்
இருட்டைக் கிழித்துக் கொண்டு
வந்தன சில வாகனப் பேய்கள்
.................
விடிந்தது எங்கும்....
ஆனால் என் கிராமத்தின்
இதயம் மட்டும்
குத்திக் கிழிக்கப்பட்டது
சாக்குரலைத் தாங்கியபடியே
என் கிராமம்
.................
கைகள் கட்டப்பட்டு
கண்கள் மூடப்பட்டு
கால்களில் விலங்குகளுடன்
பல இளைஞர்கள் வீதியெங்கும்
சிதறிக் கிடந்தார்கள்
மேலாடை கிழிபட்ட பல
கன்னிப் பெண்கள்
தன்மானம் மறைக்க
புதர்களிடையே
ஓடிப்போனார்கள்'

இது தொடர்பில் த.உருத்திராவின் 'எம் கனவுகளிலேனும் எழுந்துவர ஒரு புதைகுழி' (2002) என்னும் கவிதையும் குறிப்பிடத்தக்கது. வி.மைக்கல் கொலினின் 'புத்தம் + ரத்தம்' (2006) என்னும் கவிதை புத்த தர்மத்தை வினாவிற்குட் படுத்தியுள்ளது.

சமூக மற்றும் இன நல்லுறவை வலியுறுத் தும் கவிதைகளுள் ரீ.எல் ஜவ்பர்கானின் 'மட்டுமண்ணில் மஞ்சமிடு' (1993), ஏ.நவரத்தின ராசா குரூஸ் எழுதிய 'பூக்களும் வர்ணங்களும்' (2002) ஆகியன குறிப்பிடத்தக்கன. 'பூக்களும் வர்ணங்களும்' என்னும் கவிதையிலிருந்து சில வரிகள்:

'சண்டை ஓய்ந்திருக்கிறது
பண்ட பாத்திரக் கடைகளில் மீண்டும்
பெண்டுகள் கூட்டம்
அண்டா வாங்குகிறார்கள்.
கண்டி, கொழும்பு, காலி மக்கள் எல்லாம்
நண்டுக்கறி தேடி நம் ஊருக்குள்.'

மட்டக்களப்பின் வளத்தையும் இலங்கை யின் சிறப்பையும் கூறுவனவாக செ. குணரத்தினத் தின் 'மங்காத புகழ் பூக்கும் எங்கள் நாடு' (1993), அ.ச பாய்வாவின் 'மீட்டுத்தரும் தெய்வம்' (1999), வாகரை வாணனின் 'மட்டக்களப்பு மணித்திரு நாடு' (1998), சி.மௌனகுருவின் 'இனிய நிலம்' (2014) ஆகியன உள்ளன.

இவற்றைத் தவிர தனிமனித அனுபவங் களையும் சமூகச்சீர்கேடுகளையும் வெளிப்படுத்தும் கவிதைகளும் காணப்படுகின்றன. வாசுதேவனின் 'என்னுடைய சவப்பெட்டி' (1994) ஆசிரியத் தொழிலின் நெருக்கடிகளைக் கூறுகின்றது. அ.ச.பாய்வாவின் 'பாணிச்சேவல்' (2000) சமய நடைமுறைகளினூடாக சமூக பிரச்சினையைக் கூறுகிறது.

2002 – 2005 வரையிலான தேனக இதழ்களில் த. மலர்ச்செல்வனின் குறிப்பிடத்தக் களவு கவிதைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் 'ஊழிக்காலத்தில் புகழ் பாடும் ஒரு கவிதை' (2002), 'நீள்கிறதென் உயிர்வெளி' (2002), 'ஆதிவாசிகள் படியெடுக்க கனவு காணும் காலம்' (2004), 'ஒரு பொட்டளவு சிறு பச்ச மண்' (2005), 'கொல்' (2005) 'ஒரே நாளில் பறந்தது பற்றி' (2005) ஆகியன குறிப்பிடத்தக்கவை.

கவிதையைப் பொறுத்தவரை பெண்களின் கவிதைகள் மிகக் குறைவாகவே தேனக இதழ்களில் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். 1998 இதழில் திருமதி ராஜினி புண்ணியமூர்த்தியின் 'வல்ல சபதமொன்று மங்கையரே செய்திடுவோம்' என்னும் கவிதை வெளிவந்துள்ளது. உழவுத் தொழிலின் மேன்மையை உணர்த்தும் இக்கவிதை, நல்ல உழவனைப் பெண்கள் விரும்பி திருமணம் செய்ய வேண்டும் என அறைகூவல் விடுக்கின்றது.

அதன்பின்னர் 2001இலிருந்து குறிப்பிடத் தக்க பெண்கவிஞர்களின் ஓரிரு கவிதைகள் ஆங்காங்கே வெளிவந்துள்ளமையைக் காணலாம். எண்ணிக்கையில் இவை குறைவாக இருப்பினும் அக்கவிதைகள் பெண்நிலைநின்று உணர்வுகளை துணிச்சலாக வெளிப்படுத்திய வகையில் முக்கியத் துவமுடையவை.

'ஒரு நிமிடத்தையும் ...
மீதம் வைக்காமல்
பொழுதைக் குடிப்பவனுக்காக,
காலம் முழுவதையும் தேக்கி வைத்து......
வாழ் நாளெல்லாம் அலைகிறேன்.'

எனத் தொடங்கும் 'விலகி நிற்பவன்' (2005) என்னும் அனாரின் கவிதை, பெண்ணின் உணர்வுகளை, அவளது தனிமையை, அதனால் ஏற்பட்ட ஏக்கங்களை உணர்த்துகின்றது.

த.உருத்திராவின் 'எம் கனவுகளிலேனும் எழுந்துவர ஒரு புதைகுழி' (2002), 'துறவறம்' (2004), தில்லையின் 'தீர்ப்பு' (2001), 'விடாய்' (2003), சுகந்தியின் 'வல்லமையான கடவுளுக்கு ஒரு விண்ணப்பம்' (2006), கி.கலைமகளின் 'மீண்டும்'(2006), 'நம்பிக்கை'(2007), நா.பத்ம சாம்பவியின் 'மீண்டும் எழுந்திருக்கையில்' (2006) ஆகிய கவிதைகளில் பெண்களின் நுண்ணுணர்வுகள் பல்வேறு உறவுமுறைகளினூடாக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

'இத்தனை நாட்களாக
நீங்கள் குட்டியபடியே
குட்டிக் கொண்டிருங்கள்
ஒவ்வொரு தடவையும்
என் தலை குனியட்டும்
வழமைபோல்
என் கரங்களுக்கு விலங்குமாலை
அணிவித்து மகிழுங்கள்
என் உணர்ச்சிகள் பொங்கி எழாது
.........................
என் தலை நிமிரப்படும்
என் உணர்ச்சிகள் பொங்கி எழும்
என் அகோரம் வெளிப்படும்
அத்தனையும்
நான் மீண்டும் எழுந்திருக்கையில்'

என்னும் நா.பத்மசாம்பவியின் கவிதை, பெண்கள் மீதான அடக்குமுறையையும் எழுச்சியின் முன்னறிவித்தலையும் பதிவு செய்திருக்கின்றது.

மொழிபெயர்ப்புக் கவிதை ஒன்றும் தேனகத்தில் இடம்பெற்றுள்ளது. அடோனிஸின் பாலஸ்தீனக் கவிதையை தமிழில் சி.சிவசேகரம் மொழிபெயர்த்துள்ளார்.

**கட்டுரைகள்:**

ஆக்கங்களுள் கட்டுரைகள் ஏறத்தாழ 63% ஆகும். ஏறத்தாழ 125 கட்டுரைகள் இவற்றில் உள்ளன. பெரும்பாலான கட்டுரைகள் மட்டக் களப்புப் பிரதேசத்தின் தனித்துவமான கலை, வரலாறு, இலக்கியம், பின்பற்றப்படும் சமயங்கள், பாரம்பரிய வழக்கங்கள், பண்பாடு, சமூக அமைப்பு முறை முதலான விடயங்களை வெளிப்படுத்துவன வாகவே உள்ளன. கட்டுரைகளிற் பெரும்பாலா னவை ஆய்வுக் கட்டுரைகளாக அமையும் அதே வேளை தகவல் தொகுப்புகளாகவும், மேலோட்ட மானவையாகவும் சில அமைந்துள்ளமையையும் மறுப்பதற்கில்லை.

உள்ளடக்க அடிப்படையில் கட்டுரை களை வகைப்படுத்துவது அவ்வவ் வகைப்பாடுகளில் அமையும் தொடர்ந்த ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதால் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது.

அ) வரலாறு
ஆ) கலை
இ) ஆக்க இலக்கியம்
ஈ) நாட்டாரியல்
உ) சமூகம்
ஊ) தனிநபர் ஆளுமைகள்
எ) கல்வி
ஏ) ஏனையவை

**அ) வரலாறு:**

தேனக இதழ்களில் வெளிவந்த வரலாற்றுக் கட்டுரைகள் மட்டக்களப்புப் பிரதேசத்தின் வரலாற்றினைப் பதிவு செய்வனவாகவே அமைந் துள்ளமையைக் காணலாம். சிறப்பாக தொல்லியல் சிறப்புப் பட்டதாரியான க.தங்கேஸ்வரியின் ஆய்வுக் கட்டுரைகள் ஆதார பூர்வமான விளக்கங் களுடன் அமைந்திருப்பது மட்டக்களப்பின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கும் மேலும் ஆய்வுகளைத் தொடருவதற்கும் பெருந்துணை புரிவனவாக அமைந்துள்ளமையைக் குறிப்பிடுவது பொருத்தமானது.

இவ்வகையில் அவரால் எழுதப்பட்ட 'மட்டக்களப்பின் தொல்லியல் தடயங்கள்: ஓர்

அறிமுகம்' (1997), 'கிழக்கிலங்கையில் தமிழர் ஆட்சி'(2000), 'மட்டக்களப்பிலுள்ள போர்த்துக்கேய டச்சுக் கோட்டை'(2011) ஆகியன குறிப்பிடத்தக்கன.

வ.சிவசுப்பிரமணியமும் சில கட்டுரைகள் இவ்வகையில்எழுதியுள்ளார். 'புராதன மட்டக்களப்பு : சில குறிப்புகள்' (1999), 'புளியந்தீவின் முதல்வன் புலியமாறன்: மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் தரும் தகவல்கள்' (2002), 'மட்டக்களப்பு தேசத்துக்கும் சோழர்களுக்கும் இருந்த தொடர்புகளும் புளியந்தீவு அதன் தலைநகராகிய வரலாறும்' (2004) ஆகியன அத்தகையன.

மேலும் ரீ. பாக்கியநாயகத்தின் 'கப்பல் போக்குவரத்திற்கு உகந்த இடம் மட்டக்களப்பு' (1994), றூபி வலன்ரீனா பிரான்சிஸின் 'மட்டக்களப்பின் பூர்வீக வரலாறு: தெளிவை வேண்டி நிற்கும்சில பிரச்சினைகள்குறித்த அவதானிப்புக்கள்' (2000), பிரின்ஸ் ஜீ காசிநாதரின் 'ஒரு மயானத்தின் மரணம்'(வெபர்விளையாட்டரங்கின் உருவாக்கம் பற்றியது) (2000), திமிலை மகாலிங்கத்தின் 'அன்றைய மட்டக்களப்பின் பிரயாண வசதிகள்' (2000), வி.பரமேஸ்வரியின் 'புராதன மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலைத் தேர்கள்' (2003), வெல்லவூர்க் கோபாலின் 'மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளும் குடியேற்றங்களும்' (2005), 'மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்: ஆட்சி முறைகள்' (2012) ஆகியனவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையன.

2011 தேனகமானது 'மண்முனை வடக்குப் பிரதேச புவியியல், வரலாறு, பண்பாடு - சில பதிவுகள்' என்னும் தொனிப்பொருளில் 15 கட்டுரைகளை உள்ளடக்கிய மலராக வெளிவந்திருந்தது. இக்கட்டுரைகளிற் பெரும்பாலானவை வரலாறு தொடர்பானவை.

அவை வருமாறு:

மட்டக்களப்பின் வரலாற்றுச்சின்னங்கள் -சில சிந்தனைகள்' (மௌ.சித்திரலேகா), 'மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச வரலாற்றில் மேனாட்டார்வருகையினால்ஏற்பட்ட மாற்றங்கள்' - (வே.சுந்தரமதி), 'புராதன மட்டக்களப்பு துறைமுகம் - சில குறிப்புகள்' (கதிர் பாரதிதாசன்), 'மட்டக்களப்பு கலங்கரைவிளக்கு' (ப.முரளிதரன்), 'மண்முனை வடக்குப்பிரதேசத்தில் அறியப்பட்டதும் அறியப்படாததும்' (வெல்லவூர்க் கோபால்), 'மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவின் வரலாற்றுப் புகழ்மிகு சமய வழிபாட்டுத் தலங்கள்' (எஸ். எதிர்மன்னசிங்கம்), 'கிழக்கிலங்கை மண்ணின்முதல்தேவாலயம்மட். தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயம்' (வி.மைக்கல் கொலின்), 'இராமகிருஷ்ண மிஷனும் அதன் பணிகளும்' (ஹ.திலகவதி) ஆகியன.

## ஆ) கலை

மட்டக்களப்பின் தனித்துவமான பாரம்பரியக் கலைகளுள் முக்கியமான இடத்தைப் பெறுவது கூத்துக்கலையாகும். அக்கலை பற்றி கணிசமான கட்டுரைகள் தேனகத்தில் வெளி வந்துள்ளன. அந்த வகையில் 'மட்டக்களப்பின் மகிடி நாடகம் - ஓர் அறிமுகம்' (1993), 'அர்த்த முள்ள அடியெடுப்புக்கள்' (கூத்து) (1996 - சி.மௌனகுரு) 'காத்தவராயன் கூத்து : தோற்றமும் ஒப்பீடும்' (1999-ச.சீவரட்ணம்), 'பாரம்பரியக் கூத்துக்கலையில் முகாமைத்துவம்' (2001-த. ஹேமா), 'மட்டக்களப்பில் கிறிஸ்தவக் கூத்துக்கள்' (2003 - ஸ்ரான்லி பிரபாகரன்),'மட்டக்களப்புக் கூத்தின் பல வடிவங்கள்' (2004- திமிலை மகாலிங்கம்), 'ஈழத்துத் தமிழ் கூத்தரங்கு வளர்ச்சி நிலை -ஒரு நோக்கு' (2007- எம்.பி.ரவிச்சந்திரா), 'மட்டக்களப்பின் மரபும் மாற்றமும் பரதக்கலை' - (2014-சி.மலர்விழி), 'மட்டக்களப் பின் மரபும் மாற்றமும் மரபுக் கலைகளும் மாற்றமும்' (2014 ப.முரளிதரன்) ஆகியன குறிப்பிடத்தக்கன.

2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேனகம் கூத்துக்கலை தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. அந்த வகையில் அக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிறப்பு இதழாக அது அமைந்துள்ளதென்றும் கூறலாம். பின்வரும் கட்டுரைகள் இவ்விதழில் வெளிவந்துள்ளன.

'தமிழினத்தின் பாரம்பரிய கலையிருப்பு கூத்து' (மு.நமசிவாயம்), 'களரியில் கோமாளியும் ஈழக் கூத்தின் மீளுருவாக்கமும்: சமூக நீதிக்கும் சமூக ஒன்றிணைவிற்குமான கூத்தரங்கின் இயக்கம்' (சி.ஜெயசங்கர்), 'மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துப்பிரதிகள்' (ஆரையூர் அருள்), 'பூதசக்திகளை எதிர்கொள்ளும் சாதாரணர் சரித்திரங்கள்' (கூத்துக்கலை ஒப்பனைக் கலைஞர்கள் பற்றியது - சி.ஜெயசங்கர்), 'கூத்தில் ஒப்பனை' ( ம.லாவண்யா ) ஆகியன.

நாடகம் தொடர்பான கட்டுரைகளுள் பின்வரும் இரு கட்டுரைகள் முக்கியமானவை. 'மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் - ஒரு நோக்கு' (1993- வெ.தவராசா), 'மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கில நாடகத்துறையின் அண்மைக்கால வளர்ச்சி' (2001- தி. லலினி, செல்வி அ.ர. பிரான்சிஸ்) இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரை 1991 தொடக்கம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இத் துறைக்கு குறிப்பாகப் பாடசாலைகள் ஆற்றிய பங்களிப்பினை நிறுவியுள்ளது. அத்துடன், பாடசாலைகளுக்கும் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கும் இடையிலான தொடர்புகள் மட்டக்களப்பின் குறித்த நாடகத் துறை வளர்ச்சிக்கு உதவியமை, ஆங்கிலக் கல்வியினை பிரத்தியேகமாகப் போதிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்பு ஆகிய விடயங்களையும் குறிப்பிட்டுள்ளது. இக்கட்டுரை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கில நாடகத்துறையின் தோற்றம், வளர்ச்சி பற்றி எழுதப்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த துறையில் ஆர்வமுடையோர் இப்பணியில் முயற்சிப்பது அவசியமானது. இச்சந்தர்ப்பத்தில் 1970களில் புனித மிக்கேல் கல்லூரியில் சா.இ. கமலநாதன் ஆங்கில நாடகங்களையும் அதேவேளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்களையும் பாடசாலையின் விசேட நிகழ்வுகளில் (பரிசளிப்பு விழா போன்றவை) மேடையேற்றியமையை குறிப்பிடுவது பொருத்தமானது.

'உலகமயவாக்க சவால்களின் பின்னணியில் உள்ளூர் சிறுவர் அரங்கு (2003 - வாசுதேவன்), 'கற்கை நெறியாக அரங்கு' (2008) - த. விவேகானந்தராசா), 'மட்டக்களப்பு மண்முனை வடக்கின் அரங்க ஆற்றுகை வெளிகள்'(2011 - சி.மௌனகுரு), 'ஆற்றுகைக் கலையாக கண்ணகி குளிர்த்தி படைப்பனுபவங்களும் சவால்களும்' (2006 - சி.மௌனகுரு) ஆகியனவும் இக்கலை தொடர்பான கட்டுரைகளே.

நடனக் கலையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவனவாக 'இலங்கையில் நடனக் கலை' (2007-சர்மிளா ரஞ்சித்குமார்), 'பரதக்கலை ஓர் அறிமுகம்' (2009- ர.பிரேமளாதேவி), 'தொன்மைமிகு தொல்காப்பியத்தில் நயக்க வைத்த நடனம்' (2008 - சி. மலர்விழி) ஆகியனவும் ஓவியக்கலை தொடர்பானவையாக 'மட்டக்களப்பில் ஓவியக்கலை' (1996 - பவான்), 'ஈழத்தமிழரது பாரம்பரிய ஓவிய வரலாறு: ஓர் அறிமுகக் குறிப்பு' (2002 - சி.ஜெயசங்கர்), 'நமக்கான ஓவியம்' (2005- கிக்கோ) ஆகியன அமைந்துள்ளன.

இவற்றைவிட கட்டிடக்கலை, இசைக் கலை, சிலம்படி, களிகம்பு, சோதிடம், மாந்திரிகம் முதலிய கலைகள் குறித்த கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளமை இக்கலைகளின் சிறப்புக்களை பிற்கால தலைமுறையினரும் அறிந்துகொள்ள வழிவகுத்துள்ளது.

சி. முருகப்பாவால் எழுதப்பட்ட 'மட்டுநகரில் இசைப்பாரம்பரியம்' (1997) என்னும் கட்டுரை அவரது வாழ்வானுபவத்தினூடாக மட்டக்களப்பில் இசை வரலாற்றின் தோற்றுவாயை அற்புதமாகத் தந்துள்ளது. ஜெ.பிரியதர்சினியின் 'மட்டக்களப்பு மக்களும் மரபுசார் சடங்கிசை வடிவங்களும்' (2009) என்னும் கட்டுரை இன்னுமொரு தளத்தில் மட்டக்களப்பின் பாரம்பரிய இசை வடிவங்களைக் கூறுகின்றது. வே.சிறிதரன் எழுதிய 'ஆட்டமும் பாட்டமும் அளவிடும் தாளே' (2007) என்னும் கட்டுரை தாளம் என்னும் இசைக்கருவி தொடர்பானதாகும்.

சினிமாத்துறையின் மூலம் மட்டக்களப்பின் பெருமையினை உலகறியச் செய்த பாலுமகேந்திரா பற்றியதாக 'பாலுமகேந்திராவின் இன்னுமொரு முகம்' (2004- (ஸ்ரான்லி பிரபாகரன்) என்னும் கட்டுரை அமைந்துள்ளது. இது தொடர்பில் எழுதப்பட்டதாக 'திரைப்பட உலகும் இளைஞர் விழுமிய விருத்தியும்' (2008 -ம.ஹஜேந்தினி) என்னும் கட்டுரை அமைந்துள்ளது.

'மட்டக்களப்பில் சோதிடக்கலை' (1996 -எஸ் தெய்வநாயகம்), 'முஸ்லிம்களின் பண்பாட்டுக் கலையில் 'களிகம்பு' -(சாந்தி முஹியித்தீன்), 'மட்டக்களப்பில் மதம் சாராக் கட்டடக்கலை' (1999 - ம.பிரஷாந்தி), 'மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்: கட்டடக்கலை' - (2012-ஸ்ரான்லி பிரபாகரன்)

'சிலம்பு விளையாட்டு - ஓர் அறிமுகம்' (2009- ஆ.கணபதிப்பிள்ளை) ஆகிய கட்டுரைகளும் மட்டக்களப்பில் வழங்கும் தனித்துவமான கலைகள் பற்றியனவாக அமைந்துள்ளன.

## இ) இலக்கியம்:

ஒப்பீட்டளவில் இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் அதிகமானவையாகும். மட்டக்களப்புப் பிரதேச கவிதை குறித்து எழுதப்பட்ட

கட்டுரைகளுள் 'மட்டக்களப்பில் நவீன கவிதை' (1994 - வீ.ஆனந்தன்), 'மட்டக்களப்புக் கவிதைப் பாரம்பரியம்: விவாதத்திற்கு அடிப்படையான சில அவதானங்கள்' (1997 - மௌ. சித்திரலேகா), 'தமிழ்த்தேசியமும் மட்டக்களப்புப் பிரதேசக் கவிஞர்களும்' (2002- செ.யோகராசா), 'புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை: மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதையின் ஊற்றுக்கால்' (2004 செ. யோகராசா), 'தமிழ் இலக்கிய கவிதைப் பரப்பில் மகாகவி பாரதி' (2009 - பா.பிரதீபா), 'நவீன ஈழத்துக் கவிதைகளில் வாசுதேவனின் இடமும் இருப்பும்' (2004 - சி.ரமேஷ்) ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும்.

சிறுகதை இலக்கியம் தொடர்பானவற்றுள் 'நவீன சிறுகதை உலகின் பிதாமகன் புதுமைப் பித்தன்' (2009 - பா.சுதாஜிதா), 'மட்டக்களப்பு சிறுகதை வரலாற்றிலே புரட்சிக் கமாலின் சிறுகதைகள்' (2000- செ.யோகராசா) ஆகியவற்றுடன் 1993 - 2003 வரை யிலான காலப்பகுதியில் தேனகத்தில் வெளியான பதினான்கு சிறுகதைகள் குறித்த மதிப்பீடாக அமையும் ச.மணிசேகரன் எழுதிய 'தேனகச் சிறுகதைகள் - பார்வையும் பதிவும்' (2004) என்னும் கட்டுரையும் உள்ளடங்கியுள்ளது. இம்மதிப்பீட்டில் கட்டுரையாசிரியர் கூறுவனவற்றுள் இரு விடயங்கள் கவன ஈர்ப்புக்குரியவை. ஒன்று அக்குறிப்பிட்ட காலத்தில் பெண்களின் சிறுகதைகள் இடம்பெறாமை, மற்றையது மட்டக்களப்பின் இலக்கிய வளர்ச்சிக்கும் நவீன சிந்தனைப் போக்குகளுக்கும் 'தேனகம்' பங்களிப்பு செய்கின்றமை.

இவற்றைவிட மட்டக்களப்பில் வெளிவந்த சில சஞ்சிகைகள் குறித்து மூன்று கட்டுரைகள் தேனகத்தில் இடம்பிடித்துள்ளன. 'மட்டக்களப்புப் பிரதேச சிறு சஞ்சிகைகள்' (1993 - செ.யோகராசா), 'மட்டக்களப்பில் மலர்ந்த சஞ்சிகைகள்' (1997- அன்புமணி), 'இளையவிழிகள் சஞ்சிகை பற்றிய ஓர் அறிமுகம்' (2001 - றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), 'மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் சிற்றிதழ் வளர்ச்சிப் போக்கு பற்றிய ஒரு பார்வை' (2014 -எஸ்.எதிர்மன்னசிங்கம்) ஆகியனவே அவையாகும்.

மேலும் 'மட்டக்களப்பில் விமர்சனம்: ஒரு நோக்கு' (1996 - மு.இராசரத்தினம்), 'மட்டக்களப்பு புகலிட கலை இலக்கியம்' (1997)- 'மட்டக்களப்புப் பிரதேசத்தின் சிறுவர் இலக்கிய முன்னோடி' (1999), 'தொண்ணூறுகளின் பின் மட்டக்களப்புப் பிரதேச நவீன கலை இலக்கிய முயற்சிகள்' (1995), 'ஈழத்து இன்றைய இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் பங்கு' (1994), 'மட்டக்களப்புப் பிரதேச நூல் வெளியீட்டு முயற்சி' (2001), 'மண்முனை வடக்குப் பிரதேசத்தில் நவீன கவிதை: மரபும் மாற்றமும்' (2014-செ. யோகராசா), 'மட்டுநகர் இலக்கிய வளர்ச்சியில் மகளிர் பங்களிப்பு' (1998- க.தங்கேஸ்வரி) ஆகியனவும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் குறிப்பிட்ட சில துறைகள் தொடர்பாக எழுதப்பட்ட காத்திரமான கட்டுரைகளாகும்.

'கலை இலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும்' (1994 - க.யோகநாதன்), 'வெகுமக்கள் ரசனையும் தீவிர கலை - இலக்கிய முயற்சிகளும்' (2005 - உமா வரதராஜன்), 'ஈழத்தில் எழுந்த நூல்களுள் கண்ணகி வழக்குரை' (2008- த. மேகராசா), 'இராமர் அம்மானை - இராமர் கதை' (1995- சா.இ கமலநாதன்), 'இராமர் அம்மானை ஒரு பார்வை' (2008 - முருகு தயாநிதி), 'ஈழத்து இயற்கை அனர்த்த இலக்கியங்கள்' (2006- செ.யோகராசா) ஆகியனவும் குறிப்பிடத்தக்கன. இறுதியாகக் குறிப்பிடப்பட்ட கட்டுரை, சிறப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக வெளிவந்த இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

'கதவைத் திற காற்று வரட்டும்' (2000 -அரவிந்தன்) என்னும் கட்டுரை பிறமொழிகளின் இலக்கியப் படைப்புகளும் போக்குகளும் தமிழ்ப் படைப்புலகின்மீது செலுத்தியுள்ள தாக்கம் பற்றிய சில விவாதங்களை முன்வைத்துள்ளது.

'மண்முனை வடக்குப் பிரதேச நாவல்கள், சிறுகதைகள் அன்றும் இன்றும்' (2014 - வி.மைக்கல் கொலின்) என்னும் கட்டுரை அறிமுகக் குறிப்பே தவிர ஆய்வு அல்ல என்ற தப்பித்தலுடன் அமைந்துள்ளது. நாவல், சிறுகதை என்பன பற்றிய நீண்ட அறிமுகத்தைத் தவிர்த்து தலைப்பிலான விடயத்திற்கு கூடிய கவனம் செலுத்தியிருக்கலாம். மண்வாசனையுள்ள நாவல் ஏனைய பிரதேசங்களில் அவ்வம் மண்வாசனையுடன் எழுந்துள்ளன எனவும் மட்டக்களப்பில் இதுவரை எழவில்லை என்றும் சிலர் வாய்பாடாகச் சொல்லி வருவதையே கட்டுரையாசிரியர் 2014 வரை ஒப்புவித்திருப்பது மட்டக்களப்பு நாவல்களில் மண்வாசனையை

நுகர முடியாத இயலாமையின் வெளிப்பாடாகக் கூட இருக்கலாம். சிறுகதைகளின் கருத்துக்களில் போதாமையுண்டெனினும் திசேரா, மைக்கல் கொலின் ஆகியோரின் கதைகளை முன்வைத்து ஆக்கபூர்வமான நவீன மாற்றங்கள் வெளிப்படுத்தப் பட்டிருப்பதை கட்டுரையாசிரியர் முன்வைத்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

**ஈ) நாட்டாரியல்:**

இத்துறையில்எழுதப்பட்ட கட்டுரைகளில் மிகப் பெரும்பாலானவை மட்டக்களப்புப் பிரதே சத்தை மையமாகக் கொண்டவை. 'தேனாட்டுக் கவிகளிலே செழுமை கொஞ்சும் அணிச் சுவைகள்' (1994 - திமிலைத்துமிலன்), 'தொல்காப்பியத்தில் வாய்மொழி இலக்கியத்தின் சுவடுகள்' (1995- வ.சிவசுப்பிரமணியம்),

'மட்டக்களப்புக் கவிகளும் நானும்' (1999 - வ. சிவசுப்பிரமணியம்), 'மட்டக்களப்பு வாய் மொழி இலக்கியத்தில் வழிநடைச் சிந்து' (2000 - சாந்தி முஹியித்தீன்), 'தமிழ்க் கத்தோலிக்க மரபில் புலம்பல், வேண்டுதலாக: ஒரு நோக்கு' (2002 - றூபி வலன்ரினா பிரான்சிஸ்) 'மட்டக் களப்பின் பாரம்பரிய விளையாட்டுக்கள்- மானிட வியல்சார் ஒரு நோக்கு' (2004 - க.மகேஸ்வரலிங்கம்), 'மட்டக்களப்பார் பண்பாட்டில் வீடும் வாழ்வும்' (பண்பாட்டுப் பாரம்பரியங்கள், சடங்குகள் தொடர்பானது) (2006 - மகிழை மகேசன்) 'மட்டக்களப்பின் மருந்தும் மாந்திரீகமும்' (2006 தேனுூரான்), 'மட்டக்களப்பில் வழங்கும் சுனாமி பற்றிய வாய்மொழிக் கதைகள் (2006 - டிலக்ஸ்மி) 'உளத்துக்கு வளமூட்டும் கிராமியத்து ஊஞ்சல்கள்' (2006 -திமிலை மகாலிங்கம்), 'மட்டக்களப்பில் குலக்குறிய வழிபாடு' (2007 -செ.பிரதீபன்), மட்டக்களப்பின் மரபும் மாற்றமும் - பழக்கவழக் கங்கள் (2012 தேனுூரான்) ஆகியன இவற்றுள் முக்கியமானவை.

## உ) சமூகம்

சமூகம் தொடர்பான கட்டுரைகளுள் மட்டக்களப்பில் வாழும் பல்வேறு சமூகத்தினர் தொடர்பான கட்டுரைகள் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. அவ்வகையில் இங்கு வாழும் பறங்கியர் இன மக்களைப் பற்றியனவாக 'மட்டக்களப்பில் பறங்கியர் இனம்' (1999 - இரா. துரைரத்தினம்), 'மட்டக்களப்புவாழ் பறங்கியின மக்களின் திருமணச் சடங்கு' (2005 -கே.சாந்தி), 'மட்டக்களப்புப் பறங்கியர்' (2006 - ஸ்ரான்லி பிரபாகரன்) ஆகிய கட்டுரைகள் அமைந்துள்ளன. இப்பிரதேச முஸ்லிம் மக்களைக் குறித்ததாக 'மட்டக்களப்புத் தமிழகத்தில் முஸ்லிம்கள்' (1994 - எம்.எம்.எம்.மஹ்றூப் கரீம்) என்னும் கட்டுரை யும், முக்குவர் சட்டம் பற்றியதாக 'வழக்கொழிந்த சட்டமும் வாழும் வழக்காறுகளும் : முக்குவர் சட்டம் பற்றிய சிறு சிந்தனைகள்' (2001- எம். மங்களேஸ்வரி), 'மட்டக்களப்பில் பறையர் சமூகம்' (2003 -தேனுூரான்) ஆகியன எழுதப்பட்டுள்ளன.

**ஊ) தனிநபர் ஆளுமைகள்**

தேனகக் கட்டுரைகளிற் சில, மட்டக் களப்புப் பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் செல்வாக்குச் செலுத்திய தனிநபர் ஆளுமைகளை வெளிக்கொணர்வனவாக உள்ளன. அவ்வகையில் 'புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்ற பெருங் கம்பன்' (1994 - செழியன் ஜே. பேரின்பநாயகம்), 'இரும்பரசன் சாண்டோ சங்கரதாஸ்' (1994 - மட்டுநகர் முத்தழகு), 'கே.எம் ஷா பற்றிய நினைவுக் குறிப்புகள்' (1995- ரீ.பாக்கியநாயகம்), 'மீன்பாடும் தேனாட்டின் தவப் புதல்வரும் மேனாட்டுக் கவிஞர் சேர் உவால்டர் ஸ்கொட்டும்' (1998 - சா.இ கமலநாதன்),

'சிறுவர் இலக்கியத் துறையில் எனது வழிகாட்டி' (2000-மாஸ்டர் சிவலிங்கம்), 'விபுலாநந்த அடிகளாரின் இரு தளபதிகள்' (2000 - மகிழை மகேசன்) (இக்கட்டுரையில் புளியந்தீவு அருணாசல தேசிகரும் தாண்டவன்வெளி வித்துவான் சரவணமுத்தனும் குறிப்பிடப் பட்டுள்ளார்கள்.)

'கவிதைக் கலைஞன் அமரர் ராஜபாரதி' (2000 - அன்புமணி), 'ஒரு பண்பாட்டின் பன்முகச் சேவையாளன்' (2000 - வி.த குமாரசாமி), 'எழுத்து லகில் டி.ஜி சோமசுந்தரம்' (2000- செ.யோகராசா), 'நீலாவணனின் படைப்புலகம்' (2006 றூபி வலன்ரீனா பிரான்சிஸ்) 'முகம் காட்டாத முழு நிலவுகள்' (2004 -காசி ஆனந்தன்) (இக்கட்டுரையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கவனத்திற்கு உட்படுத்தப்படாத ஆனால் முக்கியத்துவமுடைய சிலர் குறிப்பிடப்பட்டுள்ளனர். வானொலி நாடகப் பிரதி எழுதியவரும் இசைக்கலைஞருமான மு.

சிவபாலன், மிருதங்கம் வாசிப்பதில் கைதேர்ந்தவரான அந்தோனிப்பிள்ளை, நாட்டுக் கூத்தை பாடசாலை மேடைக்குக் கொணர்ந்தவரும் நாடகாசிரியருமான திரவியம், திராவிடர் வரலாற்றை முதலில் நூல் வடிவில் கொணர்ந்தவரான தம்பிமுத்து, பித்தன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்)

**எ) கல்வி:**

கல்வி தொடர்பாக எழுதப்பட்டுள்ளனவற்றுள் 'மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி - சில அவதானங்கள்' (2005 - செ.யோகராசா), 'சிறந்த இடைவினைத் தொடர்பு கொண்ட ஆசிரியர்களும் பயன்மிகு வகுப்பறைச் செயற்பாடுகளும்' (2008 - ஏ.எஸ் யோகராஜா) கிழக்கிலங்கையில் சுவாமி விபுலாநந்தரின் பாடசாலைக் கல்விப் பணிகள் (1996 - ஏ.எஸ் யோகராஜா) 'ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தியின் முக்கியத்துவமும் பெற்றோரின் பங்களிப்பும்' (2008 - தி.மேகராஜ்) ஆகியவை குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையவை.

**ஏ) ஏனையவை:**

மேற்குறிப்பிட்ட வகைப்பாட்டினுள் அடங்காத பல கட்டுரைகள் தேனகத்தில் உள்ளன. 'பேண்தகு அபிவிருத்தியும் மட்டக்களப் பும்' (2001 - த.அருமைத்துரை) என்னும் கட்டுரை மூலவளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. 'இனத்தேசியவாதமாகிப்போன இலங்கைத் தேசியவாதம்' (2001- ஞா. ஸ்ரீநேசன்), 'மாற்றுச் சக்திகளின் முன் மொழிப் பிரச்சினை' (2001- சி.ஜெயசங்கர்), 'செய்ததும், செய்ய வேண்டியதும்' - விமர்சனம் பற்றிய ஒரு விவாதம்' (2003 - கிக்கோ), 'மறுகாலனித்துவம்' (2007 - ஜீ. கெனடி) ஆகியன இக்காலத்திலும் சிந்திக்க வேண்டிய பல விடயங்களை முன்னிறுத்தியுள்ளன.

2011இல் வெளிவந்த தேனகத்தில் இடம் பெற்றுள்ள பின்வரும் கட்டுரைகள் மட்டக்களப்புப் பிரதேச தனித்துவங்களை அடையாளம் காட்டுபவையே. 'மட்டக்களப்புநகர் புவியியல் அமைவும் முக்கியத்துவமும்' (கிருபா இராஜரெட்ணம்), 'மண்முனை வடக்கின் கண்டல்கள் (த.ஜெயசிங்கம்), 'மட்டக்களப்பு வாவியும் பாடும் மீன்களும்'(இ.பாக்கியராசா), 'மண்முனை வடக்கின் சிறப்பு' (மேரி சுசில்தா பல்தசார்), 'மண்முனை வடக்கின் மாண்புமிகு பொக்கிஷங்கள்' (எம். கந்தப்பன்).

2012இன் தேனகத்தில் மட்டக்களப்பின் மரபும் மாற்றமும் என்னும் தொனிப்பொருளில் 'இயற்கை வளம்'(த.மதிவேந்தன்), 'தொழில்கள்' (றூபி வலன்ரீனா), 'தொடர்பாடல்' (எஸ். மோசஸ்), 'போக்குவரத்து' (கதிர் பாரதிதாசன்), விளையாட்டுக்கள்'(வே.சுந்தரமதி), ஆடை ஆபரணங்கள்'(சு.தங்கேஸ்வரி), 'உணவு'(ஞா.ராதா), 'இந்து சமய வழிபாட்டுச் சடங்குகள்' (எஸ். எதிர்மன்னசிங்கம்), 'மாந்திரிகம்'(வ.இன்பமோகன்) ஆகிய கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை பாரம்பரிய நடைமுறைகளையும் பின்னரான மாற்றங்களையும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல 'சிறுவர்களின் விளையாட்டுக்களினால் ஏற்படும் ஆற்றல் விருத்திகள்' (2007- வே.சுந்தரமதி), 'மண்' இலங்கைத் தமிழ் சினிமா அடுத்த கட்ட நகர்விற்கு - சினிமா விமர்சனம்' (2007 - அ.ல.ரியலாஸ்) 'சிறுவர் உலகிற்கு அன்புக் கரங்கள்' (2007- வரப்பிரசாத்) 'தொழில்கள் தேடி வருதற்கு தொழில் நாடிகள் வளர்க்க வேண்டிய தொழில் திறன்கள்' (2007- ஞா. ஸ்ரீநேசன்), 'மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவமும் சவால்களும்' (2008- த.அருமைத்துரை) 'வன்முறைகளற்ற தொடர்பாடல்' (2008 -அ.தேவா), 'சித்த மருத்துவத்தில் மனோ சக்தியும் மந்திர சக்தியும்' (2009- எஸ். கலைவாணன்), 'முதியோர் நலம்' (2009 - வ. கணபதிப்பிள்ளை), 'முரண்பாடுகளும் மற்றும் முரண்பாடுகளுக்கான தீர்வுகளும்' (2009 - சு.ரவிசங்கர்), 'மட்டக்களப்பு சுற்றுச் சூழல்' (2002- ஜே.கௌரீஸ்வரன்), 'நீக்ரோவியம்: ஒரு பண்பாட்டு எதிர்ப்பியல்' (2004 ஜெஸ்மி எம் மூஸ்) ஆகிய கட்டுரைகளும் தேனக இதழ்களில் உள்ளன.

**சிறுகதை:**

கனதியானதும் காத்திரமானதுமான சிறுகதைகள் பல தேனகத்தில் வெளிவந்துள்ளமை பாராட்டிற்குரியது. குறிப்பாக இலங்கையின் மிக முக்கிய சிறுகதை எழுத்தாளர்களென அடையாளப் படுத்தப்படும் கிழக்கிலங்கை எழுத்தாளர்களின் பல சிறுகதைகள் தேனகத்தில் இடம்பெற்றுள்ளன.

செ.குணரத்தினம், அ.ச.பாய்வா, திசேரா, த.மலர்ச்செல்வன், ஆ.தங்கராசா, ஏ.நவரத்தினராசா குரூஸ் முதலானோரின் சிறுகதைகள் தேனக இதழின் சிறப்பிற்கு வளம் சேர்த்துள்ளன.

'தேனகச் சிறுகதைகள்' தொடர்பாக ச.மணிசேகரனால் எழுதப்பட்ட கட்டுரையில் (2004) பெண்களின் சிறுகதைகள் இடம்பெறாமை (1993 -2003 வரை) பற்றிய குறிப்பு இடம் பெற்றிருந்தது. இக்குறித்த காலப்பகுதியின் பின்னர் பெண்களின் சிறுகதைகள் சில வெளிவந்துள் ளமையைக் காணலாம். தில்லை, கி.கலைமகள், வே.சுந்தரமதி மற்றும் பாடசாலை மாணவிகளான என்.கஜனியா அ.பிரவீனா, அ.ஷம்யுலிசா முதலான பெண்களின் சிறுகதைகள் இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவை.

1994 இல் வெளிவந்த இதழில் 'நட்பொன்று நாடகமாகிறது' என்னும் சிறுகதை வெளிவந்தது. நாடகத்துறையில் ஈடுபடும் ஒருவன் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியதாக அமைந்த இக்கதையினை ஆனந்தா ஏ.ஜீ இராஜேந்திரம் எழுதியிருந்தார். 'உரம்?' (1995) என்னும் செ.குணரத்தினத்தின் கதை, மீனவ சமூகம் தொடர்பானது. தனக்கேயுரிய தனித்துவமான நடையில் இவர் இக்கதையினை எழுதியுள்ளார். அ.ச பாய்வாவின் பல கதைகள் தேனகத்தில் இடம்பிடித்திருக்கின்றன. அந்த வகையில் இவரது 'ஆசாரங்கள்' (1996), 'அப்பா' (1997) அரசியின் விருந்து (2000), பரிநிர்வாணம் (2006), 'ஆத்ம விசாரம்' (2004) ஆகியன குறிப்பிடத் தக்க முக்கியத்துவமுடையன. உதாரணத்திற்கு ஆத்மவிசாரம் என்னும் கதையிலிருந்து சில விடயங்களை இங்கு குறிப்பிடலாம்.

சிங்கள இராணுவ வீரன் ஒருவனின் நிலை நின்று மனிதாபிமானத்துடன் சூழலைப் புரிந்து கொள்ளும் மனிதநேயன் ஒருவனின் கதையாக இது உள்ளது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், அவர்கள் பக்கமிருக்கும் நியாயங்களையும் எதிர்நிலைக் கதாபாத்திரத் தினைக் கொண்டு இக்கதாபாத்திரத்தின் பண்பாடு மற்றும் மொழிவழி நின்று கதை நகர்த்தப்பட்டுள் ளமை வித்தியாசமான ஆனால் எதிர்மறையான உத்திமுறை. உதாரணமாக அக்கதாபாத்திரத்தின் கூற்றாக இடம்பெறும் பின்வரும் பகுதியைக் கூறலாம்.

"காலங் காலமாய் அரசோச்சி பூசை புனஸ்காரங்களால் மகிமையுற்று எத்தனையோ பக்தர்களின் வேண்டுதல்களையெல்லாம் தன்னுள் சுமந்து நின்ற பிள்ளையார் சிதைந்து புழுதியில் கிடக்க நேற்று வந்த புத்த பகவான் சிலையைப் பிரதிஷ்டை செய்தது என்ன நியாயம். எங்கள் கிராமத்தில் சேனையை அழிக்கவரும் யானையைக் கூட 'கண தெய்யோ' என்று அம்மா கும்பிடுவாளே"

ஏ.நவரத்தினராசா குரூஸின் கதைகளும் இலாவகமான மொழிநடையுடன் பிரச்சினைகளை கலாபூர்வமாகச் சித்திரிப்பவை. 'இது ஒன்றும் புதிய கதை அல்ல' (1999) என்னும் அவரது கதை விவசாயம் தொடர்பானது. போடிமாருக்கும் வெட்டுக்காரருக்கமிடையிலான பிணக்குகள் இதில் விவரிக்கப்பட்டுள்ளன. அதேபோல 'கொள்ளிவாய்ப் பிசாசுகள்' (2001) என்னும் கதையும் விவசாயிகளின் அவலமான நிலைமைகளைக் கூறுவது.

இவற்றைவிட 'கோணர் சீற்' (2008- எஸ். தில்லைநாதன்), 'மண்ணாசை' (2000 -தங்கன்) 'நெஞ்சு பொறுக்குதில்லையே' (2000 -ஆ. தங்கராசா) 'மூத்தம்மா' (2015 - ற.விதுார்சன்) ஆகிய சிறுகதைகளும் உள்ளன. 'மூத்தம்மா' ஏற்கனவே வெளிவந்த 'மூத்தம்மா'வின் பிரதியாக உள்ளது.

'இறக்கை விரிக்கும் மரம்' (2001- திசேரா), 'கறுப்பு நாய்' (2003), 'பெரிய எழுத்து' (2006 - த.மலர்ச்செல்வன்), 'வரம்' (2002 - வி.மைக்கல் கொலின்) ஆகிய சிறுகதைகள் கதை சொல்லும் பாணியிலும் மொழிப் பயன்பாட்டிலும் ஏனைய வற்றிலிருந்து வேறுபட்டு சிந்திக்கத் துாண்டு வனவாக அமைந்துள்ளன. 'வரம்' என்னும் கதை இராமாயண அகலிகையை மறுவாசிப்பு செய்வது: ஆயினும் புதுமைப்பித்தனின் 'சாபவிமோசனத்தின்' சாயலை அதிகம் கொண்டிருப்பது. புதுமைப் பித்தன் கதையில் அகலிகை மீண்டும் கல்லாவது கூறப்பட இங்கு கௌதமனும் கல்லாவதாகக் காட்டப்படுகின்றது. இந்திரனின் துரோகத்தின் பின்னர் கௌதமனை இந்திரனாகக் கண்டு அச்சத்தினால் அவனை விட்டு விலகுபவளாக அகலிகையை புதுமைப்பித்தன் படைத்திருப்பார். மைக்கல் கொலின் கௌதமனிடமே 'இந்திர சுகத்தை' எதிர்பார்ப்பவளாக அகலிகையை இறுதியில் காட்டுகின்றார். 'பெண்களின் நிலை' குறித்த இரு படைப்பாளிகளினதும் நோக்குநிலை

வேறுபாட்டை எளிதில் புரிந்து கொள்ள முடியும். தவிரவும் அகலிகையின் கதை வில்லி பாரதம், இராமாயணம் முதலானவற்றில் வெவ்வேறான முறையில் சித்தரிக்கப்பட்டிருப்பதையும் பின்வந்த காலங்களில் வெவ்வேறான வியாக்கியானங்கள் கற்பிக்கப்பட்டமையையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

பெண்களின் சிறுகதை ஆக்கங்களைப்பற்றி இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்வது அவசிய மானது. 'ஓய்வு' (வே.சுந்தரமதி), 'எல்லைகள் தாண்டி' (2007-கி.கலைமகள்) 'விடிவின்போது முடிவாய் வந்தது' (2009 -சு.கீர்த்தனா) 'அந்த ராத்திரிக்கு சாட்சியில்லை'(தில்லை -2009), தாய்மொழி தள்ளாடுகின்றது'(2014- யே.சுஷானா), 'மினி' (2015- என்.கஜனியா), 'மறையாதவை' (2015 - தே.கமிலா), 'இலக்கு' (2015-அ.பிரவீனா) 'கனவுகள் (2015- அ.பிரவீனா), 'பிரிவின் தேடல்' (2015 - அ.ஷம்யுலிசா) ஆகியன பெண்களால் எழுதப்பட்ட கதைகள். பெண்கள் எழுத்துலகில் பல சவால்களுக்கு மத்தியிலேயே ஈடுபட வேண்டிய நிலைமையில் இருப்பதனை இன்று வரை காணலாம். அதற்கான காரணங்களை விவாதிப் பதற்கு இது ஏற்ற இடமல்ல. தேனகம் பெண்களின் எழுத்துக்களை (கவிதை, கட்டுரை, சிறுகதை) குறைந்தளவே உள்வாங்கியிருப்பினும் அவை கவனத்திற்கு உரியனவாக இருப்பதனை மறுக்க முடியாது.

பெண்களின் சிறுகதையைப் பொறுத்த வரையில் இரு விடயங்களை வலியுறுத்துவது முக்கியமானது.

**ஒன்று:** பெண்களின் உணர்வுநிலைநின்று பெண்களின் பிரச்சினைகள் அவர்களால் எழுதப்பட்ட கதைகள் சிலவற்றில் துல்லியமாக வெளிப்பட்டிருப்பது.

**மற்றையது:** இளம் தலைமுறைப் பெண் எழுத்தாளர்கள் (மாணவிகள்) மண்முனை வடக்குப் பிரதேசத்தில் பயிற்சிப் பட்டறைகள் மூலம் இனங் காணப்பட்டு எழுத்துலகில் பிரவேசித்துள்ளமை. பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட சிறுகதைப் பயற்சிப் பட்டறையில் பங்குபற்றிய மாணவர்களின் ஆக்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு சிறுகதைகள் 2015 தேனக இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஐந்து சிறுகதைகள் மாணவிகளுடையன. அதிலும் ஒருவரின் (அ.பிரவீனா) இரு கதைகள் தெரிவு செய்யப்பட்டிருப்பது விசேடமானது. இவற்றுள் 'இலக்கு', மறையாதவை' ஆகியவை மாணவிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுபவை.

தேனகத்தில் இடம்பெற்றுள்ள ஒட்டு மொத்தக் கதைகளுள் குடும்பச் சூழலிலும், அதற்கு வெளியேயும் பெண்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளை வெளிப்படுத்தும் கதையாக கி. கலைமகளின் 'எல்லைகள் தாண்டி' யைக் கூறமுடியும். திருமணம், கல்வித் தெரிவு, கலை ஈடுபாடு முதலானவற்றில் பெண் அடக்கு முறைக்கு உள்ளாவதையும் அவற்றிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ விரும்பும் பெண்களின் விடுதலையுணர்வையும் இக்கதை விளக்குகிறது. ஆசிரியர், தன்மை நிலையில் கதையைக் கூறுவது டன் மட்டக்களப்பு வழக்குத் தமிழ் பயன்படுத்தப் பட்டிருப்பதும் ஒரு சிறப்பாகும். இக்கதையிலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.

"நானும் எனக்கு விரும்பின பாடத்தத்தான் படிச்சநான். மூத்த அண்ணனுக்கு எப்படி கொமஸ் படிக்க விருப்பமோ அப்படி எனக்கு நாடகம் படிக்க விருப்பம். படிச்சன். வேலை செய்யிறன். நாடகம் போட்டன்.'

"அம்மாவ முதல்முதல் பொம்புள பாக்க வந்தது அப்பாதானாம். அம்மா நல்ல வெள்ள. நல்ல நீட்டு முடி. நல்லா சமைப்பா. பாத்தோனே அப்பாவுக்கு புடிச்சிருந்துதாம். அம்மாக்கு ஆரம்பத்தில விருப்பமில்ல. போகப்போக சரிவரும் எண்டு தாத்தா முடிச்சுக் கொடுத்ததாம். நான் நல்லாதானே இருக்கன். உன்ட வயதில எனக்கு ரெண்டு பிள்ளைகள் இருக்கு, எண்டு அம்மா சந்தோசமா சொல்லுவாவு"

'இந்த ஊரில சைக்கிள் ரேஸ் வச்சா அக்காதான் பெஸ்டா வருவாள்-.நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து சைக்கிளோடி மூண்டு வருஷ மிருக்கும். அண்ணன் ஏச ஏச அக்கா சைக்கிள் ஓடுவாள்.' அவளுக்கு அதுதான் விருப்பம்.

'அக்கா வாவன் சைக்கிளில ஒரு ரவுண்ட் பொயித்து வருவம். அவளுக்கு இது புதினம்தான். நான் மாறியிருக்கன் எண்டு அவளுக்கு விளங்கி யிருக்கு. ஒண்டும் பேசாம சைக்கிள தள்ளுறாள்.. அக்கா கேற்றத் தாண்டித்தாள். நானும் என்ட சைக்கிளோட பின்னால. அண்ணன் என்ட பேரச்







சொல்லிக்கூப்பிடுறான். நான் திரும்பிப் பாக்கிறதில்ல எண்டுமுடிவெடுத்திட்டன். சத்தமாக் கூப்பிறான்.

***எங்கட சைக்கிள் எங்கட வீட்டுக் கேற்றத் தாண்டி வளவத் தாண்டி றோட்டத் தாண்டி வேகமா போகுது. சந்தோஷமான பயணம்தான் இது"***

மேற்குறித்த விவரணம் இக் கதையின் முக்கியத்துவத்தையும் அது சொல்ல வந்த சேதியையும் விளக்கப் போதுமானது.

தேனகத்தில் மொழிபெயர்ப்புக் கதை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. 'யானை' என்னும் தலைப்பிலான அக்கதையின் மூல ஆசிரியர் ஸ்லவோமிர் ம்ரோஸெக். தமிழில் மொழி பெயர்த்தவர்: பூமணி ஊழல், பொய்மை, ஏமாற்று முதலானவைகளால் எதிர்கால சமூகம் வழிதவறிப் போவதனை இக்கதை எடுத்தியம்பியுள்ளது.

கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றைத் தவிர கடிதம், நேர்காணல், இலக்கியச் சந்திப்பு உரையாடல்கள் ஆகியனவும் தேனகத்தில் அருமையாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் சுவாமி விபுலாநந்தருக்கும் தனக்கும் இடையிலான நேரடித் தொடர்பு குறித்து வ. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு பேராசிரியர் த.இராமநாதன் 27.01.1995இல் எழுதிய கடிதமும், தீராநதி இதழில் வெளிவந்த சே.ராமானுஜத்துடனான (நவீன நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்) நேர்காணலும், பேராசிரியர் சி.மௌனகுருவுடனான நேர்காணலும் (2003), 'ஆறுகள் பின்னோக்கிப் பாய்கின்றன'(2004) என்னும் தலைப்பில் தேனகத்தில் தொகுக்கப் பட்டுள்ள இலக்கியச் சந்திப்பின் கலந்துரையாடல் வடிவமும் (இச்சந்திப்பில் என். ஆத்மா, செ.யோகராசா, கிக்கோ, வாசுதேவன், மணிசேகரன், அம்ரிதா ஏயெம், விமல் குழந்தைவேல், ரஷ்மி, த.மலர்ச்செல்வன், தில்லை ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்) முக்கியத்துவமுடையவை.

மேடையேற்றம் செய்யக்கூடிய வகையில் அமைந்த நாடகப்பிரதிகளும் தேனகத்தில் உள்ளடங்கியுள்ளன. 'அது பழைய கதை'(2003) என்னும் தலைப்பிலான சிறுவர் நாடக வகையைச் சேர்ந்த பிரதி வெ.தவராஜாவால் எழுதப் பட்டுள் ளது. 'பிணங்கள்' என்னும் நாடகமும் (2014) உள்ளது. இந்நாடகம் முத்தமிழ் விழா திறந்த மட்டப்போட்டியில் முதலிடம் பெற்றது. சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் உருவாக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டிற்கான தேனகம் மண்முனை வடக்குப் பிரதேசக் கலைஞர் விபரத்திரட்டாக வெளிவந்தது. சில குறைபாடுகள் அதில் காணப்பட்டாலும் முதல் முயற்சியாக அமைந்து மேலதிக தேடலுக்கு வழிவகுத்துள்ள வகையிலும் குறித்த பிரதேச கலைஞர்களை அறிந்துகொள்வதற்கு உதவும்வகையிலும் இத்தொகுப்பு முக்கியமானதாகின்றது. பின்வரு மாறு துறைகளும் அவ்வத்துறையில் கலைஞர் எண்ணிக்கையும் அமைந்துள்ளன. ஆய்வு - 22, ஆக்க இலக்கியம் -40, நாடகம் -21, கூத்து - 25, இசை -18, நடனம் -18, வாத்தியம் -14, சிற்பம் -8, ஓவியம் - 11, ஊடகம் -15, ஏனைய துறை - 7. மொத்தமாக 119 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

2011இன் தேனகம் 'மண்முனை வடக்குப் பிரதேச புவியியல், வரலாறு, பண்பாடு - சில பதிவுகள்' என்ற தொனிப்பொருளில் 15 கட்டுரை களை உள்ளடக்கி வெளிவந்தது. அதேபோல2012 இன் தேனகம், 'மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்' என்ற தொனிப்பொருளில் 12 கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவந்தது. கட்டுரைகளைத் தவிர ஏனைய ஆக்கங்கள் இவற்றில் இடம்பெறவில்லை. கனதியான கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த இவ்விரு இதழ்களும் ஆய்வுலகிற்கு அணி சேர்ப்பவை. 2013இல் தேனகம் வெளிவரவில்லை எனத் தெரிகின்றது. 2014இல் வெளிவந்த இதழும் 'மட்டக்களப்பின் மரபும் மாற்றமும்' என்ற தொனிப்பொருளிலானது. 2012 இதழின் தொடர்ச் சியாக இது அமைந்துள்ளது.

2015இன் தேனகம் முன்னர் குறிப் பிட்டதைப் போல கூத்துக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தது. அத்துடன் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட சிறுகதைப் பயிற்சிப் பட்டறையில் தெரிவு செய்யப்பட்ட கதைகளையும் விசேடமாக உள்ளடக்கி இளந்தலை முறையினரை எழுத்துத் துறையில் ஊக்குவிக்கும் வகையில் இவ்விதழ் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

தேனகத்தின் உள்ளடக்கம், அதன் பரப்பெல்லை, வாசகர் தேர்வு என்பவற்றைப் பொறுத்தவரை மண்முனை வடக்குப்பிரதேசத்தின் கலாசாரப் பேரவைக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டெனினும் தேனக ஆக்கங்களைத் 'தேடுவதிலும்' அவற்றைத் தொகுப்பதிலும் வெளியிடுவதிலும் பெரும்பங்கு வகிக்கின்ற வகையில் அப் பேரவையின் செயலாளராகச் செயற்படுவோருக்கு பெரும் பங்கு உண்டு. 'தேனகம்' இவர்களது தனித்துவமான ஆளுமைகளையும் இனங்காட்டியுள்ள வகையில் சிறப்பிற்குரியதாகின்றது. மா.உதயகுமார் (1993), வாசுகி அருள்ராஜ் (1993 -1998) ப. கலாமதி (1994 - 2001) ஆகியோரின் பங்களிப்பு கணிசமானது.

2002 தொடக்கம் 2015 வரையிலான தேனகம் தன் உள்ளடக்கப் பரப்பெல்லையை வித்தியாசமானதொரு தளத்தில் விரித்துக் கொண்டது. குறித்த பேரவையின் செயலாளர்களாக அவ்வப்போது கடமையாற்றிய கலாசார உத்தியோகத்தர்களின் 'ஆளுமை' தேனகத்தின் உள்ளடக்கங்கள் ஊடாக வெளிப்பட்டு அவ்விதழை இன்னுமொருபடி மேலாக கலை இலக்கியத் துறையில் தவிர்க்க முடியாத ஆய்வு களினதும் ஆக்கங்களினதும் பொக்கிஷமாக மாற்றியிருப்பதனை மறுக்க முடியாது. த. மலர்ச்செல்வன் (2002 - 2009), மு.சதாகரன் (2010 - 2014), தர்ப்பணா ஜெயமாறன் (2015) ஆகிய மூவரையும் விசேடமாகக் குறிப் பிடுவது புகழ்ந்துரையாகாது.

தேனகம் தொடர்ந்தும் சிறப்பாகப் பயணித்து இலங்கைத் தமிழ் இதழியல் வரலாற்றில் தடம் பதிக்க வாழ்த்துக்கள்.

# கலைஞர் கௌரவம்

பெயர் : திரு.தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

பிறந்த திகதி : 13.12.1950

துறை : ஆக்க இலக்கியம்

*கல்முனையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு பாலமீன்மடுவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஓய்வுபெற்ற உதவி நீர்ப்பாசன பொறியியலாளர். 1969இல் "நற்கவிதை வேண்டும்" என்ற தனது கன்னிக் கவிதையோடு இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தார். 'செங்கதிரோன்' என்ற புனைபெயரில் வீரகேசரி, தினகரன், தினக்குரல் போன்ற பத்திரிகைகளிலும், மல்லிகை, ஞானம், கலைமுகம், ஓலை, ஜீவநதி, செங்கதிர், விருந்து, அலைஓசை ஆகிய சஞ்சிகைகளிலும் இவரது படைப்புக்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

*1987இல் மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு "தமிழும் விஞ்ஞானமும்" என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். 1987இல் மலேசியாவில் தமிழ்நாட்டுக் கவிஞர் 'சுரதா' தலைமையில் உலகத் தமிழ் கவிஞர் பேரவை உருவாவதற்கு காரணமாயிருந்து, அதன் இலங்கைக் கிளை இணைப்பாளராகவும் செயற்பட்டார்.*

*கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்து அதன் பல பதவிநிலைகளில் கடமைபுரிந்தவராவார். உலக சிற்றிதழ்கள் சங்க மாநாட்டில் இவரால் வெளியிடப்பெற்ற 'செங்கதிர்' இதழிற்கு "அய்யன் திருவள்ளுவர் இலக்கியப் பேரவை விருதைப்" பெற்றார். இலங்கை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இலக்கிய அதிதியாகவும், லண்டன் 'தீபம்' தொலைக்காட்சியிலும் பேட்டி காணப்பட்டுள்ளார்.*

*நீர்ப்பாசன பயிலுநர் கலாசாலைத் தமிழ்க் கலாமன்றத்தினரால் வெளியிடப்பட்ட 'அருவி' சஞ்சிகைக்கும், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் மாதாந்த சஞ்சிகையான 'ஓலை', 'செங்கதிர்' என்பவற்றிற்கும் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவற்றை விட அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத்தின் இணைப்பாளராகவும், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா குழுவில் செயற்குழு அங்கத்தவராகவும், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராகவும், பைன் ஆர்ட்ஸ் கலைக் கழக ஆலோசகராகவும், உலக தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் இலங்கைக் கிளை பொருளாளராகவும், தேசிய கலை இலக்கிய பேரவையின் மட்டக்களப்பு பிராந்தியப் பொறுப்பாளராகவும், கண்ணகி கலை இலக்கியக்கூடலின் தலைவராகவும், கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் இலக்கியச் செயலாளராகவும், மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இவரால் 'தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள் (2016), 'விளைச்சல்' குறுங்காவியம் (2017) ஆகிய நூல்களை வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

# கலைஞர் கௌரவம்

பெயர் : திரு.சின்னத்தம்பி ரவீந்திரன்

பிறந்த திகதி : 17.06.1959

துறை : ஓவியம்

மட்டக்களப்பின் சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்திரன் அவர்கள் தனது சிறு பராயத்திலிருந்தே ஓவியம் வரைவதில் ஈடுபாடு கொண்டவர். இவரது தாய்மாமனாரான ஓவியர் குமார் என அனைவராலும் அழைக்கப்பட்ட திரு.கந்தையா அவர்கள் முறை சார்ந்த ஓவியப் பயற்சியை இந்தியாவில் பெற்று சிங்களத் திரைப்படங்களில் கலை இயக்குனராகப் பணியாற்றியவராவார். இதனாலேயே இவரது வாழ்விட சூழல் இத்துறையில் ஈடுபட இவருக்கு ஒரு ஊக்கியாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

ஓவியத் துறையில் டிப்ளோமாவைப் பெற்றுள்ளதுடன், அதே துறையில் விஷேட பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் தனது முறைசார்ந்த கல்வியை பூர்த்தி செய்துள்ளார். ஆரம்பத்தில் சித்திரப் பாட ஆசிரியராகப் பணியாற்றி, தற்போது மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் மட்டக்களப்பு கல்விக் கல்லூாரியில் சித்திரப் பாடத்திற்கான பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

1978ம் ஆண்டு மட்/ககு/ வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கண்காட்சியே இவர் பங்குபற்றிய முதலாவது கண்காட்சியாகும். இவற்றைவிட தனிப்பட மூன்று கண்காட்சிகளையும், மட்டக்களப்பு ஓவியர் சங்கத்துடன் இணைந்து 08 கண்காட்சிகளையும், வலயக் கல்வி அலுவலகத்தினூடாக எண்ணற்ற கண்காட்சிகளையும் நடாத்தியுள்ளார்.

மட்டக்களப்பு சயன்ஸ் நவிகேற்றர்ஸ்லால் (Batticaloa Science Navigators) உருவாக்கப்பட்ட "மட்டக்களப்பு ஓவியர்களின் ஒன்றிணைந்த வெளிப்பாட்டுத் தளம்" உருவாக்குவதில் முக்கிய பங்காளியாக இருந்துள்ளார். இவரது மாணவர்கள் பலர் இன்று ஓவியத்துறை சார்ந்த பல்கலைக்கழக பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர். ஆசிரியர் தொலைக்கல்வி பாடநெறியில் இவரின் கீழ் ஓவியப் பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட சித்திர ஆசிரியர்களாக உருவாகியுள்ளனர். 2000ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையால் ஓவியத் துறைக்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி 'கலாபாரதி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கு அட்டைப்பட வடிவமைப்பினை செய்துள்ளதுடன், பிரதிமை ஓவியங்களையும் வரைந்துள்ளார். இவரது ஓவிய பிரக்ஞை "மட்டக்களப்பு நகருக்குரிய மரபு சார்ந்த பாரம்பரிய வழக்காறுகளை நவீன பாணியில் ஓவியமாகப் படைத்தல்" ஆகும். கீழ்த்திசை மண் ஈன்றெடுத்த வைதீகக் கலப்பற்ற மரபு சார்ந்த சடங்குகளிலும், நம்பிக்கைகளிலும், அதனாலுருவான கலை, பண்பாட்டு வாழ்வியல் கோலங்களிலும் தீவிர பற்றுக்கொண்ட இவரது ஓவியப் படைப்புக்களில் கிழக்கின் தனித்துவமான மானுட விழுமியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

# கலைஞர் கௌரவம்

பெயர் : திருமதி. கிறிஸ்டீனா வசந்தி நேரு

பிறந்த திகதி : 19.11.1961

துறை : சாஸ்திரிய நடனம்

*நாட்டியத்துறை வளர்ச்சிக்காக பணியாற்றுபவர்களுள் இவரும் ஒருவர். மட்டக்களப்பைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் பாடசாலையில் நடன ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இவரது குரு திருமதி.கமலா ஞானதாஸ் ஆவார்.*

*இவர் தனது கலைப் பட்டப் படிப்பினை பேராதனை பல்கலைக் கழகத்திலும், கல்வி டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக் கழகத்திலும், வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தர "கலா வித்தகர்" பட்டத்தினையும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மூன்று ஆண்டுகள் வீரமணி ஐயாவிடம் பரத நாட்டியத்தில் விஷேட பயிற்சியினையும், பரத நாட்டிய டிப்ளோமாவினை திருச்சிராப்பள்ளி பாரதிதாஸன் பல்கலைக் கழகத்திலும், அதே பல்கலைக் கழகத்தில் நுண்கலைத் துறையில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளதுடன், உளவளத்துணை டிப்ளோமாவை தென் கிழக்கு பல்கலைக் கழகத்தில் பூர்த்தி செய்துள்ளார்.*

*இவர் 'நிருத்திய கலாலயம்' நாட்டியப் பள்ளியின் ஸ்தாபகராவார். இவரால் 30க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. தனது நாட்டிய பள்ளியான நிருத்திய கலாலயம் ஆரம்பித்து 29 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இரண்டு வருடங்களுக்கொருமுறை தனது நடனப் பள்ளியின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடன விழாக்களை முன்னெடுத்து நடாத்திவருகின்றார். மேலும் நுவரேலியா பிரதிஷ்குமார் நிறுவகத்தினரால் 2007ம் ஆண்டில் 'ஜெயாஞ்சலி விருதும்', மாத்தளை நிருத்தியாஞ்சலி நிறுவகத்தினராலும் (2014), ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத்தினாலும் (2012), மாமாங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினராலும் (2014 – 2016 வரை) நடனத் துறைக்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார். மேலும் 1998இல் "கலைக் கோயில்" நாட்டிய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட "நீ எதிர்கொண்டதேன்" என்ற நாட்டிய நாடகத்தைப் பயிற்றுவித்தமைக்காக பேராயர் அதி வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களால் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.*

*கடந்த 35 வருடங்களாக நடன ஆசிரியராகக் கடமையாற்றி இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தனது நடனக் கலையை கற்பித்துள்ளார். இவரது வழித்தோன்றலாக இருந்த பல மாணவர்கள் இன்று நடனத் துறை ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர் என்பது மட்டுமல்லாது, இவரால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களின் நடன ஆக்கங்கள் பல தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டி மற்றும் ஏனைய தேசிய மட்டப் போட்டிகளில் இடங்களைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.*

*மேலும் தேசிய கல்வி நிறுவகத்தில் க.பொ.த சாதாரண தர, உயர்தர பாடநூல் எழுத்தாளராகவும், தேசிய கல்விக் கல்லூரியில் 04 வருடங்கள் பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இதுவரை நடனத் துறை தொடர்பாக க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான வினாவிடை புத்தகம் ஒன்றினையும், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வினாவிடைப் புத்தகங்கள் இரண்டினையும் வெளியிட்டுள்ளார்.*

# கலைஞர் கௌரவம்

பெயர் :- திருமதி.பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன்

பிறந்த திகதி :- 16.02.1966

துறை :- இசை

திருமதி.பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன் அவர்கள் மட்டக்களப்பு கொம்மாதுறை கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டாலும், தற்போது நாவற்குடாவில் வசித்து வருகின்றார். 1985இல் யாழ்ப்பாண பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் நான்காண்டு டிப்ளோமா (வாய்ப்பாடு) கற்கைக்காக இணைந்துகொண்டார். அங்கு நல்லை ஆதீனம், மும்மூர்த்திகள் விழாக்களில் இசைக் கச்சேரிகளில் பாடினார். அக்காலத்திலே இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன B–Grade கலைஞராகத் தெரிவு செய்யப்பட்டு கச்சேரிகள் நிகழ்த்தினார்.

1992இல் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் இசை ஆசிரியராக பணியேற்றதுடன், 2005இல் கிழக்குப் பல்கலைக் கழகம் பொறுப்பேற்ற போது விரிவுரையாளராகப் பதவியேற்றார். 2006இல் இசைத்துறைக்கான முதலாவது இணைப்பாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டு, தொடர்ந்து ஆறு வருடங்கள் இசைத்துறை இணைப்பாளராகப் பதவி வகித்தார்.

ஏறத்தாழ எழுபதிற்கும் மேற்பட்ட நாட்டிய நிகழ்ச்சிகளில் பாடிய அனுபவத்தைப் பெற்றவர். முப்பதிற்கும் மேற்பட்ட நடன அரங்கேற்றங்களுக்கு பாடியுள்ளார். கொழும்பு கம்பன் விழாவில் 2004, 2008இல் தனிக் கச்சேரி நிகழ்த்தியுள்ளார். காத்தவராயன் கூத்தினை நாட்டிய நாடகமாக எழுதி இசையமைத்து பாடியுள்ளார். இவர் இசையமைத்துப் பாடிய நாட்டிய நாடகங்களாக சர்வமத சங்கமம், விவேகானந்த சரிதம், காத்தவராயன், சீதா கல்யாணம், அசோகனின் மாட்சி, தசாவதாரம், தாவீது சரிதம், அன்னைசாரதை, அருணகிரிநாதர், ஒளி பிறக்கிறது போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் திரு.ஸ்ரான்லி பிரபாகரன் அவர்களது மேடை நாடகங்களுக்கும், வானொலி ஒலிச் சித்தரங்களுக்கும் பல கிறிஸ்தவ பாடல்களை இசையமைத்துப் பாடியுள்ளார். மலரும் பொழுது, அக்கினிக் குஞ்சு (தனிநாயகம் அடிகளார் பாடல்) இறுவட்டுக்களில் பாடியுள்ளார். வருடா வருடம் நடனத் துறை மாணவர்களின் அரங்க ஆற்றுகை பரீட்சைக்கு பாடி வருகின்றார். தனிக் கச்சேரிகளை கொழும்பு தமிழ்ச் சங்கம், கம்பன் விழா, இலக்கிய விழா, முத்தமிழ் விழா, சாகித்திய விழா, சர்வதேச இசை விழாக்கள் உட்பட பல மேடைகளில் நிகழ்த்தியுள்ளார். கொழும்பிலுள்ள "Music matters" எனும் மேற்கத்தேய இசைப் பள்ளியின் இயக்குனர் கலாநிதி சுமுது சுரவீரவுடன் இணைந்து பாரம்பரிய நாட்டார் இசைப் பாடல்களை மேற்கத்தேய வாத்தியங்களுடன் காலி இசைத் திருவிழாவிலும், கொழும்பு "Bear wood" கலா நிலையத்திலும் நிகழ்த்தியிருக்கின்றார். 2007ம்ஆண்டு ஐரோப்பாவில் I.I.T.A நிறுவனத்தின் அழைப்பின் பேரில் ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற இசைப் பரீட்சைக்கு பரீட்சகராகக் கடமையாற்றியுள்ளார். உலக வங்கியால் திட்டமிடப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கான IRQUE திட்டத்தின் அனுசரணையுடன் இந்தியா சென்று இளைப்பாறிய சென்னைப் பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.இராமநாதன், முனைவர் ரித்தா ராஜன் என்பவர்களிடம் இசையில் மேலதிக பயிற்சிகளைப் பெற்றுள்ளார்.

வட இலங்கை சங்கீத சபையின் "சங்கீத கலா வித்தகர்" பட்டத்தையும், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நுண்கலைமாணிப் பட்டத்தையும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறையில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். தற்போது அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இசைத்துறையில் கலாநிதி பட்டப்படிப்பினையும் மேற்கொண்டு வருகின்றார். இவர் இசைத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக ஜப்பானிய இலங்கை கலாசார நிதியத்தினால் "Bunka – 2010" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கலைஞர் கௌரவம்

பெயர் : திரு.கணேசமூர்த்தி பிறேம்குமார்
பிறந்த திகதி : 12.08.1978
துறை : தோல் வாத்தியம் (தவில்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கணேசமூர்த்தி பிறேம்குமார் அவர்களது பரம்பரையே மங்கல வாத்தியம் வாசிப்பதில் விற்பன்னர்கள். இவரது தந்தை திரு கந்தசாமி கணேசமூர்த்தி அவர்கள் ஒரு சிறந்த நாதஸ்வர கலைஞராகத் திகழ்ந்தவர். பிறேம்குமார் அவர்கள் இக்கலையை தவில் கலைஞர் மன்னார்குடி வாசுதேவனிடம் குருகுலமாக இருந்து கற்றுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறுகின்ற பெரும்பாலான விஷேட நிகழ்வுகளில் இவரது குழுவே மங்கள வாத்திய இசையை வழங்கிவருகின்றது. இவரது திறமையைப் பாராட்டி பல இடங்களில் பாராட்டுக்களும், பட்டங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆரையம்பதி செங்குந்தர் வீதி அருள்மிகு திருநீலகண்ட தேவஸ்தானத்தினரால் 2008 இல் "லய ஞான சுடர்" பட்டம் வழங்கியும், மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு ஸ்ரீ வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தினரால் 2009 இல் "லய ஞான இளவரசு" என்ற பட்டம் வழங்கியும், மட்டக்களப்பு ஜெயந்திபுரம் அருள்மிகு ஸ்ரீ குமாரத்தன் ஆலய பரிபாலன சபையினரால் 2010 இல் " லய ஞான மணி" பட்டம் வழங்கியும், கல்முனையிலுள்ள ஸ்ரீ சந்தான ஈஸ்வரர் ஆலயத்தினரால் 2013 இல் "தவில் வித்துவான்" பட்டம் வழங்கியும், அதே ஆண்டில் கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை அருள்மிகு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தினரால் "தவில் ஞானமணி" பட்டம் வழங்கியும், 2014 இல் கல்முனை அருள்மிகு கௌரி அம்பிகை உடனுறை ஸ்ரீ சந்தான ஈஸ்வரர் தேவஸ்தானத்தினரால் "லய ஞான பானு" என்ற பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவற்றை விட கல்முனை ஆதார வைத்தியசாலை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தினராலும் (2015), மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தினராலும் (2015), மட்டக்களப்பு நாவற்குடா நொச்சிமுனை அருள்மிகு ஸ்ரீ கண்காணிப் பிள்ளையார் ஆலயத்தினராலும் (2017), ஸ்ரீ சிங்காரபுர மாரியம்மன் ஆலயத்தினராலும் (2016), மட்டக்களப்பு மகிழவட்டவான் அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தினராலும் (2011), மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தினராலும் (2017) பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 66வது சுதந்திர தின நிகழ்விலும் மங்கல வாத்தியம் இசைத்ததற்காக பாராட்டப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு கீதமான "உயிரின் வாசம்" பாடலிலும் தவில் வாசித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழ் விழா – 2017 ஓவியப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்றது

**பாஸ்கரன் டிலக்ஷிகா** (மட்/விவேகானந்தா மகளிர் கல்லூரி)



முத்தமிழ் விழாச் சிறப்பு மலர் - 2016-2017

கலாசாரப் பேரவை - பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு